


# ராதையும் குந்திதேவியும்

**எண்டமூரி வீரேந்திரநாத்**

தமிழில்: கௌரி கிருபானந்தன்

உரிமைப் பதிப்பு
முதற் பதிப்பு : 2009

© ஆசிரியருக்கு

விலை : ரூ. 75.00

அல்லயன்ஸ்
கம்பெனி
ப.எண். 244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால்பெட்டி எண்: 617
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி : 24641314
இணைய தளம் : www.alliancebook.com
தொலை நகல் : Srinivasan@alliancebook.com

Laser Typeset by - Image Digital, Chennai - 17
Printed at - Kay em Packaging Industries, Chennai - 5

## ராதையும் குந்தி தேவியும்

டிசம்பர் மாதம் இருபத்தி இரண்டாம் தேதி மாலை நாலரை மணிக்கு மூன்று வேறு வேறு இடங்களில் மூன்று வேறு வேறு நிகழ்வுகள் நடந்தன.

ஒன்று ராதையின் வீட்டில்.

மற்றொன்று அகில இந்திய வானொலி நிலையத்தின் இயக்குனர் பார்த்தசாரதியின் அலுவலகத்தில்.

மூன்றாவது 'மாடிஸம்' நிறுவனத்தின் பதிவு செய்யப்படாத அலுவலகத்தில்.

மேலோட்டமாக பார்த்தால் இந்த மூன்று விஷயங்களுக்கும் சம்பந்தம் இல்லை.

பதிப்பகத்தார்

இதை பதிப்புரை என்று சொல்வதை விட, ஒரு வாசகனின் உரை என்று சொன்னால், பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

எண்டமூரியின் பல புத்தகங்களுக்கு பதிப்புரை எழுதும் போது அவருடைய அறிவு விசாலத்தை எண்ணி வியந்து பாராட்டியிருக்கிறேன். ஒரு சாதாரண ஆசாமி வானொலி நிலையத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய அளவிற்கு தகவல்களை மிக மிக அற்புதமாகக் கொடுத்திருக்கிறேன்.

ஜெயா, ராதை என்ற இரண்டு கதாபாத்திரங்களின் மூலம், காமத்திற்கும், காதலுக்கும் விளக்கம் தேடப் புறப்பட்டிருக்கிறார்.

பார்த்தசாரதி, கிருஷ்ணன் என்ற கதாபாத்திரங்களின் மூலம், உடலுறவிற்கும், திருமணத்திற்கும் உள்ள வேறுபாட்டை விளக்க முயன்றிருக்கிறார்.

கிழவன், பரசுராமன் என்ற இரண்டு கதாபாத்திரங்களின் மூலம் சமூகத்திலுள்ள நல்லவர்களையும், கெட்டவர்களையும் படம் போட்டுக் காட்டியிருக்கிறார்.

சுமார் 160 பக்கங்களுக்கும் இவ்வளவும் விஷயங்களை அலசியிருக்கும் எண்டமூரி வீரேந்திரநாத் ஒரு மேதாவி தானே.

தொடர்ந்து எண்டமூரி வீரேந்திரநாத் நூல்களைத் தமிழில் எழுதி வரும் கௌரி கிருபானந்தன் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

அலையன்ஸ் ஸ்ரீநிவாஸன்

# 1

"இதோ பாரும்மா! என் பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கு. இப்பொழுதே ஆறுமாத வாடகை பாக்கி. இனியும் சும்மாயிருக்க முடியாது. இவ்வளவு நாள் ஆண் துணை இல்லாதவங்களாச்சே என்று தயங்கினேன். நாளை மாலைக்குள் வீட்டைக் காலி செய்யாவிட்டால் நானே உங்கள் தட்டுமுட்டு சாமான்களை வெளியே தூக்கி எறிய வேண்டியிருக்கும்" என்று எழுந்து கொண்டார்.

ராதை அவரை இயலாமையுடன் பார்த்தாள். உள்ளே கதவு மறைவில் நின்று கொண்டிருந்த ராதையின் பாட்டி ஓரடி முன்வைத்து ஏதோ சொல்லப் போனாள். அவர் காதில் போட்டுக் கொள்ளாமல் திரும்பிப் போக முயன்று கொண்டே "புரிந்ததா? நாளைக்குத்தான் கடைசி நாள்" என்று சொல்லிவிட்டு விடுவிடென்று போய்விட்டார்.

ராதை அவர் போன திசையையே பார்த்தபடி நின்று விட்டாள். அறையில் மெதுவாக இருள் பரவிக் கொண்டிருந்தது. மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டு நான்கு மாதங்களாகி விட்டன. கிரோசின் தீர்ந்து போய் இரண்டு நாட்களாகியிருந்தன.

ராதை மெதுவாகத் திரும்பினாள். பாட்டி கதவிற்கு அருகில் இன்னும் அப்படியே நின்று கொண்டிருந்தாள். இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன.

ராதை வலுக்கட்டாயமாக சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, "பாட்டீ! இன்னிக்கு ராகுகாலம் எப்போ?" என்று கேட்டாள்.

பாட்டியும் முறுவலித்தாள். "இன்று மட்டும்தானா? உங்க தாத்தா போனது முதல் ராகுகாலம்தான். இனி உங்க அப்பா இறந்த பிறகு எல்லாமே யமகண்டம்தான்."

கஷ்டங்கள் வரும் போது முறுவலுடன் தாங்கிக் கொள்வது ராதையின் பழக்கம். கிண்டலடித்தபடி பேசுவது பாட்டியின் பழக்கம். கஷ்டங்களை முறுவலுடன் சமாளிப்பதற்கு அவ்விருவரும் பத்து வருடங்களுக்கு முன்பே பழகிக் கொண்டார்கள்.

"நான் கொஞ்சம் நேரம் வெளியே போயிட்டு வரேன் பாட்டீ" என்றாள் ராதை.

"இருட்டிக் கொண்டு வருகிறது. சீக்கிரமாக வந்து விடு."

உள்ளே இருந்த இருட்டைவிட வெளியே இருக்கும் இருட்டு பரவாயில்லை. ராதை வெளியே வந்தாள். ஊர்க் கோடியாக இருந்ததால் வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்தன. மைதானத்திற்கு நடுவில் டிரங்க் ரோடு கருப்பாக பாம்புபோல் இருந்தது. ராதை அந்தப் பக்கமாக போகாமல் வலது பக்கமாக நடந்தாள். நூறடி தொலைவு நடந்தால் ஏரி. ஆங்காங்கே பெரிய பாறாங்



கற்கள். ஒரு கல்லின் மீது உட்கார்ந்து கொண்டாள் ராதை.

சூரியன் மேற்குப் பக்கமாக சரிந்து கொண்டிருந்தான். குளிர் நாளாக இருந்ததால் இருட்டு வருவதற்குள்ளாகவே பனிமூட்டம் சூழ்ந்து கொள்ளத் தொடங்கி விட்டது. தொலைவில் டிரங்க் ரோட்டில் போலீஸ் வேன் ஒன்று ஏரிக் கரைக்கு அந்தப் பக்கமாக சத்தம் போட்டுக் கொண்டே போயிற்று. அப்பொழுதுதான் ராதைக்கு நினைவு வந்தது. பிரதமர் அந்த சாலையின் வழியாக அடுத்த நாள் போகப் போகிறார் என்று.

நாளைக்குத்தான் தமிழ்நாட்டில் இன்னொரு வானொலி நிலையத்தின் திறப்பு விழா. அதற்காகத்தான் பிரதமர் வருகிறார். மறுநாள் நடக்கப் போகும் இண்டர்வ்யூவில் இந்த விஷயத்தை பற்றி கேள்வி கேட்பார்கள் என்று ராதை நம்பினாள். அதுவும், இண்டர்வ்யூவுக்குப் போய்க் கொண்டிருப்பதுகூட வானொலி நிலையத்திற்குதான்.

வேலை கிடைக்கும் என்று அவளுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. ஆனாலும் போகாமல் இருக்க முடியாது.

ஏரியிலிருந்து குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. தொலைவில் எருமை மாடு ஒன்று எந்த கவலையுமின்றி நிம்மதியாக புல்லை மேய்ந்து கொண்டிருந்தது. பூமியும் வானமும் சந்திக்கும் இடத்திலிருந்து சந்தியா வெளிச்சம் மெல்ல மெல்ல மங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று அவளுக்கு ஒரு யோசனை வந்தது.

தற்கொலை செய்து கொண்டுவிட்டால்?

ஊஹூம். அதனால் பிரச்னைகள் தீர்ந்து விடாது. வீட்டுக் காரருக்கு தொல்லைக் கொடுப்பதற்காக வேண்டு மானால் தற்கொலை செய்து கொள்ளலாம். நட்சத்திரம் சரியாக இல்லாத நாளாக பார்த்து பண்ணிக்கொண்டால் வீட்டை நான்கைந்து மாதங்களுக்கு பூட்டி வைக்க வேண்டி வரும். அப்பொழுதுதான் தன்னுடைய ஆத்திரம் அடங்கும்.

அதற்குள் அவளுக்கு வீட்டுக்காரரர் மீது இரக்கம் ஏற்பட்டது. அவர் மட்டும் என்ன செய்வார்? ஆறு மாத வாடகை பாக்கி! இத்தனை நாள் தங்கியிருக்க விட்ட தற்காக சந்தோஷப்பட்டுக் கொள்ளணும். அவளுக்குச் சிரிப்பு வந்தது.

உடனே திடீரென்று துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. தனிமை எவ்வளவு பயங்கரமானதோ யாருக்கும் தெரியாது. உண்மையில் தனிமையைக் காட்டிலும் வேதனை தரக்கூடியது மனிதனுக்கு வேறு இல்லை. இருளும் வெளிச்சமும் கலந்த சூழலில் ஆளரவமற்ற அந்த மைதானத்தில் அவள் அழுது கொண்டே ரொம்ப நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். பாட்டி என்ற பந்தம் மட்டும் இல்லாமல் இருந்தால் இந்த நிமிடமே ஏரியில் குதித்து உயிரை மாய்த்துக் கொண்டு இறந்திருப்பாள்.

கொஞ்ச நேரத்தில் அவள் தேறிக்கொண்டு விட்டாள். ஆனால் இடத்தை விட்டு அசையாமல் முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு காலடியில் இருந்த நீரையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.



அப்பொழுதுதான் கேட்டது 'தொபீர்' என்ற சத்தம். யாரோ ஏரியில் விழுந்து விட்டாற் போன்ற சத்தம்.

அவள் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். எங்கும் ஆளரவமில்லாமல் இருந்தது. தொலைவில் மிலிடரி வேன் போய்க் கொண்டிருந்தது. அவள் தண்ணீரின் பக்கம் பார்த்தாள். உள்ளேயிருந்து காற்றுக் குமிழ்கள் வந்து கொண்டிருந்தன. அதற்குள் கை ஒன்று தண்ணீருக்கு மேலே வந்து பிடிமானம் எதுவும் கிடைக்காததால் மறுபடியும் உள்ளே போய்விட்டது. அவளுக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. எங்கும் ஆள் நடமாட்டமே தென் படவில்லை. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு உதவிக்கு யாரும் வரமாட்டார்கள் என்று தெரிந்து கொண்டாள்.

அதற்குள் தண்ணீரின் மேலே தலை ஒன்று வெளியே வந்தது. வாயிலிருந்து நீர் வெளியே வந்து கொண்டிருப்பது தென்பட்டது. மறுபடியும் தலை நீருக்குள் மூழ்கிவிட்டது. அதற்குப் பிறகு இரண்டு கைகள் உயரே வந்து ஏதாவது பற்றுகோல் கிடைக்குமா என்பது போல் தேடிவிட்டு திரும்பவும் மூழ்கிவிட்டது.

ராதை ஏரியைச் சுற்றும் முற்றும் பார்த்தாள். ஏரிக்கு அந்தப் பக்கம் வயல்கள். இரண்டுக்கும் நடுவில் சாலை. சிறிய பாலம். எங்கும் மனித சஞ்சாரம் இல்லை.

அவள் பார்வை ஏரியின் பாலத்தில் இருந்த மூங்கில் கழிகள் மேல்பட்டது. ஒரே ஓட்டமாக அங்கே போய்ச் சேர்ந்தாள். சேற்றில் சறுக்கி விழப்போனவள் எப்படியோ சமாளித்துக் கொண்டாள். மூங்கில் கழியைப் பற்றி இழுக்கப் போனாள். ஒன்றோடு ஒன்று இணைந்துக்

கட்டப்பட்டு இருந்ததாலோ என்னவோ கழியை பிடுங்க முடியவில்லை. அவள் இயலாமையுடன் பார்த்தாள். ஏரியில் சந்தடியே இல்லை. அவளுக்குப் பயமாக இருந்தது. பதற்றத்தில் கண்களில் நீர் சுழன்றது. மறுபடியும் தான் முன்னாடி இருந்த இடத்திற்கே ஓடி வந்தாள்.

கவனமாக பார்த்தபோது, காற்றுக் குமிழ்கள் புளுக் புளுக்கென்று சத்தமிட்டுக் கொண்டே மேலே வருவது தென்பட்டது. உள்ளே இருந்த நபர் இன்னும் மூழ்கிப் போய் விடவில்லை என்று புரிந்தது. புடவையை கயிறாக பயன்படுத்தி அந்த நபரை வெளியே இழுக்கலாமா என்று யோசித்தாள். ஆனால் தன்னிடம் இருப்பது ஒரு புடவை தான் என்றும், அதுவும் வாங்கி இரண்டு வருஷமாகி விட்டது என்றும், ஒருக்கால் தான் புடவையை நீட்டினாலும் அது கிழிந்து பாதி தன் கையிலும் மறுபாதி தண்ணீரிலும் போய்விடக் கூடும் என்று பயந்தாள்.

அந்த ஏரியில் எந்த இடத்திலும் நாலடிக்கு மேல் தண்ணீர் இல்லை என்று அவளுக்கு உறுதியாகத் தெரியும். ஆனாலும் ஏரியில் விழுந்தவன் மூழ்கிக் கொண்டிருந்தான் என்றால் அவன் நிச்சயமாக குள்ளமானவனாகவும் நாலரை அடி உயரமானவனாகவும் இருந்திருக்க வேண்டும்.

'அப்படிப்பட்டவனுக்காக புடவையை அவிழ்ப்பது அனாவசியம்' என்று சொல்லக்கூடும் ஜெயா மட்டும் தன்னுடைய இடத்தில் இருந்திருந்தால்!

ஜெயா தன்னுடைய இடத்தில் இருந்தால் என்ன செய்திருப்பாள் என்று யோசிப்பதற்கு இது நேரம் இல்லை. ஏரியில் விழுந்தவன் கால்களையும், கைகளையும் உதைத்துக் கொண்டு இருந்தான்.



அவள் மேற்கொண்டு யோசிக்காமல் தண்ணீருக்குள் குதித்தாள். அரை நிமிஷத்தில் கோட்டு கைக்கு அகப்பட்டது. அதைப் பிடித்துக்கொண்டு இழுத்த போது உடம்பும் வெளியே வந்தது.

அவள் நினைத்தது சரிதான். அவன் குள்ளமானவன் தான். நாவலில் வரும் கதாநாயகன் அல்ல. அறுபது வயது கிழவன்.

அரும்பாடுபட்டு அவனை வெளியே இழுத்து கரையில் சேர்த்தாள். கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் ஆள் நடமாட்டம் இருக்கவில்லை. அவனை மல்லாக்காக படுக்க வைத்து வயிற்றை அமுக்க வேண்டுமா, குப்புறப் படுக்க வைத்து முதுகை அழுத்த வேண்டுமா என்று ஆறாவது வகுப்பிலோ ஏழாவது வகுப்பிலோ படித்த ஞாபகம். சரியாக நினைவுக்கு வராமல் நெற்றியில் தட்டிக் கொண்டாள்.

ஆனால் அவளுக்கு மேற்கொண்டு சிரமம் தராமல் அந்தக் கிழவன் கண்களைத் திறந்து விட்டான்.

"யார் நீ? ரம்பையா? ஊர்வசியா?"

"தாத்தா! என் பெயர் ராதை."

"அப்படி என்றால் இது துவாபரயுகம் என்று சொல்லு" என்று முழங்கைகளை ஊன்றிக் கொண்டு எழுந்தான் சுவர்க்கத்திற்குப் "போகாமல் கிருஷ்ண சாம்ராஜியத்திற்கு வந்து விட்டேன் போலிருக்கு" என்றான்.

அப்பொழுதுதான் ராதைக்கு ஜோக் புரிந்தது. கோபம் பற்றிக் கொண்டு வந்தது. தனியாக இருக்கும் வயசுப் பெண்ணை பார்த்தால் கிழவனுக்குக் கூட ஜோக் அடிக்க

வேண்டும் என்று தோன்றிவிடும் போலும்! கிருஷ்ண சாம்ராஜியமாம்— கிருஷ்ண சாம்ராஜியம்!

"அய்யா வசுதேவரே! உங்கள் உடம்பு சௌக்கியம் தானே?" என்று கேட்டாள் பணிவோடு.

"உன் காலைப் பிடித்தாலும் குறைவுதான். என் உயிரைக் காப்பாற்றினாய்" என்றான் கிழவன் அதே பணிவோடு.

ராதையின் கண்கள் ரோஷத்தால் சிவந்தன. அப்படியும் கிழவனின் வாக்கு சாதுரியத்தைக் கண்டு மனதிலேயே பாராட்டினாள்.

அதற்குள் அந்தக் கிழவன் கோட்டைக் கழட்டி நீரை பிழியத் தொடங்கினான். அந்தக் கோட்டு ஹைதர் அலி காலத்தைச் சேர்ந்தது போல் தென்பட்டது.

ராதைக்கும் தன்னுடைய புடவை நன்றாக நனைந்து போய் விட்டதென்று நினைவுக்கு வந்தது. அங்கங்கே சேறு கூட ஒட்டிக்கொண்டிருந்தது. மறுநாள் இண்டர்வ்யூ விஷயம் நினைவுக்கு வந்ததும் வருத்தம் ஏற்பட்டது. வெறும் தண்ணீரில் அலசினால் இந்தக் கறை போகுமோ போகாதோ தெரியாது. ஆனால் வீட்டில் துணி தோய்க்கும் சோப்பு இல்லை என்று மட்டும் நிச்சயமாகத் தெரியும்.

"என்னம்மா யோசிக்கிறாய்?"

அவள் வெறுமையாக சிரித்துவிட்டு, "ஒன்றுமில்லை தாத்தா" என்றாள்.

"உன்னுடைய புடவை?" என்றான் அவன்.



"பரவாயில்லை. அரைமணியில் காய்ந்துவிடும். எங்கள் வீடு கூட தொலைவில் இல்லை. அதோ தென்படுகிறதே, அந்த வீடுதான்."

"அதற்குள் ஜலதோஷமும் பிடித்துக்கொண்டு விடும்" என்று ஏதோ சொல்லப் போனவன் ,ள திரும்பவும் என்ன நினைத்துக் கொண்டானோ தெரியவில்லை. "அப்படி என்றால் சரி" என்று எழுந்து கொண்டான். "என்னைக் காப்பாற்றியதற்கு உனக்கு என்ன உதவி வேண்டுமோ கேளு பெண்ணே" என்றான்.

ராதைக்கு ஒரு வினாடி ஒன்றும் புரியவில்லை. குழப்பத்துடன் அவனையே பார்த்தாள். எண்ணெய் பசைக் கண்டிராத கேசங்கள், தாறுமாறாக வளர்ந்த மீசை, பழைய கேட்டுக்கு வெளியே தென்பட்டுக் கொண்டிருந்த காலரின் கிழிசல், ஒட்டுப் போட்ட பேண்ட். குடுகுடுப் பாண்டி போல் தோற்றமளிக்கும் இந்தக் கிழவன் தனக்கு உதவி செய்வதாகச் சொல்கிறான். அவளுக்குச் சிரிப்பு வந்தது. அதை வெளியே காட்டிக்கொள்ளாமல், "உங்களால் எனக்கு எந்த உதவி செய்யமுடியும் குசேலரே?" என்று கேட்டாள்.

"சிங்கம் சுண்டெலி கதை நினைவு இல்லையா!"

"நல்ல வேளை. இளவரசியும் ஏழு குள்ளர்களும் என்ற கதையை நினைவுபடுத்திக் கொள் என்று சொல்லாமல் விட்டீங்களே?" என்று சொல்லிவிட்டு, உடனே நொந்து கொண்டாள், ஏன் அவ்வாறு சொன் னோம் என்று.

ஆனால் அவன் அதை முறுவலுடனே ஏற்றுக் கொண்டான். ஒரு முறை தன் உருவத்தை பார்த்துக்

கொண்டு நிமிர்ந்து அவள் பக்கம் பார்த்தவன், "நீ எப்படி நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை. சொல்லு, என்னால் உனக்கு என்ன உதவி செய்ய முடியும்?" என்று கேட்டான்.

"என்ன செய்ய முடியும் உங்களால்? ஐ மீன்... அதாவது நீங்கள் யார்?"

"டி.எஸ். என்ற நிறுவனத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாயா? அதன் பிரசிடெண்ட் நான்."

"டி.எஸ்.ஸா? அப்படி என்றால்?"

"டிரபுள் ஷூட்டர்ஸ்."

அவளுக்குப் புரியவில்லை. "பூனை என்றால் மார் ஜாலம் என்று சமஸ்கிருதத்தில் விளக்கம் சொல்வது போலிருக்கு" என்றாள்.

"டிரபுள் ஷூட்டர்ஸ் என்றால் கஷ்டங்களை நிவர்த்தி செய்பவர்கள் என்று அர்த்தம். இதையே தமிழில் சொல்ல ணும் என்றால் அ. ஆ. அ. இ என்று சொல்லலாம். அதாவது அனாதைகளை, ஆபத்தில் இருப்பவர்களை அப்பால் இழுக்கும் சங்கம் என்று அர்த்தம். உங்கள் வீட்டில் வேலைக்காரி தொல்லை கொடுத்தாலும், சமையல்காரன் வேலை நிறுத்தம் செய்தாலும், உங்கள் வீட்டிற்கு முன்னால் தெருவிளக்கு ஆறு மாதங்களாக எரியாமல் இருந்தாலும், உங்கள் மேலதிகாரி இரவு பத்து மணி வரையிலும் வேலை வேலை என்று கசக்கிப் பிழிந்தா லும், உங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பிரமோஷன் 'தவிர்க்க' முடியாத காரணத்தால் கிடைக்



காமல் போனாலும், உங்களுக்கு எம்.எல்.ஏ. பதவி கிடைக்க வேண்டும் என்றாலும், இந்திய நாட்டுத் தூதராய் நீங்கள் அமெரிக்காவில் செட்டில் ஆகவேண்டும் என்றாலும், உங்களுக்குக் கல்யாணம் ஆகவேண்டி ருக்மிணி கல்யாணப் பாராயண புத்தகம் கிடைக்கவில்லை என்றாலும், உங்கள் கைக்குழந்தைக்கு தர்மாஸ்பத்திரியில் மருந்து சரியாக கொடுக்காமல் போனாலும், எந்தப் பிரச்னையாக இருந்தாலும் சரி. அது சமூக விஷயமாக இருந்தாலும், அரசியலாக இருந்தாலும், பொருளாதார விஷயமாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும் உங்கள் பிரச்னை களுக்காக தொடர்பு கொள்ளுங்கள் டிரபுள் ஷூட்டர்ஸ்! மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு காணவேண்டும் என்றால் அணுகுங்கள் டிரபுள் ஷூட்டர்ஸ்! டிங்.. டாங்க்" என்று விளம்பர பாணியில் மளமளவென்று சொல்லிக் கொண்டே போன வன் சட்டென்று நிறுத்திவிட்டு, "சாரியம்மா! உனக்காக இருந்தால் கட்டணம் தேவையில்லை. டி.எஸ். பிரசிடெண் டின் உயிரைக் காப்பாற்றியதற்காக உனக்கு இலவச சேவை தருவதற்கு உத்திரவாதம் தருகிறோம்" என்றான்.

அவள் சிரிப்பை அடக்கிக் கொண்டே, "உங்கள் ஆபீஸை நான் எங்கேயும் பார்த்தது இல்லையே?" என்றாள்.

"அ. ஆ. அ. இ நிறுவனத்திற்கு ஆபீஸ் எதுவும் கிடை யாது. எங்கே கஷ்டங்கள் இருக்குமோ அது அங்கே இருக் கும்."

அவளுக்கு இதெல்லாம் ஏதோ மாயாஜால கதை போல் தோன்றியது. இருந்தாலும் அதைப் பற்றி பொருட் படுத்தாமல் "போய் வருகிறேன் தாத்தா" என்றாள்.

"உதவி எதுவும் கேட்காமலேயே போகிறாயே?"

அவளுக்கு சற்று முன்னால் தம்மிருவருக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் நினைவுக்கு வந்தது. சிரிப்பை அடக்கிக் கொண்டே, "உங்களால் பிரச்னையை தடுத்து நிறுத்தி விடத்தான் முடியுமா? அல்லது நிவர்த்தி பண்ணி விடத்தான் முடியுமா சுவாமீ?' என்றாள் அப்பாவியைப் போல் முகத்தை வைத்துக் கொண்டே.

"தடுத்து நிறுத்திவிட முடியாதே தவிர நிவர்த்தி பண்ணிவிடமுடியும். அப்படி நிவர்த்தி பண்ணுவதற்காக மனிதர்களை ஆட்டிப் படைக்கவும் என்னால் முடியும்."

"பி.ஏ. செகண்ட் கிளாஸில் பாசாகி இருக்கிறேன். ஏதாவது வேலை பார்த்துத் தாருங்கள் மகா தேவா!" என்றாள்.

பார்வதி பரமேஸ்வரன் ஆகாய மார்க்கமாய் சுற்றிக் கொண்டே பக்தர்களின் கஷ்டங்களைப் பார்த்துவிட்டு மனித உருவில் வந்து, "உனக்கு வந்த கஷ்டம் என்ன?" என்று கேட்கலாம். எப்போதோ சிறுவயதில் அம்புலி மாமாவில் கதை படித்திருக்கிறாள். அது மட்டும் உண்மையாக இருந்தால்தான் மகாதேவா என்று சொன்னதுமே மாறுவேடத்தில் இருக்கும் பரமேஸ்வரன் திடுக்கிட்டுப் போகக்கூடும் என்று எதிர்பார்த்தாள்.

ஆனால் டி.எஸ். பிரசிடென்ட் என்று சொல்லிக் கொள்ளும் இந்தக் கிழவன் திடுக்கிடாமல் போனதோடு மேலும் சிரித்துக்கொண்டே, "எந்த ஆபீசில் வேலை வேண்டும் உனக்கு?" என்று கேட்டான். நாட்டில் உள்ள



எல்லா ஆபீசுகளுமே தன்னுடையவைதான் என்பது போல்.

"பிரசிடென்ட் ஆஃப் இண்டியா ஆபீசில் வேண்டும் சுவாமீ" என்றாள் பணிவுடன். முகத்தில் பக்தி குறும்புத் தனத்தோடு கலந்து பிரதிபலிக்க உதட்டை அழுத்தி சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"சரி! அதற்கென்ன வந்தது? ததாஸ்து!"

இந்த முறை அவளால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. புடவைத் தலைப்பால் வாயை பொத்திக் கொள்ள நினைத்தாள். ஆனால் அது நன்றாக நனைந்து விட்டிருந்தது. அதோடு சேறு அங்கங்கே ஒட்டிக் கொண்டிருந்தது.

"நாளைக்குத்தான் இண்டர்வ்யூ தாத்தா! பிரசிடெண்ட் ஆஃப் இண்டியா ஆபீசில். ஐ மீன்– அதாவது வானொலி நிலையத்தில்."

"இனி அதைப் பற்றி நீ யோசிக்க வேண்டியதில்லை அம்மா!"

"அப்போ நான் போய் வரட்டுமா தாத்தா!" ஈரமாக இருந்த புடவையைப் பார்த்துக் கொண்டே சொன்னாள் அவள்.

புடவையில் படிந்திருந்த சேற்றைப் பார்த்துக் கொண்டே கிழவன் சொன்னான். "அனாவசியமாக தண்ணீரில் குதித்தாய். அவ்வளவு மூங்கில் கழிகள் இருக்கே ஒன்றை பிடுங்கி நீட்டியிருந்தால் போதுமே?"

தண்ணீரிலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருந்த கழிகளைப் பார்த்துக் கொண்டே, "அதுவா? அதெல்லாம் இரும்புக் குழாய் போல் இருக்கு. எவ்வளவு இழுத்தாலும் வரவில்லை" என்றாள்.

அவன் திடுக்கிட்டான். அவ்வளவு நேரமாக அந்தக் கிழவனின் முகத்தில் படிந்திருந்த குழப்பத்திரையானது சட்டென்று விலகிப் போயிற்று. தலையைத் திருப்பி மூங்கில் கழிகளைப் பார்த்தான். உணர்ச்சிகளை உள்ளேயே அடக்கிக் கொண்டு, "சரிம்மா! நீ போயிட்டு வா" என்றான்.

அவள் திரும்பினாள்.

அவள் நடந்து போய்க் கொண்டிருந்த போது பின்னாலிருந்து கிழவன் கத்தினான். "ராதை! நினைவில் வைத்துக் கொள். எப்படிப்பட்ட கஷ்டம் வந்தாலும் அ-ஆ-அ-இ."

ராதையும் சிரித்துக்கொண்டே கையை ஆட்டிவிட்டு "அப்படியே ஆகட்டும் தாத்தா! அப்படிப்பட்ட கஷ்டம் வந்தால் கண்டிப்பாக வருகிறேன். கஷ்டம் வரக்கூடாது என்றே எதிர்பார்ப்போம்" என்றாள் பதிலுக்கு.

அவள் கொஞ்ச தூரம் போன பிறகு அவன் ஒரு கல்லை எடுத்து மூங்கில்களை நோக்கி வீசியெறிந்தான்.

'டங்' என்ற சத்தம் கேட்டது. ஏதோ உலோகத்தில் பட்டாற்போல். அவன் திடுக்கிட்டான். மேற்கொண்டு யோசிக்காமல் தண்ணீரில் குதித்தான்.



அதற்குள் சுமார் இரு நூறடி தூரம் வரை நடந்திருப்பாள் ராதை. பின்னாலிருந்து பொத்தென்ற சத்தம் கேட்டது. சட்டென்று நின்று திரும்பிப் பார்த்தாள். கிழவனைக் காணவில்லை. அவன் திரும்பவும் விழுந்து விட்டானோ என்ற சந்தேகம் வந்தது.

அவன் மூளையைப் பற்றி அவருக்கு தொடக்கத்திலிருந்தே சந்தேகம்தான். தன்னை அழவைப்பதற்காக தண்ணீரில் ஒரு பாறாங்கல்லைப் போட்டுவிட்டு பக்கத்திலேயே எங்கேயாவது ஒளிந்து கொண்டிருந்தாலும் இருக்கலாம்.

அவள் தலை குனிந்தபடி வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள். அந்த சத்தம் கிழவன் செய்ததுதான் என்னவென்றால் அவன் நீச்சலடிப்பதில் வல்லவன் என்றும் தண்ணீருக்குள் மூழ்கி நாலைந்து நிமிடங்கள் வரை மூச்சை அடக்கிக் கொண்டிருப்பதில் கைத்தேர்ந்தவன் என்றும்...

ஏறக்குறைய ஐந்து நிமிடங்கள் வரையில் அந்த ஏரியின் மேற்புறம் சாதாரணமாகவே இருந்தது. அடியில் மட்டும் கிழவன் மீனைப் போல் தெளிந்து திரிந்து நீந்திக் கொண்டிருந்தான்.

தண்ணீருக்கு அடியில் தொலைவில் மூங்கில்கள் மங்கலாக தென்பட்டுக் கொண்டிருந்தன. வேகமாக நீந்தி அவற்றை சென்று அடைந்தான். சேற்றுக்குள் புதைத்து வைக்கப் பட்டிருந்தன. கையால் அவற்றைத் தடவிப் பார்த்தான்.

அவன் உடம்பு சிலிர்த்தது.

அவை மூங்கில்கள் அல்ல. அந்த வடிவத்தில் அமர்த்தப் பட்டிருந்த இரும்புக் குழாய்கள்.

அவன் கையால் அவற்றின் நுனி வரையிலும் தடவிப் பார்த்தான். அங்கே தட்டுப் பட்டது சிறிய வயர். அவன் ஒரு முறை தண்ணீருக்கு மேலே வந்து ஆழமாக மூச்சு எடுத்துக் கொண்டு மறுபடியும் மூழ்கினான்.

இரும்புக் குழாயின் நுனியில் இருந்த இரண்டு வயர்களும் எங்கே போகின்றன என்று பார்த்தான். மேலும் இரும்புக் குழாய்களிலிருந்து வயர்கள் வந்து சேர்ந்து கொண்டன. கடைசியில் வரும்போது சல்லடைப் போன்ற அமைப்பு தென்பட்டது.

அந்த சல்லடையின் விளிம்பில் சிறிய பிளாஸ்டிக் பாக்கெட் சீல் செய்யப் பட்டிருந்தது. அவன் பாக்கெட்டைத் திறந்தான். பாக்கெட் கால்குலேட்டர் போன்ற கருவி ஒன்று அதில் இருந்தது. தண்ணீரில் நனைந்து விடாதபடி பிளாஸ்டிக் கவரில் சுற்றப்பட்டு எல்லா வயர்களும் அவ்விடத்தில் சோல்டரிங் செய்யப்பட்டு இருந்தன.

அவன் ஜேபியிலிருந்து கட்டிங்பிளேயரை எடுத்து வயர்களை துண்டிக்கப் போனான். ஏதோ சந்தேகம் வந்து நின்று விட்டான். இரும்புக் குழாயின் நுனியில் என்ன இருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்தான்.

தண்ணீருக்குள் இருந்ததால் ஒன்றும் ஆகாமல் இருந்தது. இல்லாவிட்டால் அவன் நெற்றியில் வியர்வை அரும்பியிருந்திருக்கும்.



இரும்புக் குழாய்க்குள் சிறிய வெடிகுண்டுகள் அமர்த்தப்பட்டிருந்தன. அவன் கட்டிங்பிளேயரால் வயர்களை துண்டித்து இருந்தால் இந்நேரம் அவன் உடல் கண்ட துண்டங்களாகி அந்த ஏரியில் மிதந்து கொண்டு இருந்திருக்கும்.

தன்னுடைய அதிர்ஷ்டத்தையும், சமயோஜிதத்தையும், மெச்சிக் கொண்டே அவன் கட்டிங் பிளேயரை ஜேபியில் வைத்துக் கொண்டு தண்ணீருக்கு வெளியே வந்தான். கரைக்கு வந்து உடைகளைப் பிழிந்து கொண்டே யோசனையில் ஆழ்ந்தான்.

தண்ணீரிலிருந்து பாதி வெளியில் தெரியும்படி எழும்பியிருந்த மூங்கில் கழிகள் அப்பாவித் தனமாக தென்பட்டுக் கொண்டிருந்தன. பார்ப்பவர்களுக்கு அவை மூங்கில் கழிகளைப் போலவே காட்சியளித்தன. அவ்வளவு அனுபவம் வாய்ந்த அவனுக்கே கூட உடம்பு சிலிர்த்து. ஒரு நிமிடம் என்ன செய்வதென்று புரியவில்லை.

அந்த ரோடு வழியாகத்தான் மறுநாள் பண்ணை ஒன்றை திறந்து வைப்பதற்காக பிரதமர் போகிறார் என்று அவனுக்குத் தெரியும். அவர் மீது கொலை முயற்சி நடக்கப் போவதும் தெரியும் இன்ஃபார்மர்கள் மூலமாக. அப்பொழுதிலிருந்து அவன் அதற்காக சோதித்துக் கொண்டுதான் இருந்தான், எந்த முறையில் நடக்கப் போகிறது என்று. ஆனால் இவ்வளவு முன்னேற்பாடாக நடக்கும் என்று அவன் ஊகித்திருக்கவில்லை.

'பரசுராமா! நீ பலே கெட்டிக்காரனடா' என்று எண்ணிக் கொண்டான் மனதில்.

# 2

"நான் இந்த நாட்டில் புத்திசாலிகளில் ஒருத்தன் என்பது என்னுடைய உத்தேசம். புத்திசாலி என்றால் பார்த்த மாத்திரத்திலேயே விஷயங்களை புரிந்து கொள்பவன் என்று அர்த்தம்" என்றான், பரசுராமன்.

அவனைச் சுற்றி அந்த அறையில் சுமார் இருபது இளைஞர்கள் உட்கார்ந்து இருந்தார்கள்.

"எனக்கு இந்த நாட்டில் நடந்து வ்ரும் விஷயங்களைப் பார்த்தால் கோபம் பற்றிக் கொண்டு வருகிறது உங்களுக்குத் தெரியுமா? ஒரு சாதாரண மனிதன் அரசாங்கத்திற்கு செலுத்தும் வரிப் பணத்தில் அறுபது சதவீதம் அரசாங்கத்தை நடத்துவதற்காக, அதாவது அமைச்சர்கள், கவர்னர்கள், இடைத்தரகர்கள் இவர்களுடைய செலவுக்கு சரியாகிவிடுகிறது. சராசரி இந்தியனின் மாத வருமானம் நாற்பத்தி நாலு ரூபாய் மட்டுமே. சுமார் ஐம்பது கோடி மக்கள் சரியான உணவு இல்லாமல் திண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். இதெல்லாம் இருட்டுப் பக்கம். மறுபக்கம் பார்த்தால்..." பரசுராமன் மேஜை மீது டம்ளரில் வைத்திருந்த தண்ணீரை எடுத்து குடித்துவிட்டுச் சொல்லத் தொடங்கினான். அப்பொழுது மணி நாலரை ஆகியிருந்தது. மாடிசம் அன்ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அது.

"நம் நாட்டில் உள்ள அறுநூறு அமைச்சர்களும் ரோம் நாட்டு இளவரசன் போல் ராஜபோகங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். நேற்றுதான் நம் சுற்றுலா இலாகாவின் அமைச்சர் பிராங்க்பர்ட்டிலிருந்து லண்டன் வழியாக பாரிஸ் சென்று அங்கிருந்து ஜெனிவாவுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார். இதை விட வேடிக்கையான, அவமானம் தரக்கூடிய விஷயம் என்னவென்றால் டூரிசம் டைரக்டர் கோவாவில் ஒரு கூட்டத்தை ஒத்திப் போடுவதற்காக தன்னால் முடிந்த வரையில் முயற்சி செய்ததுதான். காரணம் அது தன்னுடைய வெளிநாட்டு பயணத்திற்கு குறுக்கீடாக இருந்ததுதான். அந்த முயற்சியில் அவர் சுமார் இருபத்தையாயிரம் செலவழித்திருக்கிறார். அதுவும் அரசாங்க கணக்கில்!

உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? ஒரு கேபினெட் மினிஸ்டரின் வருஷாந்திர வருமானம் நான்கு லட்சத்து எண்பத்தெட்டாயிரம் என்றும், சராசரி இந்தியனை விட அமைச்சர் 848 மடங்கு அதிகமாக சம்பாதிக்கிறார் என்றும்" பரசுராமன் பத்திரிகை ஒன்றை எடுத்து காண்பித்தான்.

"நான்கு லட்சம் பேர் வாக்காளர்கள் சேர்ந்து ஒருத்தனை, 'நீ எங்களுக்கு எம்எல்ஏ வாக வரவேண்டாம்' என்று தேர்தலில் தோற்கடித்தால், அந்த நபரைத் தேற்றுவதற்காக அரசாங்கத்தை ஆளும் கட்சி அவனுக்கு தருகிற பதவியின் பெயர் 'கவர்னர்!' லட்சக் கணக்கான மக்களால் மறுக்கப் பட்டவன் ஐந்து கோடி மக்களுக்கு அதிகாரியாகி விடுவான். ஒரு வருடத்தில் மகாராஷ்ட்ர கவர்னரின் செலவு- தோட்டம், மின்சாரம், தண்ணீர், வரிகள் எல்லாம் சேர்த்து ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய். நம் ஜனாதிபதி இருக்கும் மாளிகை முப்பத்தி நான்கு கோடி ரூபாய்கள் மதிப்புடையது. எழுபத்தி நான்கு லாபிக்கள்,

ஒன்றரை மைல் நீளமுள்ள வராண்டாக்கள், பதினெட்டு இடங்களில் மாடிப்படிகள், முன்னூற்றி நாற்பது அறைகளும் கொண்ட ராஷ்டிரபதிபவனம் பிளாட்ஃபாரத்தில் உறங்குபவர்கள் பத்து சதவீதம் உள்ள நம் நாட்டு மக்களின் முதல் குடிமகனுடையது." அவனுடைய குரல் அந்த அறையில் நான்கு சுவர்களிலும் எதிரொலித்தது.

"ஒரு ஏக்கர் நிலத்தில் நெல்லை விளைவிப்பதை விட புகையிலையை விளைவித்தால் லாபம் அதிகம், மக்கள் உணவு கிடைக்காமல் செத்துப் போய்க் கொண்டிருந்தாலும் சரி" அவன் முகத்தில் வேதனை கலந்த முறுவல் தவழ்ந்தது. "சமசதாயம் என்ற நோக்கத்தில் செயல்பட வேண்டிய நம் அரசாங்கம் ஒரு லட்சம் இரண்டு லட்சம் என்று ஆசை காட்டி இரவு பகல் பார்க்காமல் ரிக்ஷாவை மிதித்து உழைப்பவனிடமிருந்து ரூபாய் நோட்டைப் பிடுங்கிக் கொண்டு லாட்டரி சீட்டை வாங்க வைக்கிறது. குதிரைப் பந்தயம் நடக்கும் இடத்தில் நிற்கும் கார்களை விட சைக்கிள் ஸ்டாண்டில் இருக்கிற சைக்கிள்களை பார்த்தால் எத்தனை நடுத்தரக் குடும்பங்கள் நாசமாகிக் கொண்டிருக்கின்றன என்பது தெரியும். வேலையில்லா திண்டாட்டம் இருக்கும் போது மதுபானக் கடைகளை தடுக்கவில்லை இந்த அரசாங்கம். பிரண்ட்ஸ்! இப்படிப் பட்ட அரசாங்கத்தை வீழ்த்துவதற்காக பலவிதமான கொள்கைகளை கடைபிடித்து எத்தனையோ பேர் முயற்சி செய்திருக்கிறார்கள். டோட்டல் ரெவல்யூஷன் என்றார்கள் சிலர். கம்யூனிசம் என்றார்கள் சிலர். நக்சலிசம் என்றார்கள் வேறு சிலர். நான் என்னுடைய வழியில் அரசாங்கத்தை சீர்திருத்துவதற்காக முயற்சி செய்கிறேன்.



என்னுடைய கொள்கையின் பெயர் 'மாடிசம்'. தமிழில் சொல்ல வேண்டும் என்றால் பைத்தியக்காரத்தனம். பரசுராமன் சிரித்தான். "இந்த நாட்டிலுள்ள மேதாவிகள் எல்லோரும் நாட்டின் நிலைமையை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறார்கள் என்றால், அவர்கள் எல்லோரும் உண்மையிலேயே பைத்தியக்காரர்கள்தான். பைத்தியங்கள் எல்லோரும் சேர்ந்து அரசாங்கத்தை மாற்றுவதற்காக செய்யும் முயற்சிதான் மாடிசம். அதனுடைய முயற்சி தான் பிரதமரை டீஸ் செய்வது."

"அதனால் என்ன லாபம்?" யாரோ கேட்டார்கள்.

"எந்த இனத்தாலும் நம் அரசாங்கத்தை மாற்ற முடியவில்லை. நம்ப மக்கள் அந்த அளவுக்கு முட்டாள்கள். நாம் அவர்களுடைய பிரதிநிதிகளாக மாற வேண்டும் என்றால் மேலும் முட்டாள்களாக நிரூபித்துக் கொள்ளணும். இப்படிப்பட்ட காரியங்களை செய்யச் செய்ய நம் பலம் அதிகரிக்கும். அடுத்த தேர்தலில் நமக்கே ஓட்டுப் போடுவார்கள். நான் உங்களை கேட்டுக் கொள்வது என்னவென்றால் என்னுடைய கட்சியில் சேருங்கள் என்று. நீங்கள் எல்லோரும் படித்தவர்கள், பணம் இல்லாதவர்கள், புத்திசாலித்தனம் என்ற ஒரே சொத்து இருப்பவர்கள். என்னுடன் கை கோர்த்துக் கொள்ளுங்கள்."

"நாளைய உங்களுடைய நிகழ்ச்சி நிரல் என்ன?"

பரசுராமன் கரும்பலகையில் சாக்பீசால், இரண்டு கோடுகளை வரைந்தான். "இதுதான் சாலை" என்றான். "பிரதமர் ஏரியின் பக்கத்திலிருந்து பண்ணையின் திறப்பு விழாவுக்கு போகப் போவது இந்த வழியாகத்தான். இதோ

இங்கே சிறிய பாலம். இந்த பாலத்தை இரண்டு மரத் தூண்கள் சப்போர்ட் செய்கின்றன. சரியாக பிரதமரின் கார் இந்த பாலத்தின் மீது வரும்போது இந்த மரத் தூண்கள் வெடித்துச் சிதறும்."

அந்த அறையில் ஒரு வினாடி நிசப்தம் வந்து சூழ்ந்து கொண்டது. முன் வரிசையில் உட்கார்ந்திருந்த இளைஞன் மறுத்துத் தலையை ஆட்டிக் கொண்டே, "அது அத்தனை சுலபம் இல்லை. செக்யூரிடி அதிகாரிகள் கைகளை கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க மாட்டார்கள். பிரதமர் போகும் வழியை எலக்ட்ரானிக் கருவிகளால் சோதிப்பார்கள். தொலைவில் நின்றுகொண்டு துப்பாக்கியால் சுட்டுத் தள்ளுவதற்கு இது ஒன்றும் ஆங்கில திரைப்படம் இல்லை. அதோடு அந்தப் பகுதி முழுவதும் ஏரி. வழியில் இரண்டு பக்கமும் ஆட்கள் இருப்பார்கள். போலீஸ்காரர்கள் இருப்பார்கள். இரண்டு தூண்களும் ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறணும் என்றால் பீரங்கிகள் வேண்டும். அது வெடிக்கும் சமயத்தில் கார் சரியாக பாலத்தின் மீது இருக்கணும். எல்லாவற்றையும்விட மிக முக்கியமாக அந்த பீரங்கிகளை வெடிக்கச் செய்பவன் உயிர் மீது ஆசையை விட்டுவிட்டு அந்த காரியத்திற்கு துணியணும். என் உத்தேசத்தில் இதெல்லாம் பைத்தியக்காரத்தனம்தான். ஐ மீன் மாடிசம்."

பரசுராமன் அந்த இளைஞனைப் பார்த்துச் சிரித்தான். "நீங்க என்ன படிச்சிருக்கீங்க?"

"எம்.டெக். எலக்ட்ரானிக்ஸ்."



ஜேபியிலிருந்து சுருட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டே, "நான் அந்த அளவுக்கு படிக்கவில்லை" என்றான் பரசுராமன். "ஆனால் ஒரு பாலத்தை தகர்ப்பதற்கு, முக்கியமாக எலக்ட்ரானிக்ஸ் இவ்வளவு தூரம் வளர்ச்சி அடைந்திருக்கும் இந்தக் காலத்தில் அவ்வளவு கஷ்டப்படத் தேவையில்லைன்னு நினைக்கிறேன்."

மறுபடியும் கரும்பலகையை நோக்கித் திரும்பினான். "இந்த ஏரியில் மூங்கில் குழாய்களைப் போல் தென்படும் நான்கு இரும்புக் குழாய்களைப் புதைத்திருக்கிறேன். அந்த இரும்புக் குழாய்களில் துப்பாக்கி மருந்து அடைக்கப்பட்டிருக்கிறது. குழாய்களின் நுனியில் டிரிக்கர் இருக்கிறது. அதை அசைத்ததுமே தூண்கள் வெடித்துவிடும்."

"ஒருக்கால் நீங்கள் ஜலஸ்தம்ப வித்தையின் மூலம் தண்ணீருக்குள் மறைந்திருந்து, அவர் வந்ததுமே வெடித்து விடப் போறீங்களா?" சிரித்துக் கொண்டே யாரோ பின்னாலிருந்து கேட்டார்கள்.

கொல்லென்று சிரிப்புச் சத்தம். பரசுராமனும் சிரித்தான். சிரித்துக் கொண்டே, "அது வெடிக்கும் சமயத்தில் நான் அங்கே இருக்கமாட்டேன். நான் மட்டுமே இல்லை. நம்ப ஆட்கள் யாருமே அங்கே இருக்க மாட்டார்கள்" என்றான்.

"டைம் பாம் வைக்கப் போறீங்களா?" என்று கேட்டான் ஒருத்தன்.

"எப்படி? கார் எப்போ வரப்போகிறது என்று தெரியாதே?" என்றான் இன்னொருத்தன்.

"பின்னே எப்படி? தண்ணீருக்குள் இருக்கும் பீரங்கிகளை எது வெடிக்கச் செய்யும்?"

பரசுராமன் மறுபடியும் சிரித்தான். "எந்தக் கார் பாலத்தின் மீது வந்ததுமே தூண்கள் வெடித்துச் சிதற வேண்டுமோ அந்தக் கார்தான் ஏரிக்குள் இருக்கும் பீரங்கிகளை வெடிக்கச் செய்யும்."

"அது எப்படி?" நாலைந்து குரல்கள் ஒரே நேரத்தில் கேட்டன.

"அந்தக் காரின் பின் சக்கரத்திற்கு அருகில் குதிரை நாடா மாக்னெட்டை பொருத்தப் போகிறேன்."

"பொருத்தினால்?"

அவன் சொல்லத் தொடங்கினான். "சாலையில் இருக்கும் மரப்பாலங்களை எப்போதாவது கவனித்திருக்கீங்களா? பாலம் தொடங்கப் போகும் முன்னால் பாதையில் குறுக்கே இரும்புக் கம்பிகள் இருக்கும். தற்போது இந்தப் பாலத்திற்கும் அதே போலவே இருக்கு. எந்த வாகனமாக இருந்தாலும் சரி. இந்த இரும்புக் கம்பியை மிதித்துக் கொண்டுதான் போகணும்..." அவன் நிறுத்தினான்.

"சாலையின் விளிம்பு வரையில் வந்த அந்தக் கம்பியின் முனையில் ஒரு காப்பர் வயரைச் சுற்றியிருக்கிறேன். அந்த காப்பர் வயரை தண்ணீருக்குள் நுழைத்திருக்கிறேன். அந்தக் காப்பர் வயர்களுக்கு ஒரு ஆபரேஷன் ஆம்ளிஃபயர், ஒரு ஸ்டெப்பர்ஸ் மோட்டார் இரண்டும் இணைக்கப்பட்டு இருக்கின்றன. கார் இரும்புக் கம்பியைத் தாண்டும் போது காரோடு பொறுத்தப்பட்

காந்தத்தின் மூலமாக ஒரு வினாடியில் ஆயிரத்தில் ஒரு பங்கு (மில்லி செகண்ட்) நேரம் காப்பர் வயர்களில் மின்சாரம் பாயும். அந்த அளவு மின்சாரம் நமக்கு போதுமானது. ஆபரேஷன் ஆம்ளிஃபயர் மூலமாக ஐந்து வோல்டிற்கு அதிகமாக்கப்பட்டு ஸ்டெப்பர்ஸ் மோட்டாரை ஒரு ஸ்டெப்பர் முன்னுக்கு தள்ளும். லீவர் முன்னுக்கு போனதுமே தூண்கள் வெடித்துச் சிதறும். மரப்பாலமாக இருப்பதால் கார் மணிக்கு முப்பது மைல் வேகத்தில் போகும். வயர்களில் மின்சாரம் பாய்ந்து பீரங்கிகள் வெடிக்கச் செய்வதற்கு நூற்றைம்பது மில்லி செகண்ட் ஆகும். மணிக்கு முப்பது மைல் வேகத்தில் போகும் கார் நூற்றைம்பது மில்லி செகண்டில் ஏறக்குறைய அறுபது அடி தூரம் போகக்கூடும். அதாவது பாலத்தின் தூண்கள் வெடித்துச் சிதறும் சமயத்தில் அது சரியாக பாலத்தின் நடுவில் இருக்கும் என்று அர்த்தம்."

பரசுராமன் மூச்சு விட்டுக் கொள்வதற்காக நிறுத்தினான். அந்த அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் ஏற்பட்டது. எல்லோரும் சிலையாக நின்றபடி கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களால் தம் செவிகளை தாமே நம்ப முடியவில்லை. அவர்களுள் முதலில் தேறிக் கொண்ட ஒரு இளைஞன் கேட்டான்.

"தூண்களை தகர்த்து எறிவானேன்? ஒரே திரியால் காரையே வெடிக்கச் செய்து விடலாமே?"

பரசுராமன் நிதானமான குரலில், "பிரதமரைக் கொல்வது என் உத்தேசமில்லை. தூண்கள் இடிந்து விழுந்ததுமே பாலம் நீருக்குள் மூழ்கிப் போய் விடும். அதிலிருந்து பிரதமரை மீட்டு வெளியே எடுப்பதற்காக எல்லோரும்

ஆர்ப்பாட்டம் செய்வார்கள். நனைந்த ஆடைகளுடன், ஈரம் சொட்டும் தலைமுடியுடன் பிரதமர் நீரிலிருந்து வெளியே வந்து கொண்டிருக்கும் போது நூற்றுக் கணக்கான கேமராக்கள் பளிச் பளிச்சென்று மின்னும். ஆண்கள் கைக் குட்டையை, பெண்கள் புடவை தலைப்பையும் வாயில் பொத்திக் கொண்டு சிரிப்பார்கள். அதுதான் நமக்கு வேண்டியது."

ஒரு இளைஞன் ஆவேசமாக எழுந்தான். "சேவலம்! அங்கே இருப்பவர்களைச் சிரிக்க வைப்பதற்காக இத்தனை முயற்சிகளா? என்னால் ஒப்புக் கொள்ள முடியாது. இது உண்மையிலேயே மாடிஸம்தான்."

பரசுராமன் மேலும் நிதானமாக சொன்னான். "முன்பு நம் அமைச்சர் ஒருவர் காந்திஜியின் சமாதியை கங்கையின் நீரில் சுத்தம் செய்யப் போவதாகச் சொன்னா ராம். நான் செய்யப் போகும் இந்தக் காரியம் அமைச்சர் சொன்னதைவிட நகைப்பிற்கு இடமானது ஒன்று மில்லை."

## 3

அதே நாள்...

மணி நாலரை ஆகியிருந்தது.

வானொலி நிலையத்தில் எல்லா கடியாரங்களும் வினாடிகளோடு சேர்த்து நாலரை மணியைக் காட்டிக்



கொண்டிருந்தன. டைரக்டர் பார்த்தசாரதி தன்னுடைய கேபினெட்டில் உட்கார்ந்து கடிதங்களைப் படித்துக் கொண்டிருந்தான். மூன்றாவது சின்ன டெலெக்ஸ். அதில் நாலு வரிகள்தான் இருந்தன. படித்துக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"டிசம்பர் இருபத்தி மூன்று. தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருக்கும் பிரதமரைக் கொலை செய்ய இன்று முயற்சி நடந்தது. எஞ்சிய விவரங்கள் செய்தி கிடைத்தப் பிறகு..."

ஆங்கிலத்தில் டெலெக்ஸ் டைப் செய்யப்பட்ட செய்தி அது.

பார்த்தசாரதிக்கு ஒரு வினாடி ஒன்றுமே புரிய வில்லை. மூளை ஸ்தம்பித்துப் போய்விட்டாற்போல் இருந்தது. மறுநாள் பிரதமர் தமிழ்நாட்டிற்கு வரப் போகிறார் என்று தெரியும். நாளைக்குத்தான் நாட்டில் புது வானொலி நிலையத்தின் திறப்பு விழா.

சாரதிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கொலை முயற்சி தோல்வியுற்றது என்று அர்த்தமா? அவ்வாறு தோல்வியடைந்திராத பட்சத்தில் பிரசார மாகிக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் அத்தனையும் நிறுத்தி விட்டு சோக கீதத்தை ஒலிபரப்ப வேண்டும். அதற்கு முன்னால் இந்தச் செய்தி உண்மைதானா என்று உறுதி படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு முறை செய்தி ஒலிபரப் பாகி விட்டால் பலகோடிக் கணக்கான மக்கள் ரியாக்ட் ஆவார்கள். பிறகு வார்த்தைகளை பின் வாங்க முடியாது. நாடே ஸ்தம்பித்து போய்விடும். தொலைபேசியில் அழைப்புகள் வரத் தொடங்கும்.

விசாரணைகள்... கேள்விகள்...!

பிரதமரின் புரோகிராமில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டு விட்டதா? ஏற்பட்டிருந்தால் தனக்குத் தெரியாமல் எப்படியிருக்கும்?

கையில் இருந்த டெலக்ஸை மறுபடியும் பார்த்தார். யதேச்சையாக அவருடைய பார்வை அதன் தேதியின் மேல்பட்டது. திடுக்கிட்டுப் போனார்.

இருபத்தி மூன்று.

அப்படி என்றால் நாளைக்கு!

நாளைய செய்தி இன்றைக்கு டெலெக்ஸில். சந்தேகம் வந்து கூர்ந்து பார்த்தார். அப்பொழுதுதான் தென்பட்டது. பென்சிலால் எழுதியிருந்த சிறிய எழுத்துக்கள் 'நாளைக்குப் படிக்க வேண்டிய செய்தி' என்று.

அப்பொழுதுதான் புரிந்தது சாரதிக்கு தன்னை யாரோ முட்டாளாக்க வேண்டும் என்று முயற்சி செய்திருக்கும் விஷயம்.

வானொலி நிலையத்தின் மீது பிராக்டிகல் ஜோக் செய்பவர்கள் பல பேர் இருப்பார்கள்.

தனக்குள் சிரித்துக் கொண்டே காகிதத்தை கசக்கி குப்பைக் கூடையில் போட்டார் சாரதி. அது சிரிக்கக் கூடிய விஷயம் இல்லை என்று மறுநாள் தெரிந்தது.

* * *

டிசம்பர் இருபத்தி மூன்று.



காலை ஆறரை மணி.

"பட்டு நூல் தொழிற்சாலைக்கு செங்கல்பட்டு புகழ் பெற்றது. அத்தருக்கு கோயம்புத்தூரு–" ராதை மனப்பாடம் பண்ணிக் கொண்டிருந்தாள்.

"தலையைத் துவட்டிக் கொள். ஜலதோஷம் பிடித்துக் கொண்டுவிடும்" என்றாள் பாட்டி, கொல்லைப்புரத்திற்கு வந்து.

"இந்தத் தடவையாவது வேலை இடைக்கணும். இல்லாவிட்டால் நம் வாழ்க்கைக்கே ஜலதோஷம் பிடித்துக் கொண்டுவிடும். பாட்டீ! இன்னிக்கு அமாவாசை தானே?" என்றாள் ராதை துளசி மாடத்திற்கு அருகில் தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை வைத்துக் கொண்டே.

"இந்த வயதில் இதென்ன வேண்டாத நம்பிக்கை உனக்கு?" என்றாள் பாட்டி.

"சென்டிமென்ட்ஸ் பற்றி கேள்வி கேட்காதே பாட்டீ." ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு விதமான நம்பிக்கை. சிரித்து விட்டு மறுபடியும் புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டாள். இரண்டரை மணி நேரம் வெளி உலகத்தையே மறந்து போனவளாய் படிப்பில் மூழ்கிப் போய் விட்டாள்.

எட்டரை மணியானதும் புத்தகத்தை மூடி வைத்து விட்டு, "பாட்டீ! நான் போய்விட்டு வருகிறேன்" என்று குரல் கொடுத்தாள்.

பத்து மணிக்கு இண்டர்வ்யூ. வானொலி நிலையம் ஊர்க் கோடியில். எவ்வளவு சீக்கிரம் பஸ் கிடைத்தாலும் ஒரு மணி நேரமாகிவிடும்.

பாட்டி ராதையை வழியனுப்ப வெளியில் வந்தாள்.

ராதை படியிறங்கப் போனபொழுது யாரோ தும்மிய சத்தம் கேட்டது. உடனே படியிலேயே உட்கார்ந்து விட்டாள்.

பாட்டி சிரித்தாள். "இண்டர்வ்யூ நடக்கும் அறைக்குள் நுழையும் போது யாராவது தும்மினால் அப்படியே திரும்பி வந்து விடுவாயா என்ன?"

"பாட்டீ! ஒரு விஷயம் சொல்லட்டுமா?"

"என்ன?"

"நான் உன் காலத்திலும் நீ என் காலத்திலும் பிறந்திருக்க வேண்டியவங்கள் பாட்டீ."

"சரிதான். கிளம்பு."

"நல்ல சகுணம் வரவேண்டாமா?" ராதை முணுமுணுத்தாள்.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு எதிரே ஒருத்தி தண்ணீர் குடத்துடன் வந்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு, "போயிட்டு வரேன் பாட்டீ!" என்றாள் படியிறங்கிக் கொண்டே.

ராதையின் பின்னால் இடுப்பிற்குக் கீழே அப்படியும் இப்படியும் நெளிந்து ஆடிக்கொண்டிருந்தது. ஏனோ பாட்டியின் விழிகள் ஈரமாயின.



'தங்கமான பெண். இந்தப் பணம் என்ற பிரச்சனை மட்டும் இல்லாமல் இருந்தால் எப்படி இருக்க வேண்டியவள்? ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும்..'

"பாட்டீ! நான் சொன்னதை நீ காதில் வாங்கவே இல்லை."

"என்ன?"

"நான் கிளம்புகிறேன். போகும் போது என்ன சொல்லணும்னு சொல்லியிருக்கேன்?"

பாட்டி தடுமாறினாள். "பெ.. பெ.."

"பெஸ்ட் ஆஃப் லக்."

"அதுதான். எனக்கு வாயில் நுழையாது. என்னைப் படுத்தாதே."

ராதை சிரித்துவிட்டு பத்தடி நடந்தவளை, திரும்பிப் பார்த்து கையை ஆட்டிவிட்டு மறுபடியும் நடக்கத் தொடங்கினாள்.

ஒரு ஃபர்லாங் தூரம் நடந்தால்தான் பஸ் ஸ்டாண்டு வரும். டிசம்பர் மாதத்து குளிரைக் காலைக் கதிரவனால் இன்னும் துரத்தியடிக்க முடியவில்லை. அதுவும் ஏரியிலிருந்து வந்து வீசிக் கொண்டிருந்த பனிக் காற்று வேறு.

ராதை ஏரியை நோக்கித் திரும்பினாள். நேற்றுப் பார்த்த அதே குள்ளமான கிழவன் அவளுக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தான். கிழிந்த கோட்டு, தூசி படிந்த பேண்ட்.

"வணக்கம் தாத்தா!" என்றாள் சிரித்துக் கொண்டே.

"யாரு? ஓ– நீயா ராதை! இண்டர்வ்யூவுக்கா?" என்று கேட்டான்.

ராதை தலையை அசைத்தாள். "நீங்கள் எங்கே போய்க் கொண்டு இருக்கீங்க?"

"சின்ன வேலையாய் போய்க்கொண்டு இருக்கிறேன்."

ராதைக்கு குறும்புத் தனமான சந்தேகம் வந்தது.

'அ.ஆ.அ.இ. சங்கத்தின் பிரசிடென்ட் அவர்களே உங்கள் சங்கத்திற்கு இந்தியா முழுவதும் பிரதிநிதிகள் இருப்பார்கள் இல்லையா? பின்னே எப்போ பார்த்தாலும் இப்படி ஊர் எல்லையிலேயே சுற்றிக்கொண்டு இருக்கீங்களே ஏன்?' என்று கேட்க விரும்பினாள். ஆனால் நன்றாக இருக்காது என்று நினைத்து சும்மாயிருந்தாள்.

"அது என்ன?" அவர் கையில் இருந்த கூடைகளை காட்டிக் கேட்டாள்.

"ஒரு கூடையில் துலுக்கச் சாமந்தி பூக்கள். இன்னொரு கூடையில் சாமந்திப் பூக்கள்" என்று சொல்லி விட்டு அவன் போய் விட்டான், 'எதற்கு?' என்று அவள் கேட்பதற்குள்ளேயே.

அடுத்த ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் அவள் பஸ் ஸ்டாண்டிற்கு வந்து சேர்ந்தாள். மணி ஒன்பது அடிக்க யிருந்தது. குளிர் நாளாக இருந்த போதிலும் அன்றைக்கு வெயில் நன்றாக வந்துவிட்டது. பஸ் வரும் ஜாடையே தெரியவில்லை. அவள் நெற்றியில் வியர்வை அரும்பியது.



மேலும் ஐந்து நிமிடங்கள் கழிந்தன. அதற்குள் தொலைவில் ஏதோ வாகனம் வந்து கொண்டிருந்த சத்தம் கேட்டுவிட்டு அந்தப் பக்கம் எதிர்பார்ப்புடன் பார்த்தாள்.

பூப்போட்ட சட்டையைப் போட்டுக் கொண்ட இளைஞன் ஒருவன் ஸ்கூட்டரில் விர்ரென்று வந்து நின்று "லிஃப்ட் வேணுமா மேடம்?" என்று கேட்டான்.

ராதை அவனை ஒருமுறை கூர்ந்து பார்த்தாள். இந்த ஆண்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள்? எத்தனையோ பேர் பஸ்ஸிற்காக நிற்கும்போது யாரையுமே கேட்காமல் தன்னிடம் வந்து ஏன் கேட்க வேண்டும்? தனியாய் ஒரு பெண் தென்பட்டு விட்டால் போதும்.

"பஸ் இப்போதைக்கு வராது மேடம். நட்பு ரீதியில் கூப்பிடும்போது மறுக்காதீங்க."

நட்பு! இந்த வார்த்தைதான் எவ்வளவு சுலபமாகி விட்டது? கேவலம் ஸ்கூட்டரில் லிஃப்ட் தருவதற்காக ஏற்படும் நட்பு. ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருக்கும் போது பெயரைக் கேட்டால் அது அறிமுகம். அந்த நட்பு அறிமுகத்துடன் சேர்ந்து கொண்டு திடீரென்று காதலாக மாறிவிடும் போலும். மேலுக்கு எவ்வளவு அப்பாவியை போல் இருக்கிறான் இந்த இளைஞன்? ஆனால் எவ்வளவு தைரியம்? கோபத்தால் தேகம் பற்றி எரிவதுபோல் இருந்தது ராதைக்கு.

"என்ன யோசிக்கிறீங்க? நான் ஜெண்டில் மேன் தான்."

சிரிப்பு வந்தது அவளுக்கு. ஜெண்டில்மேன் என்று தன்னையே சொல்லிக் கொள்ளும் ஜெண்டில்மேன்.

"என்னப்பா? தனியாய் இருக்கும் பெண்ணிடம் வம்பு செய்கிறாயா?"

பின்னாலிருந்து குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள்.

டி.எஸ். கிழவன்.

ராதை சிரித்துவிட்டு 'இப்போ சொல்' என்பது போல் அந்த இளைஞனைப் பார்த்தாள்.

அவன் தடுமாறவில்லை. "சே... சே... எங்களுக்குத் தெரிந்தவர்கள் வீட்டுப் பெண்தான். நேரமாகிக் கொண்டே போகிறதேன்னு ஒரு பக்கம், ஸ்கூட்டரில் ஏறினால் யாராவது என்ன நினைச்சுப்பாங்கன்னு பயம் ஒரு பக்கம். எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. அப்படித்தானே சுமித்ரா!"

'மைகாட்!" என்று நினைத்துக் கொண்டாள் ராதை. அவன் இப்படிப்பட்ட விவரங்களில் தேர்ந்தவன்போல இருந்தான். அவள் ஏதோ சொல்லப் போனாள்.

அதற்குள் டி.எஸ். குறுக்கிட்டு, "பெண்ணுக்கு நம் சம்பிரதாயங்களின் மேல் இன்னும் நம்பிக்கை இருக்கு என்று நினைக்கிறேன் தம்பீ" என்றான்.

"அப்படித்தான் என்கிறீங்களா? அப்படித்தான் போலிருக்கு." அவன் ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்து விட்டு ராதையை நோக்கி ஒரு பார்வையை வீசிவிட்டு பறந்து போய் விட்டான்.



"தாங்க்ஸ் தாத்தா!" என்றாள்.

"அதற்கென்ன வந்ததும்மா."

ஸ்கூட்டர் தொலைவில் மெயின் ரோடில் திரும்பி கண் மறைவாகி விட்டது.

"சாமந்தி பூக்களை என்ன செய்தீங்க?" என்று கேட்டாள்.

"சின்ன காரியத்தை செய்து முடித்தேன்" என்றான் அந்தக் கிழவன். "கொஞ்சமாக மீதி இருந்ததை அதோ அந்த ஸ்கூட்டரின் பெட்ரோல் டாங்கிற்குள் போட்டு விட்டேன்."

ராதைக்கு ஒரு வினாடி புரியவில்லை. புரிந்ததும் வியப்போடு, "என்னது?" என்றாள்.

"எவ்வளவு நேரம் வேண்டும்? பாவம்! அந்தப் பையன். உன்னிடம் பேசிக் கொண்டே உலகத்தையே மறந்து விட்டான். சுறுசுறுப்பாக வேலை செய்யும் விரல்களுக்கு டாங்கின் மூடியைத் திறந்து பூவிதழ்களைப் பிய்த்துப் போட எவ்வளவு நேரமாகி விடப் போகிறது? ஆனால் இந்த வேகாத வெயிலில் அந்த இளைஞன் பாவம், ஸ்கூட்டர் ஏன் நின்று விட்டது என்று தெரியாமல்..." அதற்குப் பிறகு வார்த்தைகளைச் சிரிப்பு விழுங்கி விட்டது.

ராதைக்குக் கூட சிரிப்பு வந்தது. அதற்குள் தொலைவில் பஸ் வந்து கொண்டிருப்பது கண்ணில் பட்டது. அடுத்த நிமிடம் அது ஸ்டாப்பில் வந்து நின்றது.

"போயிட்டு வரேன் தாத்தா."

"நல்லதும்மா. பெஸ்ட் ஆஃப் லக் இன் யுவ
இண்டர்வ்யூ."

அவள் ஏறியதுமே பஸ் நகர்ந்தது.

கிழவன் அந்தப் பக்கமாகவே பார்த்தபடி ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்டான். வானொலி நிலையத் தின் இயக்குனர் சாரதிக்கு இந்தப் பெண்ணைப் பற்றி யார் மூலமாக சொல்லியனுப்பலாம் என்று.

ராதை அரைமணிக்குள் இறங்க வேண்டிய ஸ்டாப் பிற்கு வந்து சேர்ந்தாள்.

விசாலமான வளாகத்தில், மரங்களுக்கு நடுவில் வெறுமையாய் தென்பட்டது. கட்டிடம். பெரிய பெரிய கேட்டுகள். காம்பவுண்டு சுவற்றுக்கு முன்னால் 'ஆகாச வாணி– வானொலி நிலையம்' என்று பலகை இருந்தது. 'கடவுளே! இந்த முறையாவது வேலை கிடைக்கணும்' என்று நினைத்துக் கொண்டாள்.

அவள் கேட்டைத் தாண்டி வானொலி நிலையத்திற் குள் நுழையப் போன பொழுது எதன் மீதோ அவள் பார்வை பட்டதும் சட்டென்று நின்றுவிட்டாள்.

சாலை ஓரத்தில் படபடக்கும் வெயிலில் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு குனிந்து அதனோடு குஸ்தி போட்டுக் கொண்டிருந்தான் அந்த இளைஞன். அவனுக்குப் பக்கத்தி லேயே ஸ்கூட்டரின் சைட் ப்ளேட்டுகளும், பிளக்கும், கிட் பாக்கம் கிடந்தன.

ராதைக்குச் சிரிப்பு வந்தது. தலைகுனிந்தபடியே வானொலி நிலையத்தின் காரியாலயத்திற்குள் நுழைந்தாள்.

# 4

'வந்தே மாதரம்... வந்தே மாதரம்...' என்று தொடங் கிற்று வானொலி.

வானொலி நிலையத்தின் இயக்குனர் பார்த்தசாரதி கம்பளிக்குள் புரண்டு படுத்தான். முதல் நாள் இரவு பதினோரு மணி வரையிலும் மறுநாள் தொடங்கவிருந்த வானொலி நிலையத்திற்காகவும், பிரதமரின் வருகைக்காக வும் ஏற்பாடுகள் செய்வதற்கே நேரம் சரியாக இருந்தது. வீட்டுக்கு வந்து படுத்துக் கொண்ட போது மணி பன்னி ரெண்டரை.

பக்கத்து வீட்டிலிருந்து ரேடியோ பெரிதாக கேட்டுக் கொண்டிருந்தது. விடிந்துவிட்டது போலும் என்று நினைத் துக் கொண்டே கண்களைத் திறந்தவன் கண்கள் எரிச்சல டைந்ததால் திரும்பவும் மூடிக்கொண்டான். ஜன்னல் வழியாக சூரிய வெளிச்சம் சாய்வாக வந்து உள்ளே விழுந்து கொண்டிருந்தது.

அவனுக்கு ஒரு சின்ன ஆசை ஏற்பட்டது.

இளம் பெண் ஒருத்தி தலைக்குக் குளித்து விட்டு, அதிகாலை வேளையில் சங்குடி புடவையைக் கட்டிக் கொண்டு தன் பக்கத்தில் நின்று பெட் காபி தருவது போல்.

காபியைப் பெற்றுக்கொண்டு, காபியோடு அவளை யும் சேர்த்து அருகில் இழுத்துக்கொண்டு... முத்தம் கொடுக்கலாமா என்று ஒரு வினாடி யோசித்தான். வேண்டாம் வேண்டாம். அவ்வாறு பார்ப்பதே போதும் என்ற எண்ணம் மறுபடியும்.

இன்னொரு சந்தேகம் வந்தது. தன் ஸ்தானத்தில் வேறொருத்தன் – இளைஞன் இருந்தால் முத்தம் கொடுக்காமல் இருப்பதைப் பற்றி யோசித்துப் பார்ப்பானா! வயது தாண்டிவிட்டதால்தான் தன்னுடைய யோசனைகள் இவ்வளவு புனிதமாக போய்க் கொண்டிருக்கின்றனவோ!

ஆனாலும் அப்படி என்ன மீறி விட்டது தனக்கு! முப்பத்தேழுதானே.

அவன் கண்களை மூடிக்கொண்டு திரும்பவும் தூங்க முயன்றான். விழிப்பு வந்ததுமே படுக்கையைவிட்டு எழுந்திருக்காமல் அப்படியே படுத்திருந்தால் வரும் எண்ணங்கள் அன்று முழுவதும் மன நிலையின் மீது தன் பிரபாவத்தைக் காட்டிக் கொண்டிருக்கும். அவன் அரை தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான்.

மறுபடியும் விழிப்பு வந்தபோது எட்டரை மணியாகியிருந்தது. வீடு முழுவதும் நிசப்தமாக இருந்தது. எழுந்து வாஷ்பேசினை நோக்கிப் போகும் முன், ரேடியோவைப் போட்டான். ஏற்கனவே வந்து கொண்டிருந்த நிகழ்ச்சி முடிந்து போய்விட்டது போலும்.

"இப்பொது நீங்கள் 'புஷ்பவிலாபம்' என்ற நிகழ்ச்சியைக் கேட்கப் போகிறீர்கள். எழுதியவர் ஜந்த்யாலா, குரல் கண்டசாலா."

சாரதி நெற்றியைச் சுளித்தான். பாடியவர் என்று சொல்லாமல், குரல் என்ன குரல்? இந்த அறிவிப்பாளர்கள் – முக்கியமாக இளைஞர்களின் நிகழ்ச்சிக்கு வருபவர்கள் ஏதோ புதுமையைக் காட்டிக் கொள்ள வேண்டும்



என்ற தவிப்பில் செய்கிற பிரயோகங்கள் எல்லாமே இடைஞ்சலாக இருக்கும்.

சாரதி அதைப் பொருட்படுத்தவில்லை. அவனுக்கு புஷ்பவிலாபம் ரொம்ப பிடிக்கும். பக்கத்திலேயே இருந்த சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

ரிகார்டின் மீது பின்னை பொருத்தும் கர கர சத்தம். பிறகு பாட்டு ஒலிக்கத் தொடங்கியது. பார்த்தசாரதி கண்களைத் திறந்து எரிச்சலோடு ரேடியோவின் பக்கம் பார்த்தார். யாரோ ரிக்கார்ட்டை இரண்டாவது பக்கமாக வைத்து விட்டார்கள். அவர் ஒரு வினாடி பொறுத்துப் பார்த்தார். மன்னிப்பு கேட்டுக் கொண்டு பாட்டை சரியாக போடுவார்கள் என்று நினைத்தார். அப்படி எதுவும் நடக்கவில்லை. பாட்டு முடிந்ததும் அடுத்த பக்கம் (உண்மையான முதல் பக்கம்) தொடங்கியது.

சாரதி எரிச்சலுடன் தலையைச் சிலிர்த்துக் கொண்டான். பாட்டின் முதல் பாகம் எது இரண்டாவது பாகம் எது என்று கூடத் தெரியாதவர்கள் தன் அலுவலகத்தில் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள் என்றால் அதைக் காட்டிலும் அவமானம் வேறு இல்லை.

இனி நாளையிலிருந்து கடிதங்கள் வரத் தொடங்கி விடும். குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் பாட்டை தவறாக ஒலிபரப்பு செய்தீர்கள் என்று சாடுவார்கள்.

அசிஸ்டென்ட் டைரக்டர் சுப்ரமணியத்தின் வார்த்தைகள் சாரதிக்கு நினைவு வந்தன.

"நம்ப ஸ்டாஃப் எவ்வளவு புத்தியில்லாதவங்களோ நம்ப நேயர்களும் அதே அளவுக்கு புத்தி யில்லாதவர்கள் தான். ஏதோ சின்ன தவறு. நடந்துடுத்து என்று வைத்துக் கொள். அதற்காக எட்டணா செலவு செய்து நமக்கு கடிதம் எழுதணுமா?" என்று சலித்துக் கொள்வார். ஐம்பத்தி ஐந்து வயது தாண்டி விட்ட போதிலும் அவருக்கு இன்னும் டைரக்டராக பிரமோஷன் கிடைக்கவில்லை.

தவறு என்றதும் அவனுக்கு சென்ற வருடம் நடந்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் நேற்று நடந்தது போலவே இருந்தது.

அன்றைக்கு இரவு எட்டு மணிக்கு அவன் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தபோது போன் மணி அடித்தது.

"அகில இந்திய வானொலி நிலையத்தின் இயக்குனர் தானே"

"ஆமாம்."

"சார்! உங்களுடைய பெயர்?"

எரிச்சலுடன், "பார்த்தசாரதி" என்றான்.

"சார்! உங்கள் வீட்டில் ரேடியோ இருக்கிறதா?"

சாரதி திடுக்கிட்டு "ஏன்?" என்றான்.

"உங்கள் வீட்டில் ரேடியோ இருந்தால் ஒருமுறை வைக்கிறீங்களா? விவித பாரதியில் வருகிற பாட்டைக் கொஞ்சம் கேட்கிறீங்களா சார்! எனக்கு இரண்டு மகன்



கள். இரண்டு மகள்கள். ரேடியோவில் வரும் பாட்டை எல்லோரும் சேர்ந்து கேட்கவேண்டும் என்ற ஆசை எங்களுக்கு. ஒவ்வொரு அறையிலும் ஒவ்வொரு ரேடியோவை வைத்துக்கொண்டு கேட்கக் கூடிய அளவுக்கு பணக்காரங்க இல்லை நாங்கள். இதோ! இந்தப் பாட்டு வந்ததுமே என் இரண்டாவது மகன் சிரிக்கிறான். மூத்த மகள் எழுந்து உள்ளே போய் விட்டாள். இரண்டாவது மகள் போவதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறாள். என் மனைவியோ ரேடியோவை அணைக்கச் சொல்லி எனக்கு ஜாடை காட்டுகிறாள். அப்படி அணைத்துவிட்டால் பாட்டு எனக்குப் புரிந்து போனாற்போல் என் பெரிய மகனுக்கு புரிந்து போய் விடுமே என்று பயந்து ஓட்டமாக பக்கத்து வீட்டுக்கு வந்து உங்களுக்கு போன் செய்கிறேன்."

சாரதி ஏதோ பதில் சொல்வதற்குள் அந்த நபர் போனை வைத்து விட்டான்.

சாரதியும் போனை வைத்துவிட்டு ரேடியோவிடம் சென்று அதை ஆன் செய்ய நினைத்தவன் சட்டென்று அந்த எண்ணத்தை கைவிட்டான்.

தேவையில்லை. அதில் வரும் பாட்டு எப்படிப்பட்டதென்று அவனால் ஊகித்துக் கொள்ள முடியும்.

சினிமாவில் வரும் எல்லா பாட்டுக்களையும் ரேடியோவில் ஒலிபரப்ப முடியாது. சில பாடல்களில் உள்ள வார்த்தைகள் சினிமாவில் சென்சார் செய்யப்பட்டாலும் ரிக்கார்டுகளில் வந்து கொண்டுதான் இருக்கும். அதனால் ரேடியோவில் ஒலிபரப்புவதற்கு முன்னால் பாடல்களில்

விரசம் உள்ளதா இல்லையா பார்ப்பதற்காக கமிட்டியை ஏற்படுத்தி விரசமான வார்த்தைகள் இருக்கும் பாடல்களை தடை செய்வார்கள். இவ்வளவு செய்தும்கூட இப்படிப்பட்ட விமர்சனங்களிலிருந்து தப்பிக்க முடியாது.

எவ்வளவு நேரத்தை எந்த நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்க வேண்டும் என்று அரசாங்கமே முடிவு செய்யும்.

யோசனையில் ஆழ்ந்தபடியே சாரதி குளித்து முடித்தான். பையன் ஹோட்டலிலிருந்து சாப்பாடு கொண்டு வந்தான். டைனிங் டேபிளுக்கு முன்னால் வந்து உட்கார்ந்து கொண்டான். நீளமான டைனிங் டேபிள், நாலைந்து குழந்தைகள் கொண்ட குடும்பத்திற்கு சரியாக இருக்கும். ஒரு மூலையில் தனியாக அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை. ஆனால் கூர்ந்து பார்த்தால் அவன் நெற்றி மடிப்பில் ஒரு விதமான கம்பீரத்தோடு கூடிய வேதனை தென்பட்டுக் கொண்டிருப்பதை கவனிக்கலாம்.

அவன் சாப்பிட்டு முடித்துவிட்டு உடையை மாற்றிக் கொண்டு தயாராவதற்குள் மணி ஒன்பதரையாகி விட்டது. காரில் ஐந்து நிமிடம் பயணம்.

அவன் வானொலி நிலையத்திற்கு வந்து சேர்ந்த போது மணி ஒன்பதே முக்கால். பூப்போட்ட சட்டை அணிந்திருந்த இளைஞன் ரிப்பேராகிவிட்டிருந்த ஸ்கூட்டருக்கு அருகில் குனிந்த நிலையிலேயே கரி படிந்த கைகளோடு விஷ் செய்தான்.

பார்த்தசாரதி சேம்பருக்குள் வந்ததுமே புரோகிராம் சார்டைப் பார்த்தான். பன்னிரெண்டு மணிக்கு விமான



நிலையத்திற்குப் போக வேண்டும். பிரதமரின் வருகை. இரண்டு மணிக்கு பொதுக் கூட்டம். ஐந்தரை மணிக்கு பண்ணை திறப்பு விழா. ஆறரை மணிக்கு காரில் பயணம். இரு நூறு மைல் தொலைவில் உள்ள வானொலி நிலையம். புரோகிதர் குறித்த முகூர்த்தத்தில் திறப்பு விழா. இதையெல்லாம் ரேடியோவில் கவர் செய்ய வேண்டும். அவருக்குக் காலையில் நடந்த விஷயம் நினைவுக்கு வந்தது. ப்யூனைக் கூப்பிட்டு மெமோ பேடில் பெயரை எழுதி "இவனை வரச் சொல்" என்று சொன்னான்.

ஐந்து நிமிடங்கள் கழித்து ஒரு இளைஞன் வந்தான். இருபத்தி இரண்டு வயது இருக்கும். பெல்பாட்டம் போட்டுக் கொண்டிருந்தான். கண்களில் பயம் தென்பட்டுக் கொண்டிருந்தது.

"புஷ்பவிலாபத்தில் முதல் பாகம் எது என்று உனக்குத் தெரியாதா?"

அவன் பதில் சொல்லவில்லை.

"ரிக்கார்டை வைக்கும்போது எது முதல் பாகம் எது அடுத்தது என்று பார்த்துக் கொள்ள வேண்டாமா?"

திரும்பவும் மௌனம்.

"சரி போ. இனி ஒரு நாளும் இப்படி நடக்கக் கூடாது." ஆங்கிலத்தில் சொன்னான். தப்பித்தோம் பிழைத்தோம் என்று போய்ச் சேர்ந்தான் அவன்.

அடுத்த ஒரு மணி நேரம் வரை அவன் சின்னச் சின்ன வேலைகளை செய்து முடித்தான். பதினொன்றரை மணியானது. எழுந்து வராண்டாவுக்கு வந்தான்.

கீழே புல்தரையில் கும்பல் கும்பலாக மக்கள் அப்பொழுதுதான் அவனுக்கு நினைவு வந்தது. அன்றைக்கு இண்டர்வ்யூ என்று.

அசிஸ்டென்ட் டைரக்டரும், இன்னும் இருவரும் சேர்ந்து இண்டர்வ்யூ நடத்திக் கொண்டு இருந்தார்கள் சாரதி அந்த அறைக்குள் போனான்.

நீண்ட மேஜைக்கு சுற்றிலும் மூன்று பேர் மெம்பர் கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒரு பக்கத்தில் கேண்டி டேட்டுக்காக நாற்காலி போடப்பட்டிருந்தது.

சாரதியைப் பார்த்துவிட்டு அசிஸ்டென்ட் டைரக்டர் எழுந்து கொள்ளப் போனான். அவனை உட்காரச் சொல்லி ஜாடை காட்டிவிட்டு தானும் ஒரு நாற்காலியை இழுத்து போட்டுக் கொண்டு அதில் உட்கார்ந்து கொண்டான்.

மெம்பர்கள் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந் தார்கள். அவள் பதில் சொல்லிக்கொண்டு இருந்தாள்.

"இந்தியாவில் முதல் முதலாக வானொலியின் ஒலி பரப்பு எப்பொழுது தொடங்கிற்று?"

"1942ல் மெட்ராஸ் பிரசிடென்சி ரேடியோ கிளப் மூலமாக."

சாரதி அவளைப் பாராட்டுவது போல் பார்த்தான்.

அவள் தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள், விரல் நகங்களையே பார்த்துக் கொண்டு. சுமார் இருபத்தி இரண்டு வயது இருக்கலாம். முகத்தில் இன்னும் குழந்தைத் தனம் போகவில்லை.

"ரேடியோவின் வரலாற்றைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?"

"1924ல் தொடங்கப்பட்ட ரேடியோ கம்பெனி நிறைய நஷ்டமடைந்து 1927ல் மூடப்பட்டது. பிறகு தொடங்கப் பட்ட கம்பெனி கூட மூடப்பட்டுவிட்டதால், அரசாங்கம் கூட இந்த நிறுவனத்தை நிரந்தரமாக நிறுத்திவிடலாமா என்று நினைத்தது. ஆனால் மேலும் இரண்டு ஆண்டு களுக்குப் பிறகு ரேடியோவை வாங்கியவர்களின் எண்ணிக்கை 1600க்கும் மேற்பட்டு விட்டிருந்ததால் கொஞ்சம் லாபம் வந்தது. இந்தியாவில் ரேடியோ வளர்ச்சி அடைந்ததற்குக் காரணம் சர்தார் வல்லபாய் பட்டேல். 1934ல் ஆயிரத்து அறுநூறு ரேடியோக்கள் இருந்தன. பதினாறு ஆண்டு களுக்குள் 5,46, 319 ஆக உயர்ந்தது. இந்தச் சமயத்தில் ரேடியோ சிலோன் தொடங்கப்பட்டது. நம்மைவிட அவர் களது நிகழ்ச்சிகள் அதிகமாக பாபுலராக இருந்தது. இந்திய ரேடியோ நிர்வாகத்தினர்களுக்கு கவலையைத் தந்தது. அதன் காரண மாக 1957ல் விவித பாரதி பிறந்தது. ஒரு காலத்தில் சிறிய முதலீட்டுடன் தொடங்கப்பட்ட வானொலி நிலையம் இப்பொழுது மனிதனின் வாழ்க்கையில் ஒரு பகுதியாக மாறிவிட்டது. ஆனால் இதற்குப் பின்னால் ஐம்பதாண்டு வரலாறு இருக்கிறது."

வரலாறு என்ற சொல்லை அவள் அழுத்தி உச்சரித் துச் சொன்னதைக் கேட்டு அவ்வறையில் இருந்த நிசப்தம் கூட ஒரு விதமான திருப்தியைப் பெற்றது. அறையில் இருந்த நால்வரும் வினாடி நேரம் மௌனம் வகித்தார்கள். இதைத்தான் வாயடைத்துப் போவது என்பார்களோ என்று நினைத்துக் கொண்டான் சாரதி.

சாரதி அவளைக் கூர்ந்து பார்த்தான். சிலரை
பார்த்ததுமே காதலிக்க வேண்டும் என்று தோன்றும். சி
சிலரையோ கௌரவமான முறையில் மதிக்க வேண்டு
என்று தோன்றும். சிலரைக் காரணமில்லாமலேயே வி
விலகிப் போய்விட வேண்டும் போல் தோன்று
அவளைப் பார்த்தால் அவனுக்கு இவை எதுவுமே ஏற்ப
வில்லை. பிடித்துப் போய் விட்டது.

இப்படிப்பட்ட மகள் இருந்தால் எவ்வளவு நன்றா
இருக்கும் என்ற உணர்வு. உணர்வுகளுக்கும் வயதிற்கு
சம்பந்தம் இல்லை.

“என்னம்மா? வானொலி நிலையத்திற்கு வர
போகிறோமே என்று அதன் வரலாற்றை உருப் போட்டு
கொண்டு வந்தாயா?”

அவள் பதில் பேசவில்லை.

“உங்கள் ஹாபி என்ன?”

“படிப்பது.”

“உங்கள் அபிமான எழுத்தாளர் யார்?

அந்தக் கேள்வி அவளைக் கொஞ்சம் சங்கடத்தி
ஆழ்த்தி விட்டது போலும். தயங்கினாள். “அபிமான எழு
தாளர் என்று யாரும் இல்லை. ஒரு எழுத்தாளரின் ஒ
கதை உயர்வாய் இருக்கலாம். மற்றொன்று சுமாரா
இருக்கலாம்.”

முகவாயின் கீழே கையை வைத்துக் கொண்
அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் சாரதி. அவ



வட்டமான முகத்தையோ, அப்பாவித்தனமான கண்களையோ இல்லை. அவள் முகத்தில் ஏதோ புனிதம் இருந்தது. ஆனால் இறுக்கமான உதடுகள் உறுதியைக் காட்டிக் கொண்டிருந்தன. பெப்பர்மெண்ட் எதிரே இருந்தாலும் கேட்டு வாங்கிக் கொள்வதற்கு சக்கோஜப்படும் சிறு குழந்தையைப் போல் தென்பட்டாள். அவனுக்கு இரக்கம் பிறந்தது.

நாட்டில் புத்திசாதுரியம் உள்ளவர்கள் எல்லோரும் எதற்குமே பயன்படாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

மெம்பர் மற்றொரு கேள்வியைக் கேட்கத் தயாரானார். சாரதி அவரை எரிச்சலுடன் பார்த்தான். எப்படியும் வேலையைத் தரப் போவதில்லை. அப்படியிருக்கும் போது ஏன் தொல்லை கொடுக்க வேண்டும் என்பது போல் இருந்தது அவன் பார்வை.

அவனுடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டு விட்டாற்போல் அசிஸ்டெண்ட் டைரக்டர் நாற்காலியில் பின்னால் சாய்ந்துகொண்டு, “நல்லது போயிட்டு வாம்மா” என்றார்.

அவள் எழுந்து வணங்கிவிட்டு போகப் போன பொழுது ஒரு மெம்பர், பெயர்கள் இருந்த லிஸ்ட்டை பார்த்துவிட்டு, “உன் பெயர் என்னவென்று சொன்னாயம்மா?” என்று கேட்டார்.

“ராதை” என்றாள் அவள் திரும்பிக் கொண்டே.

* * *

பார்த்தசாரதி தன்னுடைய கேபினெட்டில் உட்கார்ந்து கொண்டு கடைசி தடவையாக நிகழ்ச்சி நிரலை பார்வையிட்டுக் கொண்டிருந்தான். பிரதமர் வரப்போகும் விமானம் இன்னும் அரை மணி நேரத்தில் வந்து சேர்ந்துவிடும். விசிட்டர்கள் யாரையுமே உள்ளே விட வேண்டாம் என்று சொல்லிவிட்டான். டைரக்டரை சந்திப்பதற்காக விசிட்டர்ஸ் யாரும் அவ்வளவாக வர மாட்டார்கள். பப்ளிக்ரிலேஷனை கடைபிடிப்பதற்காகவே அவன் நிறைய பேருடன் பேச வேண்டியிருக்கும்.

அவனுடைய பி.ஏ. போன் செய்து பிரதமரின் விமானம் டில்லியிலிருந்து கிளம்பிவிட்டதென்று சொன்னான்.

அவன் அறைக்கு முன்னால் ப்யூன் தூங்கி வழிந்தபடி உட்கார்ந்திருந்தான். யாரோ தோளைத் தட்டி எழுப்பியதும் திடுக்கிட்டு எழுந்திருந்தான். எதிரே நின்று கொண்டிருந்த கிழவனைப் பார்த்துவிட்டு நெற்றியைச் சுளித்தான்.

"டைரக்டரை சந்திக்கணும்."

ப்யூன் மறுத்து தலையை அசைத்துவிட்டு, "அவரை இப்போ சந்திக்க முடியாது" என்றான்.

"என் உத்தேசம் யாராவது வந்தால் அவருக்கு தகவல் தெரிவிப்பதற்காகத்தான் நீ இங்கே நியமிக்கப் பட்டிருக்கிறாய். அந்த வேலையை மட்டுமே நீ செய்தால் போதுமானது. அப்படிச் செய்யாத பட்சத்தில் உன் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்."

ப்யூன் புரியாமல் குழப்பத்துடன் பார்த்துவிட்டு, "உங்களுடைய பெயர்?" என்று கேட்டான்.

அவன் சிரித்து விட்டு கையிலிருந்த மோதிரத்தை எடுத்து தந்துகொண்டே, "போ ஆஞ்சநேயா! உள்ளே எடுத்துப் போய் காட்டு. இதுதான் என் விசிட்டிங் கார்ட்" என்றான்.

ப்யூன் உள்ளே போய் சொன்னதும் பார்த்தசாரதி, "நோ... நோ. இப்போ யாரையும் பார்க்க மாட்டேன். நாளைக்கு வரச் சொல்லு" என்றான்.

ப்யூன் மோதிரத்தை அவனுக்கு முன்னாலிருந்த மேஜை மேல் வைத்துவிட்டு, "இதுதான் அவருடைய விசிட்டிங் கார்டாம் சார்" என்றான்.

பார்த்தசாரதியின் முகத்தில் ஆச்சரியம் இடம் பெற்றது. மோதிரத்தை கையில் எடுத்துப் பார்த்தான். அதில் டி.எஸ். என்று இருந்தது. என்ன விஷயம் என்று தெரிந்து கொண்டு விடுவோம் என்று எண்ணி, "வரச் சொல்" என்றான்.

இரண்டு நிமிடங்கள் கழித்து அக்கிழவன் பார்த்தசாரதிக்கு எதிரேயிருந்த இருக்கையில் உட்கார்ந்திருந்தான்.

"யார் நீங்க? என்ன வேண்டும்?" புருவத்தை சுளித்துக் கொண்டே கேட்டான் பார்த்தசாரதி. பிராக்டிகல் ஜோக் அடிப்பவர்களைக் கண்டாலே எரிச்சல் அவனுக்கு.

"என் பெயர் டி.எஸ். அ.ஆ.அ.இ. சங்கத்தின் பிரசிடெண்ட். அதாவது அனாதைகளையும் ஆபத்தில் இருப்பவர்களையும் அப்பால் இழுக்கும் சங்கம்."

பார்த்தசாரதியின் கையிலிருந்த மோதிரம் நழு
மேஜை மீது விழுந்தது. வியப்புடன் அவனைப் பார்த்தா
"என்ன வேண்டும் உங்களுக்கு?"

டி.எஸ். சிரித்துவிட்டு, "விஷயத்திற்கு வந்து வி
கிறேன்" என்றான். "உங்கள் ஆபீசில் இன்றைக்கு இன்ட
வ்யூ நடந்தது. காலியான போஸ்டுகள் நான்கு. ஆனா
இந்த நான்கு போஸ்டுகளிலும் நான்கு பேர் அதற்கு
நிரப்பப்பட்டு விட்டார்கள், சிபாரிசு உள்ளவர்கள். நா
சொல்லும் நபருக்கு வேலையைக் கொடுக்கணும்
என்றான் கிழவன் தாழ்ந்த குரலில்.

பார்த்தசாரதி மணியை அழுத்திவிட்டு, "இனி நீங்க
போகலாம்" என்றான்.

கிழவன் நகரவில்லை. "நீங்கள் பெல் அடித்தி
அரை நிமிஷத்தில் ப்யூன் வந்துவிடுவான். அவனை போ
சொல்லுங்கள். நான் சொல்வதை அவன் கேட்
விட்டால் உங்கள் மேல் இருக்கும் மதிப்பு பஞ்சாய் பற
போய்விடும்" என்றான்.

அதற்குள் ப்யூன் வந்தான். பார்த்தசாரதி அவனை
போகச் சொல்லிவிட்டான்.

"குட்" என்றான் கிழவன். என் கேண்டிடேட்டுக்கு
வேலையை தரக் கூடியதே நீங்கள்தான் என்று தெரி
பிறகு அ.ஆ.அ.இ. சங்கம் உங்கள் நடவடிக்கைகளையு
உங்கள் கடந்த வாழ்க்கையையும் சோதித்தது. இந்த இரண்
நாளும் உங்கள் வீட்டில் நடந்த ஒவ்வொரு விஷயத்தையு
சினிமாவில் பார்ப்பது போல் எங்கள் ஆட்கள் பார்த்தா
கள், உங்கள் தனிமை, உங்கள் தினசரி நடவடிக்கைக

அத்தனையும். கொஞ்சம் தண்ணீர் குடிக்கலாமா?" என்று பதிலுக்காக எதிர்பார்க்காமல் மறுபடியும் தொடர்ந்தான்.

"சரியாய் பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்னால் நவம்பர் ஆறாம் தேதி உங்களுக்கு கல்யாணம் நடந்தது. உங்கள் மனைவியின் பெயர் நிர்மலா. உங்களுக்கு முன்னால் அவளுக்கு ஒரு காதலன் இருந்தான். நவம்பர் பன்னிரெண்டாம் தேதி உங்களுக்கு முதலிரவு நடந்தது. அன்றிரவு நீங்கள் தோல்வியடைந்து விட்டீர்கள். 'இதென்னது? இது கூடவா தெரியாது. பெரிய ஆண்மகன்!' என்று உங்கள் மனைவி சொன்னதுதான் நீங்கள் தோல்வியடைந்ததற்குக் காரணம். மென்மையான சுபாவம் படைத்த உங்கள் மனதின் மீது அந்த வார்த்தைகள் எவ்வளவு தீவிரமாக வேலை செய்தது என்றால், அதற்குப் பிறகு தொடர்ந்த உங்கள் மூன்று வருட விவாக வாழ்க்கையிலும் அவளிடம் நீங்கள் நெருக்கமாக முடியவில்லை. அவளை நெருங்கும் போதெல்லாம் அந்த வார்த்தைகள் நினைவுக்கு வந்து பயந்து எதையுமே சாதிக்க முடியாமல் போய் விட்டீர்கள். அதற்குப் பிறகு மூன்று வருடங்கள் கழித்து உங்கள் மனைவி பிரசவத்தில் இறந்துவிட்டாள். ஆனாலும் அதற்கு நீங்கள் அவ்வளவாக வருத்தப்படவில்லை. காரணம் அவள் கருவுக்குக் காரணம் நீங்கள் இல்லை என்று உங்கள் இருவருக்குமே தெரியும். மொத்தத்தில் நீங்கள் வாழ்க்கையில், ஆண்களை என்னவென்று சொல்வார்களோ தெரியாது. ஆனால் பெண்களை 'கன்னி' என்பார்கள். அப்படியே இருந்து விட்டீர்கள்."

பார்த்தசாரதியின் முகம் சிவந்து விட்டது. பற்களை கடித்துக் கொண்டே, "என் டைரிகளை எல்லாம் படித்தீர்களா?" என்றான்.

டி.எஸ். தலையை அசைத்துவிட்டு, "மன்னித்து கொள்ளுங்கள். நாங்கள் இன்னும் நிறைய செய்தி கிறோம். பெண்கள் விஷயத்தில் உங்களுக்கு ஆர்வ இல்லாமல் இல்லை. கேவலம் பயத்தால்தான் நீங்க சக்தியை இழந்துவிட்டீர்கள்" என்றான்.

பார்த்தசாரதியின் முகம் வெளிறிப் போய் விட்ட கைகளால் முகத்தை மூடிக் கொண்டான்.

அவனைப் பார்த்தால் டி.எஸ்ஸுக்கு இரக்கமா இருந்தது. "இதெல்லாம் சொல்லி உங்களை வருத்தப்ப வைக்கணும் என்பது என் நோக்கமில்லை. என வேண்டியது வேலை. அவ்வளவுதான்."

பார்த்தசாரதிக்கு சமாளித்துக் கொள்வதற்கு ஐ நிமிடங்கள் பிடித்தன. "சொல்லுங்கள். உங்கள் கேன் டேட் யார்?"

டிஎஸ். சிரித்துவிட்டு, "அந்த கேண்டிடேட் யாரெ சொல்லிவிட்டால் பின்னால் நீங்கள் தொல்ல கொடுக்கக் கூடும். சாரி. பெயரைச் சொல்ல மாட்டே நான்கு இடங்களுக்கும் மெரிட் கேண்டிடேட்டுகள எடுத்துக் கொள்ளுங்கள். என் கேண்டிடேட் அ நால்வரில் ஒருத்தராக இருப்பாங்கன்னு நான் நம்புகிறே என்று இருக்கையை விட்டு எழுந்திருந்து, "என் மோதிர என்றான்.

"போய் வருகிறேன்" என்று சொல்லிக் கொண் கையை நீட்டிய டி.எஸ். "நாம்ப ஒன்றும் எதிரி இல்லையே?" என்றான்.

"இல்லை."

"குட்."

## 5

"ஆச்சு... ஆச்சு" என்று தும்மினாள் ராதை. "வீராங்கனை போல் ஏரியில் குதிக்காமல் இருந்தால் நன்றாக இருந்திருக்கும் பாட்டீ."

"பக்கத்து வீட்டிலிருந்து கொஞ்சம் மிளகு வாங்கிக் கொண்டு வருகிறேன்."

"பாட்டீ! அரிசி கேட்டோம். கரித்தூள் கேட்டோம். உப்பு கேட்டோம். பணம் கேட்டோம். இப்போ போய் மிளகைக் கேட்டால் இவங்க தேவைக்கு மீறி சொகுசான வாழ்க்கைக்கு தாவிட்டாங்கன்னு நினைச்சுக்க மாட்டாங் களா?" என்று சிரித்துவிட்டு, "ஆண்டிபயாடிக்ஸ் போட்டால் சரியாகிவிடும்" என்றாள்.

"அது என்ன?"

"ரொம்ப விலை உயர்ந்தது பாட்டீ! உனக்குப் புரியாது."

"என்னவோ போ. உன்னை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டால் போதும். எனக்கு வேறு எதுவும் வேண்டாம்."

"பிடித்துக் கொடுத்துவிடலாம் பாட்டீ. சேகர் வரட்டும்."

பாட்டி சட்டென்று குனிந்து, "சேகரா? அது யார்? எங்கிருந்து வருவான்?" என்றாள்.

ராதை ஏதோ சதித்திட்டம் தீட்டுவதுபோல் அதே அளவுக்கு ரகசியமான குரலில், "வருவான் பாட்டி! இன்னொரு நாவலிலிருந்து தாவி வருவான். அப்பொ என் பெயரை ஜெயந்தி என்று மாற்றிக் கொள்கிறேன்."

"ஜெயந்தியா? அது யார்?" என்று கேட்கப் போன பொழுது போஸ்ட்மேன் கவர் ஒன்றைக் கொண்டுவந்து தந்தான். வீட்டுக்காரன் அனுப்பிய நோட்டீஸாக இருக்குமோ என்று சந்தேகத்துடன் நடுங்கும் கரங் களோடு பிரித்தாள். பாதி படித்துவிட்டு "பாட்டீ!" என்று ஒரு கத்து கத்தினாள்.

பயந்தாலும், நடுக்கத்தாலும் ஒடுங்கிக் கொண்டிருக் கும் பறவை ஒன்று திடீரென்று எம்பி பறந்தாற்போல். சுதந்திரமாக வானத்தை நோக்கி... திஸ் அக்ரிமெண்ட் எண்டர் வித் பிரசிடென்ட் ஆஃப் இந்தியா... பிரசி டென்ட்... பிரசிடென்ட்.

"உனக்கு எங்கே வேண்டும் அம்மா வேலை?"

"பிரசிடென்ட் ஆஃப் இந்தியா ஆபிசில் சுவாமீ!"

"வேலை எந்த இடத்தில் கிடைத்திருக்கு?"

"ஸ்டேஷனில் பாட்டீ."

"எந்த ஸ்டேஷன்? ரயில்வே ஸ்டேஷனா?"

"நல்ல வேளை. ஃபையர் ஸ்டேஷனா என்று கேட்காமல் போனாயே? ஸ்டேஷன் என்றால் ரேடியோ



ஸ்டேஷன். இப்போ போய் வா பாட்டீ. பக்கத்து வீட்டிற் குப் போய் மிளகு கேள். அதோடு சேர்த்து பாலும் கூட."

"ரேடியோ ஸ்டேஷனா? ஐயோ! ரொம்ப தொலைவு ஆச்சே இங்கேயிருந்து?"

"பத்து கிலோ மீட்டர்தானே? வயிற்றுப் பாட்டுக்காக ஆயிரக் கணக்கான மைல்கள் பயணம் செய்கிறார்கள். ஆனாலும் பயமில்லை பாட்டீ. என் சிநேகிதி ஜெயா கூட அங்கேதான் வேலை செய்து கொண்டிருக்கிறாள்."

* * *

"குட் மார்னிங் டாக்டர்! என் பெயர் ஜெயா. இவர்கள் இரண்டு பேரும் என் நண்பர்கள். அதைவிட இவர்களைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. என் பிரச்சனை சஸ்பெக்டெட் பிரக்னென்ஸி. நாலாவது மாதம் என்று சந்தேகம். முதலில் இது உண்மையா இல்லையா என்று பரிசோதித்துச் சொல்லணும். அதற்குப் பிறகு அதுக்கு... அதாவது என் கர்ப்பத்துக்குக் காரணம் இவங்க இரண்டு பேரில் யாருன்னு தீர்மானமாக சொல்லி விட்டால் அபார்ஷனுக்கு ஆகும் செலவை ஏற்றுக் கொள்பவனை இருக்கச் சொல்லிவிட்டு அடுத்தவனை அனுப்பி வைத்து விடுகிறேன்."

தான் கேட்டுக் கொண்டிருப்பது கனவா நினைவா என்று புரியாமல் வாயடைத்துப் போய் நின்று விட்டார் அந்த டாக்டர். ஒரு நிமிஷம் கழிந்து சுதாரித்துக் கொண்டு அவள் நண்பர்களை நோக்கித் திரும்பினார். 'இதென்ன தலையெழுத்து கடவுளே!' என்பது போல், ஆறு மாதங் ...ன்னால் செய்த காரியத்திற்காக இப்போ

பச்சாதாபம் அடைந்து கொண்டிருப்பது போல் இருந்தது அவ்விருவரையும் பார்த்தால்.

"இவர்கள் விஷயத்தை அப்புறமாகச் சொல்கிறேன். நாளைக்கு வரச் சொல்லுங்கள். முதலில் உங்களைப் பரிசோதிக்கிறேன்" என்று சொன்னதுமே தப்பித்தோம் பிழைத்தோம் என்று போய்ச் சேர்ந்தார்கள் அவர்கள்.

பிறகு டாக்டருடன் சேர்ந்து உள்ளே போனாள் ஜெயா. ஐந்து நிமிடங்கள் கழித்து இருவரும் வெளியே வந்தார்கள். டாக்டர் சொன்னார். "கங்கிராட்சுலேஷன்ஸ்! உங்கள் சந்தேகத்திற்கு ஆதாரமில்லை."

ஜெயா சிரித்துவிட்டு "தாங்க்ஸ்" என்றாள். "பாவம்! அவங்க இரண்டு பேரும் பயந்து செத்துக் கொண்டு இருப்பார்கள். போய் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன். பை தி பை உங்கள் ஃபீஸ்?" என்றாள்.

"கொஞ்ச நேரம் இருந்துவிட்டு போங்க. ஆஸ்பத்திரி நேரம் முடிந்து விட்டது. நோயாளிகள் யாரும் வர மாட்டார்கள்."

அவள் உதட்டில் நெளிந்து கொண்டிருந்த சிரிப்பு மாயமாகி விட்டது வினாடி நேரம். வினாடி நேரம்தான். உடனே சுபாவத்தின்படி அது திரும்பவும் வந்து முகத்தில் குடிகொண்டு விட்டது.

"எதுக்கு டாக்டர்?"

டாக்டர் உற்சாகத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்து "சும்மா பேசிக் கொண்டிருப்போம்" என்றார்.

"எதைப் பற்றி?"



இந்தக் கேள்வியை அவர் எதிர் பார்க்கவில்லை. கொஞ்சம் பின்வாங்கியவராய், "ஒரு பெண்ணும் பையனும் எதைப் பற்றி பேசிக் கொள்வார்கள்? எதுவாக இருந்தாலும் சரி" என்றார்.

பள்ளிக் கூடத்திற்கு போகும் இரண்டு குழந்தைகளுக்கு தந்தையாக இருக்கும் அந்த டாக்டர் 'பையன்' எப்படி ஆவார் என்று புரியவில்லை அவளுக்கு.

ஆனாலும் அவள் அதைப்பற்றி யோசிக்க முயற்சி செய்யவில்லை. யோசிப்பதற்கு எதுவும் இல்லை. ஆண்களின் வாழ்க்கை பரஸ்த்ரீ மோகம் நிறைந்ததுதான் என்று நினைத்துக் கொண்டாள்.

அவள் யோசித்துக் கொண்டு இருக்கும போது டாக்டர், "சொல்லுங்கள், எந்த விஷயத்தைப் பற்றியாவது. எங்கே வேலை செய்யறீங்கள்?" என்று காலை முன்னால் நீட்டி அவள் காலைத் தொட்டார்.

அவள் சட்டென்று காலை பின்னால் இழுத்துக் கொள்ளவில்லை. 'உன் விஷ்யத்தை நான் கவனித்து விட்டேன்' என்பதுபோல் நேருக்கு நேர் பார்த்தாள். அதனால் கொஞ்சம் பயந்தார். அவள் முகத்தில் அதே சிரிப்பு. குழந்தைகள் செய்யும் சேட்டையைப் பார்த்து தாய் சிரிப்பது போல்.

அவரைத் தூண்டிவிடுவது அவள் நோக்கமில்லை. ஆண்களை தனக்குப் பின்னால் அலைய வைத்துக் கொண்டிருக்கும் பெண்களைக் கண்டால் அவளுக்கு வெறுப்புகூட. அவர் மனநிலையை எடைபோட முயன்று கொண்டிருந்தாள், அவ்வளவுதான். தனக்கு கற்பின் மீது

நம்பிக்கை இல்லை என்று அவருக்குத் தெரியும். சற்று முன்னால்தான் அவளுடைய இரு நண்பர்களை பார்த்திருக்கிறார். வேடிக்கை என்னவென்றால் அவர் மூன்றாவது ஆளாக ஆவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார். இங்கே அன்பு, காதல், நட்பு எதுவுமே இல்லை. கேவலம் அனுபவத்திற்காக அவ்வளவுதான். அந்த அனுபவம் கடைத்தெருவில் இருபது ரூபாய்க்கு அவருக்கு கிடைக்குமே. ஆனால் அதை அவர் விரும்பமாட்டார். ஒரு படித்த பெண், வேலைக்கு போய்க் கொண்டிருப்பவளாக இருந்தால் அவருடைய ஈகோ திருப்தியடையும். அவருடைய படிப்பு, அழகு, பணம் இதையெல்லாம் பார்த்து அவர் மேல் ஒரு பெண் மையல் கொண்டு விட்டாள் என்றால் அவருக்கு அதில் ஒரு சந்தோஷம்.

"என் வார்த்தைகள் உங்கள் காதில் விழவில்லை போலிருக்கு."

அவள் திடுக்கிட்டு, "இல்லை இல்லை. ஏதோ யோசித்துக் கொண்டு இருந்தேன்" என்று சொல்லிவிட்டு, "நான் வானொலி நிலையத்தில் வேலை பார்க்கிறேன்" என்று பதில் சொன்னாள்.

தொடர்ந்து நிசப்தம்.

அவள் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்துவிடவே, "ஏதாவது விஷயத்தைப் பற்றிப் பேசுங்கள்" என்றார் அவர்.

"வானொலி நிலையத்தைப் பற்றி சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள்."



"சுற்றிலும் அழகான தோட்டம். நடுவில் கட்டடம். ஏறக்குறைய பாதி அறைகள் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டவை. வெளியே தென்படும் அழகான சூழ்நிலை உள்ளே இருக்காது. அரசியல் போக்கு, இன வேறுபாடு எல்லாமே அங்கே குடி கொண்டிருப்பது போல் தோன்றும். ஆனால் அங்கேயும் நல்ல மனிதர்கள் இல்லாமல் இல்லை. நேர்மையோடு நல்ல நிகழ்ச்சிகளை தயாரிக்க வேண்டும் என்று நினைப்பவர்களும், வேலையில் ஆர்வம் உடையவர்களும் இருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக அவர்கள் முக்கியமான பொசிஷனிலிருந்து தள்ளி வைக்கப்பட்டிருக்கிறார்கள். எங்கள் ஸ்டேஷன் டைரக்டர் பார்த்தசாரதி உண்மையில் தொழிலுக்கே தன்னை அர்ப்பணம் செய்து கொண்டிருப்பவர். அரும்பாடுபட்டு இந்த ஸ்டேஷனுக்கு ஒரு மதிப்பை சம்பாதித்துத் தரவேண்டும் என்று அவர் முயன்று கொண்டிருக்கும் போது, அவருக்குக் கீழே இருக்கும் நபர்கள் அதே அளவுக்கு சிரமத்தை மேற்கொண்டு அதைக் கெடுப்பதற்கு முயன்று கொண்டிருப்பார்கள்.

"எங்கள் அலுவலகத்தில் ஒவ்வொருத்தரின் முகத்திலும் அலட்சியம், விரக்தி போன்ற உணர்வுகள்தான் பிரதிபலித்துக் கொண்டிருக்கும். மாறி மாறி பதவிக்கு வந்து கொண்டிருக்கும் அமைச்சர்களின் சொற்பொழிவுகளைப் பற்றி எழுதி எழுதி, கிராமிய நிகழ்ச்சிகளை புதுசாக யோசித்து மனசாட்சியை வஞ்சித்துக் கொள்ளும் ஊழியர்கள் [illegible]ரும் நடைபிணமாகிக் கொண்டிருக்கிறார்கள். புது விஷயங்களைப் பற்றி யோசிப்பதற்காகவே அதிக நேரத்தை செலவழித்துக் கொண்டு இருப்பதால்

அவர்களுடைய மூளை சாரமிழந்த நிலம் போல் ஆகி விட்டது. எந்த நிமிஷம் என்ன தவறு நடக்குமோ, மேலிருந்து யாருக்கு எப்பொழுது மெமோ வருமோ என்ற பயத்தால் அவர்களின் கற்பனைத் திறன் குறைந்து போய் விட்டது. எங்கள் விவகாரங்களில் லஞ்ச ஊழல் பெரிய அளவில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஒரு பெரிய மனிதரைக் கொண்டு பேச வைத்து அவருக்கு சீக்கிரத்தில் செக் கிடைக்கும்படி செய்ய வேண்டும் என்று புரோகிராம் எக்ஸிக்யூடிவ் அவசரப்படுவார். கணக்கு வழக்கை பார்த்துக் கொள்ளும் கிளார்க் தன் மைத்துனர் பசுக்கள் புல் மேய்வதைப் பற்றி எழுதிய கட்டுரைக்கு பத்து நிமிடங்கள் ஒதுக்கும்படி டிமாண்ட் செய்வார். இல்லாவிட்டால் ஊரிலிருந்து வந்திருக்கும் தன் உறவினர்களின் பெயர்கள் ஜனரஞ்சனி நிகழ்ச்சியில் வரவேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பார். யாரையும் மறுத்து விடவும் முடியாது. தொடர்ந்து இப்படியே நடந்தால் தரம் எப்படி இருக்கும்? எங்கிருந்து வரும்? ஸ்டேஷன் டைரக்டருக்கும், இன்ஜினியரிங் இன்சார்ஜுக்கும் யார் உயர்ந்தவர்கள் என்று சதா போராட்டம் நடந்து கொண்டே இருக்கும். இவர்கள் எல்லோரையும் விட மிஞ்சியவர்கள் ட்யூட்டி ஆபீசர்கள். வானொலியில் என்ன ஒலிபரப்பு ஆகிக் கொண்டிருக்கிறது என்ற விஷயத்தையே பொருட்படுத்த மாட்டார்கள். சில பேருக்கோ தமிழே சரியாக வராது."

டாக்டர் சங்கடத்தில் நெளிந்தார். உண்மையில் அவர் அவளிடம் பேச நினைத்தது இதைப் பற்றி அல்ல.

அவளை ரொம்ப சுலபமாக சினிமாவுக்கும், பிறகு டின்னருக்கும் அழைத்துப் போய்விடலாம் என்று நினைத்திருந்தார். அவள் இப்படி உப்பு சப்பில்லாத சப்ஜெக்ட்டைப் பற்றிப் பேசியது அவருக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. தன்னை அழவைப்பதற்காகத்தான் அவள் இதையெல்லாம் பேசுகிறாள் என்று அவருக்குத் தெரியாது.

"ஹெரால்ட் ராபின்ஸ் ஏதாவது படிச்சிருக்கீங்களா?" என்று கேட்டார் பேச்சை மாற்றுவதற்காக.

அவளுக்கு சிரிப்பு வந்தது. ஒவ்வொரு ஆணின் போக்கும் இதுதான். ஆனால் தேர்ந்தெடுக்கும் வழிதான் வேறு. தான் போக விரும்பும் இடத்தை சென்று அடைவதற்கு சிலருக்கு மெதுவாகவும், வேறு சிலருக்கு வேகமாகவும் முடிகிறது.

"படித்திருக்கிறேன். ஏன்?" என்றாள்.

"நன்றாக இருக்கும் இல்லையா?"

"என்ன இருக்கு அதில்?"

"செக்ஸ்!" என்று ஒருவிதமாக சிரித்துவிட்டு காலைக் கொஞ்சம் முன்னால் நீட்டி, "மிஸ் ஜெயா! ஐ லவ் யூ" என்றார்.

அவள் அவரை நிமிர்ந்து பார்த்தாள். அவளுக்கு சிரிப்புதான் வந்தது. லவ்... லவ்! அந்த வார்த்தையை மட்டும் அவர் பயன்படுத்தாமல் இருந்தால் அவள் அவர் மீது கொஞ்சமாவது கருணை காட்டியிருப்பாளோ என்னவோ. அவளுக்கு ரொம்பவும் எரிச்சலை ஏற்படுத்தும் வார்த்தை அது ஒன்றுதான்.

"உண்மையிலேயே நீங்கள் என்னைக் காதலிக்கு—

"உண்மையிலேயே நீங்கள் என்னைக் காதலிக்கு—" hmm

லிஸ்டில் ஒரு எண்ணிக்கையை சேர்த்துக் கொள்வ
காகத்தானே தவிர, நமக்குள் அறிமுகம் ஏற்பட்டு இருப
தைந்து நிமிஷம் கூட ஆகவில்லை. அதற்குள்ளேயே கா
என்பது தோன்றிவிட்டது என்றால் அது மிகவும் மலிவா
சரக்காய்தான் இருக்கணும். உங்களுக்கு உண்மையாகவே
நான்தான் வேண்டுமென்றால் அதற்கு காதல் என்ற ஆ
வஞ்சனை எதற்கு?"

"நீங்க ரொம்பவும் நன்றாக பேசறீங்க. இப்போ எ
கண்கள் திறந்து கொண்டுவிட்டன. உங்களை சாதார
மாக எண்ணிவிட்டதற்கு மன்னியுங்கள். நாம் உண்மை
யான சிநேகிதர்களாக இருக்கலாம். மாலையில் சினிமா
வுக்குப் போகலாம்."

"ஆனால் வர்க்கிங் விமென்ஸ் ஹாஸ்டலில் இர
ஒன்பதடித்த பிறகு உள்ளே வரவிடமாட்டாங்களே!"

"எங்கள் வீட்டில் தங்கிவிட்டு காலையில் போய்
கொள்ளலாம். அதற்கென்ன வந்தது?"

"உங்கள் மனைவி?"

"பிறந்த வீட்டிற்கு போயிருக்கிறாள்."

"இரவு நேரத்தில் தனியாய் நம்மிருவரும் ஒரே
வீட்டில் இருந்தால்..." அவள் சிரித்தாள். "அதுவும் எனக்கு
ஆண்களைக் கண்டால் ரொம்பவும் பிடிக்கும்."

அவள் சிரிப்பைப் பார்த்து மேலும் தைரியமடைந்
"அதைவிட வேறு என்ன வேண்டும்" என்று உற்சாக
தோடு சொன்னார்.



ஜெயா அவரை இரக்கத்தோடும், யோசனை யோடும் பார்த்து விட்டு, "இன்று மாலையில் சிநேகம், இரவில் செக்ஸோடு சேர்த்து நாளைக் காலையில் காதலாக மாறிவிடும் இல்லையா" என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள். "மூன்று வெவ்வேறு வார்த்தை களை ஒன்றாகச் சேர்ப்பது எனக்குப் பிடிக்கவில்லை. டாக்டர்! எதற்கும் உணர்வு என்று ஒன்று இருக்க வேண்டும் என்பது என் உத்தேசம். அந்த உணர்வு உங்க ளைப் பார்த்தால் குறைந்த பட்சம் உங்கள் மனைவிக்குக் கூட ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை" என்று சொல்லிவிட்டு வெளியே போகப் போனவள் நின்று "உங்கள் ஃபீஸ்?" என்றாள்.

"ஐம்பது ரூபாய்." ஹீனஸ்வரத்தில் சொன்னார்.

அவள் பர்ஸிலிருந்து ரூபாயை எடுத்து அவர் மேஜை மீது வைத்துவிட்டு, "தயவு செய்து இனி யாரிடமும் உண்மையான நட்பைப் பற்றி பேசாதீங்க" என்று சொல்லி விட்டு போய்விட்டாள்.

வெளிறிப் போய்விட்ட முகத்துடன் டாக்டர் அந்த பணத்தையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

அவள் தெருவில் நடந்து கொண்டிருந்தாள் என்ற பெயரே தவிர, அவள் மனம் முழுவதும் எரிச்சல் பரவி யிருந்தது. நட்பு, காதல் என்ற வார்த்தைகள் அவளை மிகவும் எரிச்சலடையச் செய்து கொண்டிருந்தன. இப்பொழுதெல்லாம் காண்ட்ரடிக்ஷன் அதிகமாகி விட்டது. கடந்த பத்து வருடங்களாக இல்லாதது! தற்போது அவள் வயது இருபத்தெட்டு. அந்த நாட்களில் இப்படி

யெல்லாம் இல்லை. வாழ்க்கையில் முதலில் வந்த சிநேகிதன் ரொம்ப காஷுவலாக நழுவிக் கொண்டதும் அவன் போக்கு மாறிவிட்டது.

ஆனால் கதைகளில் வருவதுபோல் சினிமாவில் காட்டுவதுபோல் அவளை யாரும் ஏமாற்றவில்லை. ரொம்ப சாதாரணமாகவே, அவள் அங்கீகாரத்துடனேயே அது நடந்தது. த்ரில்லுக்காகவும், புத்தகங்களில் படித்ததெல்லாம் உண்மைதானா என்று தெரிந்து கொள்வதற்காகவும் அவள் அதற்கு சம்மதம் தெரிவித்தாள். ஒரு முறை நடந்த பிறகு சர்வசாதாரணமாகி விட்டது.

யோசனையுடனேயே அவள் ஆபீசிற்கு வந்து சேர்ந்தாள். தன்னுடைய பர்சனல் லாக்கரைத் திறந்து அதிலிருந்து ரிஜிஸ்டர் போன்ற ஒன்றை வெளியே எடுத்தாள். வரிசையாக அதில் பெயர்கள் இருந்தன. 'ஏ' விற்குக் கீழே பதினாலு, 'பி' யின் கீழே பதினாறு. அவள் கணக்கிட்டாள். மொத்தம் முன்னூற்றி இருபத்தி ஆறு. முதல் அனுபவம் நிகழ்ந்த அந்த நாளைப் பார்த்தாள். ஒன்பது வருஷம் இரண்டு மாதங்கள் ஆகியிருந்தன. இன்னும் எட்டு மாதங்களில் நாற்பத்தோரு ஆண்களுடன் அறிமுகம் ஏற்பட்டால் அப்பொழுது சராசரி பத்து நாட்களுக்கு ஒரு புதிய அனுபவம் என்ற விகிதத்தில் ஆகி விடும்.

அவளுக்கு சிரிப்பு வந்தது. மேல்நாட்டில் பிறந்திருக்க வேண்டியவள் அவள். புத்தகத்தை லாக்கருக்குள் வைத்து விட்டு மூடிய போது கதவிற்கு அருகில் சந்தடி கேட்டது. திரும்பிப் பார்த்தாள். ராதை! மலர்ந்த முகத்துடன்.

"வா ராதை! இப்பொழுதெல்லாம் கண்ணிலேயே படமாட்டேங்கிறாயே?" என்றாள்.

ராதை உதட்டில் மலர்ந்த சிரிப்பை அடக்கிக் கொண்டே, "உனக்கு ஒரு த்ரில்லிங் நியூஸ் சொல்லட்டுமா?" என்றாள்.

"நீ கூட த்ரில்லிங் பற்றித்தான் பேசப் போகிறாயா? சொல்லு."

"எனக்கு இங்கேயே வேலை கிடைத்துவிட்டது."

"ஹாய்!" என்று ஜெயா லேசாக கத்திவிட்டு, "முதலில் இண்டர்வ்யூ எப்போது நடந்தது? உனக்கு யார் சிபாரிசு செய்தார்கள்? எனக்குத் தெரியாமல் இதெல்லாம் எப்படி நடந்தது?" என்று கேள்விக்கணைகளைத் தொடுத்தாள்.

ராதை நடந்ததையெல்லாம் சொன்னாள்.

"வா... வா... முதலில் உனக்கு கேண்டீனை அறிமுகம் செய்து வைக்கிறேன். அங்கே சாப்பிட்டால் இனி இந்த ஜென்மத்தில் மறுபடியும் அங்கே சாப்பிடத் தோன்றாது. இந்த ஆஃபீசில் வேலை பார்ப்பவர்களை எல்லோரையும் அறிமுகம் செய்து வைக்கிறேன். எல்லோரும் அவங்க அவங்க துறையில் ரொம்பவும் உயர்ந்தவர்கள். ஆனால் சூழ்நிலை அவர்களை இரை தின்ன பாம்பாய் மாற்றி விட்டது."

இருவரும் கேண்டீனுக்கு வந்து சேர்ந்தார்கள். காபி குடித்துக் கொண்டிருக்கும்போது ஒரு ஆள் வருவதைப் பார்த்துவிட்டு ஜெயா, ராதையின் பக்கம் திரும்பினாள். "அறிமுகங்களை இங்கேயே தொடங்குகிறேன்" என்று

அவனைப் பார்த்து, "என் சிநேகிதி ராதை. இன்றைக்குத் தான் ஜாயின் ஆகியிருக்கிறாள்" என்றாள்.

"ஹௌ ஆர் யூ?" என்று கையை நீட்டினான்.

ஜெயா சொன்னாள். "பூப்போட்ட சட்டை, முகத் தில் எப்போதும் சிரிப்பு, கையில் ஸ்கூட்டர். இவன் பெயர் தாண்டவ கிருஷ்ணன்."

ராதை பயந்தபடி இரு கைகளைக் கூப்பினாள்.

"எங்க அக்காவின் மகள் சுமித்ராவை உங்களுக்குத் தெரியுமா?" முறுவலுடன் கேட்டான் கிருஷ்ணன். ராதை பதில் சொல்லவில்லை. ஜெயா இருவரையும் வியப்போடு பார்த்தாள்.

அவன் போன பிறகு, "உனக்கு இந்த ஆளை முன்னாடியே தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியும்."

"எப்படி?"

"ரோட்சைட் ரோமியோவாக."

## 6

ராதை வேலையில் சேர்ந்து அதற்குள் நான்கு மாதங் கள் ஆகிவிட்டன. அவள் படித்தது பெண்கள் கல்லூரியில். இயற்கையிலேயே பயந்த சுபாவம் கொண்டவளாக இருந்ததால் நாலு பேரோடு கலந்து பழகும் பழக்கம்



ஏற்படவில்லை. இப்பொழுது இத்தனை ஆண்களுக்கு நடுவில் வேலை செய்வது கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. ஆனால் பல ஆண்டுகளாக அனுபவித்து வந்த வறுமையின் துன்பங்கள் பணத்தால் கொஞ்சம் கொஞ்ச மாக கரைந்து வந்ததால் அவள் புதிய உற்சாகத்துடன் இருந்தாள்.

அவளுக்கு வானொலி நிலையம் மிகவும் பிடித்து விட்டது. நாட்டில் பஞ்ச்சுவாலிடிக்கு முக்கியத்துவம் தருகிற காரியாலயம் இது ஒன்றுதான். மக்கள் எல்லோரும் தம் கைகடியாரத்தைக் கூட அதன் நிகழ்ச்சிகளைக் கேட்டு திருப்பி வைத்துக் கொள்வார்கள். எல்லாமே ஒரு ஒழுங்கு முறையின்படி நடந்துவரும்.

தினமும் பத்து மணிக்கு புரோகிராம் எக்ஸிக்யூடிவ் கள் எல்லோரும் சேர்ந்து ஒரு மணி நேரம் மீட்டிங் நடத்தி முந்திய நாள் ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றி அலசுவார்கள். பருமனாக இருக்கும் டேப்புகள்- லைப்ரேரியன் கல்பனா சக்ரவர்த்தி, தமிழ் ஸ்க்ரிப்ட் ரைட்டர் அசோக், அறிவிப்பாளர் ராகவன் எல்லோரை யும் அவளுக்குப் பிடித்திருந்தது.

இத்தனைக்கும் இடையே அவளை கலங்கடித்துக் கொண்டிருந்தவன் கிருஷ்ணன்தான். அவள் எங்கே இருந்தாலும் ஏதோ ஒரு சாக்கில் அங்கே வந்து விடுவான். அவளோடு பேசத் தொடங்குவான். பேச மறுப்பதற்கு அவள் பண்பாடு குறுக்கிட்டது.

அவன் பார்ப்பதற்கு அழகாகவே இருந்தான். நல்ல சம்பளமும் வந்து கொண்டிருந்தது. ஆனால் அவனுக்கு

பெண்கள்பால் மதிப்பு இல்லை. எந்த விஷயத்தை... அலட்சியமாக எடுத்துக் கொள்வான். சம்பளத்தை... எல்லாம் பத்தே நாட்களில் செலவழித்துவிட்... எல்லோரிடமும் கடன் கேட்டுக் கொண்டிருப்பான்... நிறைய பேர் அவனோடு சிநேகம் பண்ணிக் கொள்... வேண்டும் என்று தவிப்பதை அவளும் கண்டிருக்கிறா...

அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. எப்போதும் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருப்பதும், பணத்தை தாராளமாக செலவு செய்வதும்தான் இதற்குக் காரணம் என்று நினைப்பான். எப்போதும் கம்பீரமாக இருக்கும் அசிஸ்டெண்ட் நியூஸ் எடிட்டர் சுஷ்மா பாட்டீல் கூட அவனுடைய நட்பை விரும்பியது அவளுக்கு வியப்பாக இருந்தது. ஆனால் ராதை வேலையில் சேர்ந்த பிறகு அவனுக்கு மற்ற விஷயங்களில் இருந்த ஈடுபாடு குறைந்து விட்டது. இந்த விஷயத்தை ஜெயாவும் கவனித்தாள்.

"என்ன விஷயம்? கிருஷ்ணன் உன் மேல் ரொம்ப ஆர்வம் காட்டுகிறானே?" ஜெயா கேட்டாள்.

"எனக்கு என்ன தெரியும்?"

"அப்படி என்றால் என்ன அர்த்தம்? ஆர்வம் காட்டுவதே தெரியாதா? அல்லது ஏன் காட்டுகிறான் என்று தெரியாதா?"

ராதாவின் முகம் சிவந்து விட்டது. "எனக்கு எதுவும் தெரியாது. இந்த மாதிரி விஷயங்களே எனக்குப் பிடிக்கவும் பிடிக்காது."



"பதினாறு வயது பெண்போல் பேசாதே. இருபத்தி இரண்டு வயதில் நீ இப்படிப் பேசுவது உன் குற்ற உணர்ச்சியை காட்டுகிறது."

"நான் மனதளவில் வளர்ச்சியடையவில்லையோ என்னவோ! அதற்காக நான் வெட்கப்படுகிறேன். ஆனால் என்ன செய்வது? பிரச்னைகள் மனிதனை அழுத்தி விடும்" என்றாள் ராதை. சில மாதங்களுக்கு முன்னால் வரை தான் இருந்து வந்த சூழ்நிலையை, வாழ்க்கையை நினைத்து அவள் கண்கள் கலங்கி விட்டன.

அதைப் பார்த்த ஜெயா இளகிப் போய், "ஐ யாம் சாரி" என்றாள். ஆனாலும் ராதை அந்த மூடிலேயே இருந்ததை கவனித்தாள். பேச்சை மாற்றி அவளைப் பழையபடி கொண்டு வர நினைத்து, "உனக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா?" என்று கேட்டாள்.

"என்ன?"

"உன்னை முதலிரவு அன்று அறைக்குள் அனுப்பும் முன் உங்க பாட்டி, 'ராதை! பையன் என்ன செய்தாலும் பயந்து போய்விடாதே' என்பாள். அதுவே எனக்கு ஒரு பாட்டி இருந்திருந்தால் அறைக்குள் அனுப்பும் முன், 'அடியே ஜெயா! பையனை பயமுறுத்தி விடாதே!' என்பாள். அவ்வளவுதான் வித்தியாசம்."

ராதை பக்கென்று சிரித்து விட்டாள்.

"அப்பாடா! சிரித்து விட்டாயே."

அதற்குள் மெசெஞ்சர் வந்து ஒரு கவரைத் தந்தான். ஜெயாவை கோ—ஆர்டினேட்டர் அசிஸ்டெண்டாக போடப் போவதாக எழுதியிருந்தது.

"கங்கிராட்ஸ்!" என்றாள் ராதை. கோ ஆர்டினேஷனில் அவ்வளவு அதிகமாக வேலையிருக்காது. ஜெயாவைப் போன்றவர்களுக்கு மிகவும் நல்லது.

"இந்த செக்ஷனில் நான் ஒரு ரகசியத்தை வெளியில் கொண்டு வரணும்னு இருக்கேன்."

"அது என்ன?" கேட்டாள் ராதை.

"இந்த செக்ஷனின் சீஃப் விஜயபிரகாஷை தெரியுமில்லையா?"

"கதைகள் எழுதுவாரே. அவர்தானே?"

"அவரேதான். இந்த செக்ஷனிலேயே சரளா சங்கர் என்ற நாற்பது வயது பெண் எழுத்தாளர் ஒருத்தி இருக்கிறாள். அவள் நாவல்கள் சமீபத்தில் நிறைய வெளி வந்து கொண்டிருக்கின்றன. நீயும் பார்த்திருப்பாய். மக்கள் என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றால் பிரகாஷ் அவளுடைய சேவைகளுக்கு மெய்மறந்து போய் தன் படைப்புகளை எல்லாம் அவள் பெயரிலேயே அனுப்பி வருகிறார் என்று அந்த விஷயத்தை தெரிந்து கொண்டு விடணும்."

"மற்றவர்கள் விஷயம் நமக்கு எதுக்கு? விட்டுத் தள்ளு."

அதற்குள் யாரோ வந்து விட்டதால் ஜெயா எழுந்து போய் விட்டாள். ராதையும் ஆபீசைவிட்டு வெளியே வந்து பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தாள்.



மாலை ஐந்தரை மணி. ஏப்ரல் மாதமாகி இருந்ததால் பகல் நேரத்து வெப்பத்தை மாலை நேரத்து காற்று தணிய வைத்துக் கொண்டிருந்தது.

அவள் பஸ் ஸ்டாண்டுக்கு வந்து நின்று ஐந்து நிமிஷங்கள் ஆனதும் பஸ் வந்தது. தனக்குப் பின்னால் கிருஷ்ணனும் ஏறிக் கொண்டது அவளுக்குத் தெரியாது. அன்றைக்கு அவளோடு எப்படியாவது பேசிவிட வேண்டும் என்றும், விஷயத்தை சொல்லிவிடவேண்டும் என்றும் முடிவு செய்திருந்தான் அவன்.

பஸ் இரண்டாவது ஸ்டாப்பை தாண்டிய பிறகு கண்டக்டர் வந்து டிக்கெட் கேட்டான். சாதாரணமாக கைப்பைக்குள் கையை விட்ட ராதை அதிர்ச்சி அடைந்தது போல் அப்படியே நின்று விட்டாள்.

பைக்குள் பர்ஸ் இல்லை.

வெளிறிப் போய்விட்ட அவள் முகத்தைப் பார்த்து கண்டக்டர் "பர்ஸ் இல்லையா?" என்றான். அவள் பதில் சொல்லவில்லை.

அவள் மிகவும் மென்மையான மனம் படைத்தவள். கொஞ்சம் கடுமையாக பேசிவிட்டாலே கண்களில் நீர் வந்துவிடும். அதற்குள் அவளுக்குப் பின்னாலிருந்து யாரோ நகர்ந்து அருகில் வந்தாற்போல் இருந்தது. ஹிப்பி போல் முடியை வைத்துக் கொண்டிருந்தவன் "இந்தா! ஐந்து ரூபாயை வைத்துக் கொள்" என்றான், காதில் ரகசியம் பேசுவதுபோல். அவள் கண்ணீர் நிற்காமல் கன்னங்களில் வழிந்தோடியது. பஸ்ஸில் இருந்த பெண்கள் கூட பற்றுக் கொள்ளாதது போல் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர யாருமே உதவிக்கு வரவில்லை.

பின்னால் நின்று கொண்டிருந்த கிருஷ்ணன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு அந்த இடத்திற்கு வந்த போது அவள் வாய்விட்டு அழுவது மட்டும்தான் பாக்கி யிருந்தது.

"என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"பணம் இல்லையாம் சார். இப்படியே இரண்டு மூன்று ஸ்டாப் பார்க்காமல் இருந்தால் இறங்க வேண்டிய ஸ்டாப் வந்துவிடும்" என்றான் கண்டக்டர்.

கிருஷ்ணன் அவனை விழுங்கி விடுவது போல் பார்த்துவிட்டு ஜேபியிலிருந்து ஐந்து ரூபாயை எடுத்து, "டிக்கெட் கொடு அவளுக்கு" என்றான்.

ஹிப்பி தலையன் விசிலடிக்கப் போய் கிருஷ்ணனின் வாட்டசாட்டமான உருவத்தைப் பார்த்து விட்டு நிறுத்திக் கொண்டான். பதினைந்து நிமிஷத்தில் பஸ் ஸ்டாப் வந்து விட்டது. அவளோடு சேர்ந்து கிருஷ்ணனும் இறங்கினான்.

கொஞ்ச தூரம் அவளுக்குப் பின்னாடியே நடந்தான். அவள் திரும்பிப் பார்க்காமல் நடந்து கொண்டிருந்தாள்.

"வணக்கம்!"

அவள் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். தாண்டவ கிருஷ்ணன்! அவள் கண்களில் பயம் தெளிவாக தென் பட்டது. தடுமாற்றத்துடன், "வணக்கம். தாங்க்ஸ்" என்றாள்.

"வீட்டிற்குத்தானே" என்று கேட்டான்.

"ஊம்."



"அதற்குள் வீட்டிற்குப் போய் என்ன செய்யப் போறீங்க? வாங்க, காபி குடிக்கலாம்" என்றான்.

அவள் தலைகுனிந்தபடி மேலும் வேகமாக நடந்து கொண்டே, "சாரி" என்றாள். அவன் அவளை விடுவதாக இல்லை. பின்னாடியே போய், "இதோ பாருங்க. நீங்க வீணாக என்னைப் பார்த்து பயப்படுறீங்க. சும்மா உங்க ளோடு பேசுவதற்காகத்தான் காபிக்கு அழைக்கிறேன்" என்றான்.

அந்தச் சமயத்தில் ஏற்கனவே அவள் மனநிலை சரியாக இல்லை. இந்த வார்த்தைகளால் அவளை ஒரு விதமான உத்வேகம் வந்து சூழ்ந்து கொண்டது. இந்த ஆண்கள் எல்லோரும் என்ன நினைத்துக் கொண்டிருக் கிறார்கள் தன்னைப் பார்த்து? சொந்த அபிப்பிராயம் எதுவும் இல்லாதவள் போல், சாவி கொடுத்து ஆட்டுவிக் கும் பொம்மை போல்தென்படுகிறேனா? தன் உணர்வு களை எல்லாம் சொல்லிவிடவேண்டும். ஏன்? தன் மனதில் இருப்பதை தெளிவாக எடுத்துச் சொல்லக் கூடிய சக்தி தனக்கு இல்லையா?

அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு, "என்ன சொல்ல ணும்னு நினைக்கிறீங்கள்? சொல்லுங்கள்" என்றாள்.

அவள் திடீரென்று இப்படிக் கேட்டதும் அவன் கொஞ்சம் தடுமாறினான். என்ன பேசுவதென்று தெரிய வில்லை.

அவள் மௌனத்தைக் கண்டு அவளுக்கு மேலும் தைரியம் வந்தது. "ஏன் பேச மாட்டேங்கிறீங்க?" என்றாள்.

"இப்படி உலுக்கி எடுத்துவிட்டு பேசுங்கள் என்றால் என்னால் எதைப் பேச முடியும்? ஒன்று மட்டும் உண்மை உங்களைக் கண்டால் எனக்கு ரொம்பவும் பிடிக்கும்."

"ஏன்?"

"நீங்கள் மிகக் குறைவாக பேசுவதால், தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பதால், எப்போதும் ஒற்றைப் பின்னலையே போட்டுக் கொண்டு வருவதால், எப்போதும் காட்டன் புடவையையே கட்டிக் கொள்வ தால். இப்படி சொல்லிக் கொண்டே போனால் நிறைய வரும். எல்லாவற்றையும் சேர்த்தால் ஒரே வார்த்தை லைக்! ஐ லைக் யூ அதனால்தான் உங்களோடு பேசணும், நட்பு ஏற்படுத்திக் கொள்ளணும் என்று நினைக்கிறேன்."

"நான் அப்படி நினைக்கவில்லை" என்றாள் ராதை "எனக்குப் பேசவோ, மனதில் இருக்கும் உணர்வுகளை வெளிப்படுத்தவோ சரியாகத் தெரியாது. ஏதாவது தவறாக பேசியிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள். சாதாரண விருப்பு வெறுப்பு விஷயங்களை பற்றிப் பேசிக் கொள்வ தற்கும், பரஸ்பரம் அபிப்பிராயங்களை பகிர்ந்து கொள் வதற்கும் நட்பு தேவைதான். ஆனால் அந்த நட்பு பெண் கள் பெண்களோடேயும், ஆண்கள் ஆண்களோடேயும் மட்டும் இருந்தால் நல்லது என்பது என் உத்தேசம். ஒற்றைப் பின்னல், காட்டன் புடவை, பிடித்திருப்பது...! ஊஹூம் எனக்கு எப்படி சொல்வது என்று தெரிய வில்லை. மனதளவில் புனிதமாக இருப்பதுதான் எனக்குப் பிடிக்கும். ஒரு ஆணோடு நட்பு வைத்துக் கொண்டாலே புனிதம் போய்விடுமான்னு நீங்கள் கேட்கலாம் ஆனால் நான் சிறுவயதிலிருந்தே அது போன்ற சூழ்நிலையில்



வளர்ந்து வந்திருக்கிறேன். மிஸ்டர் கிருஷ்ணன்! என்னை மன்னித்து விடுங்கள். நட்பு என்பது ரொம்ப சாதாரண மான வார்த்தை. அந்த நட்பையும், காதலையும் என்னு டைய ஒரே ஒரு சிநேகிதன் என் கணவனோடுதான் பகிர்ந்து கொள்ளணும்னு நான் நினைக்கிறேன். என் உத்தேசம் கல்யாணத்திலிருந்துதான் காதலே தொடங்கு கிறது. அதற்கு முன்னால் இருப்பதெல்லாம் வெறும் கவர்ச்சிதான். சிநேகம் என்ற பெயரைச் சொல்லிக் கொண்டு அந்தக் கவர்ச்சியில் விழுவதை நான் விரும்ப வில்லை."

களையிழந்த முகத்தோடு, "உங்களை மணக்கப் போகிறவன் ரொம்ப அதிர்ஷ்டசாலி" என்றான்.

"என்னை மணப்பதால் பொருளாதார ரீதியிலோ அல்லது வேறெந்த விதத்திலோ சுகப்பட முடியாதவன் குறைந்தபட்சம் இந்த விஷயத்திலேயாவது அதிர்ஷ்டக் காரனாக இருக்கட்டும்."

"நான் போய் வருகிறேன்."

"நல்லது மிஸ்டர் கிருஷ்ணன்! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்." அவன் போகத் தொடங்கினான். கிருஷ்ணன் தன் வழியில் திரும்பினான்.

வாழ்க்கையில் முதல் முதலாக ஏற்பட்ட தோல்வி அது. அவர்களுக்கு நூறடி தொலைவில் ஒரு ஆள் காரில் உட்கார்ந்து கொண்டிருந்தான் என்றும், பெரிய கூலிங் கிளாஸிற்கு பின்னாலிருந்து தன்னையே கவனித்துக் கொண்டிருந்தான் என்றும் கிருஷ்ணனுக்குத் தெரியாது.

கிருஷ்ணனைத் தொடர்ந்து அந்தக் காரும் நகர்ந்தது. மாலை ஆறரை மணி. அவன் மனதில் எரிச்சல் நிரம்பியிருந்தது. வீட்டிற்குப் போகப் பிடிக்கவில்லை. அவனுக்குக் குடிப் பழக்கம் அதிகமாக இல்லை. ஆனால் அன்று மாலையில் அவனுக்கு ஏனோ குடிக்க வேண்டும் போல் தோன்றியது. அவனிடமிருந்த கெட்ட பழக்கம் ஒன்று தான், பெண்!

ஏற்கெனவே அழகானவன், தனியானவன். பணத்தை தாராளமாக செலவழிப்பவன். அப்படிப்பட்டவனுக்கு பெண் என்றாலே தாழ்வான அபிப்பிராயம் இருந்து வந்ததில் ஆச்சரியம் இல்லை. அவனைச் சுற்றி அப்படிப்பட்ட பெண்கள் சேர்ந்திருந்தது துரதிர்ஷ்டம்.

சிப்ஸுடன் ஒரு பெக் விஸ்கிக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு அவன் நாற்காலியில் பின்னால் சாய்ந்து கொண்டான். ஒரு பெண் அவனோடு அந்த விதமாகப் பேசியது அதுதான் முதல் தடவை. மூளைச் சலவை செய்து விட்டாற் போலிருந்தது. ஆனால் அதை விட ஏதோ புரியாத வெறுப்பும் பெருகிக் கொண்டிருந்தது.

அதற்குள் வெயிட்டர் வந்தான். கிளாசையும் சிப்ஸையும் வைத்துவிட்டு போய் விட்டான். சோடாவை கலந்து கொண்டு வாய்க்கு அருகில் வைக்கப் போன பொழுது ஒரு ஆள் அவனிடம் வந்தான்.

"நான் இங்கே உட்காரலாமா? உங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லையே?"

"ஷ்யூர்!" என்றான் கிருஷ்ணன்.



"என் பெயர் பரசுராமன்."

* * *

அரை மணி நேரத்திற்குள் இருவரும் நெருங்கியவர்களாகி விட்டார்கள். தாண்டவ கிருஷ்ணன் பரசுராமனை எல்லா விதத்திலேயும் தன் குருவாக ஏற்றுக் கொண்டு விட்டான். அது மட்டுமில்லை. அத்தனை துறைகளிலும் இவ்வளவு சாமர்த்தியமுடைய அவன் தன்னுடைய மேஜைக்கு முன்னால் வந்து உட்கார்ந்து கொண்டது தன் அதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொண்டான். அதற்குள் மூன்றாவது பெக் குடித்து விட்டிருந்தான். மிகவும் நட்போடு தன்னுடைய சொந்த அனுபவங்களையும், தற்போது அனுபவித்துக் கொண்டிருந்த கஷ்டத்தையும் பற்றி விவரமாக சொல்லிவிட்டான்.

"கல்யாணத்திலிருந்துதான் அவளுக்குக் காதல் தொடங்குமாம் சார். அதுவரையில் அவள் ஆண்களை ஏறெடுத்துக் கூட பார்க்கமாட்டாளாம். நான் நல்ல மனதோடு சிநேகம் செய்து கொள்ளலாம்னு நினைத்துக் கொண்டு இருந்தபோது, அந்த சிநேகத்தைக்கூட கணவனோடுதான் வைத்துக் கொள்வேன் என்று சொல்லி விட்டாள். இதைவிட செருப்பால் அடித்திருந்தாலும் வருத்தப்பட்டிருக்க மாட்டேன். சிரித்துக் கொண்டே ரொம்ப மோசமாக வீழ்த்திவிட்டாள்."

"அவள் சொன்னதில் தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லையே?" என்றான் பரசுராமன். உண்மையில் அவ்வாறு சொன்னதன் உத்தேசம் கிருஷ்ணனை இன்னும் தூண்டிவிடுவதுதான்.

"தவறோ, தவறு இல்லையோ. அவள் உத்தேசம்தான் என்ன? 'டேய் முட்டாளே! உனக்கு நட்பு என்றால் என்னவென்றே தெரியாது. காதல் என்றால் அதையும் விட தெரியாது. உன்னுடையது எல்லாம் செக்ஸ் மயம்' என்று சொல்லாமல் சொல்லுகிறாள். அதுதானே."

பரசுராமன் பதில் பேசவில்லை. ஒரு வினாடி ஏதோ யோசனையில் ஆழ்ந்தபடி ஜேபியிலிருந்து சுருட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டான். பிறகு ஆள் காட்டி விரலால் முகவாயைத் தடவிக் கொண்டே கிருஷ்ண னிடம் சொன்னான்.

"அனுபவித்தால் அப்படிப்பட்ட பெண்ணைத்தான் அனுபவிக்கணும். இல்லாவிட்டால் இந்த பாழும் வாழ்க்கைதான் எதற்கு?"

"கரெக்டாக சொன்னீங்க சார்."

"அவ்வளவு சின்சியராக காதலிக்க நினைக்கிற பெண் உண்மையிலேயே காதலிக்கத் தொடங்கி விட்டால் அன்பு ஊற்று போல் பொங்கிக் கொண்டு வரும். அப்படிப்பட்ட மங்கை உடல் ரீதியாக தருகிற சுகம் சாதாரண காகிதப் பூக்களால் தரமுடியாது. அப்படிப் பட்ட அனுபவம் போதும் வாழ்நாள் முழுவதற்கும்."

உணர்ச்சி வசப்பட்ட கிருஷ்ணன் நாற்காலியை விட்டு எழுந்து கொண்டே, "சரியாய் நானும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன் சார். உண்மையில் அப்படிப்பட்ட பெண்ணின் காதலைப் பெறுவதை விட வேறு என்ன வேண்டும் ஒரு ஆணுக்கு?" என்றான்.



பரசுராமன் பதில் சொல்லவில்லை. மறுபடியும் சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான். கிருஷ்ணனுக்கு மட்டும் கிழவன் ஒருவன் தன்னுடைய நிலைக்கு இறங்கி வந்து யோசிக்கத் தொடங் கியது மிகவும் த்ரில்லிங்காய் இருந்தது. பரசுராமன் சுருட்டின் சாம்பலை ஆஷ்ட்ரேயில் தட்டிக்கொண்டே, "அந்தப் பெண்ணின் பேச்சைக் கொண்டு பார்த்தால் காதல் என்ற பெயரில் அவளை கன்வின்ஸ் செய்வது கஷ்டம் என்று தோன்றுகிறது. நீ இரண்டு வருடங்கள் கஷ்டப்பட்டாலும் கல்யாணம் செய்து கொள்ளாமல் அந்தப் பெண்ணை நெருங்கிவிட முடியாது. அது போகட்டும். அந்தப் பெண்ணை நீ ஏன் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது?"

"அப்படி கல்யாணம் செய்து கொள்வதாக இருந்தால் இந்த ரகளை எல்லாம் எதற்கு சுவாமீ?"

"கல்யாணம் என்பது அவ்வளவு பயங்கரமான விஷயமா?"

"இல்லையா பின்னே?"

"ஒன்றுமில்லை. ஒரு பெரிய போர்டு, கொஞ்சம் பெயிண்ட், ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் என்று எழுதுவதற்கு ஒரு பிரஷ். நம் ஆட்கள் ஒருத்தரோ இரண்டு பேரோ இருந் தால் போதும்."

# 7

வானொலி நிலையத்தில் வேலை செய்கிறவர்களை
தவிர காண்ட்ராக்ட் ஆர்டிஸ்டுகள் என்று சிலர் இரு
பார்கள். இவர்கள் வாழ்க்கை தினம் தினம் கண்டமாக
இருக்கும்.

எந்த நிமிஷத்தில் வேண்டுமானாலும் காரணமில்லா
மல் இவர்களை நீக்கி விடலாம். எவ்வளவு நேரம் வேலை
செய்தாலும் இவர்களுக்கு ஓவர் டைம் கிடைக்காது. 1984ல்
திருமதி இந்திராகாந்தி சுயமாக முனைந்து சில சீர்திருத்தங்
களை செய்த போதிலும் நிலைமை இன்னும் முற்றிலும்
சரியாகவில்லை. இவர்களுக்கு ஃபேமிலி பென்ஷன் கிடை
யாது.

அகில இந்திய வானொலி நிலையத்திற்கு விடு
முறையே கிடையாது. பண்டிகை நாட்களில் மேலும் அதிக
மாக வேலை செய்ய வேண்டும். பகல் என்று இல்லை;
ராத்திரி என்று இல்லை. மழை வந்தாலும் புயல் வந்தா
லும் விடுமுறை கிடையாது. வேலை... வேலை... வேலை.

அகில இந்திய வானொலி நிலைய வித்வான்களின்
யூனியனின் ஆண்டுவிழா நடந்தது. தம் கோரிக்கைகளை
மேனேஜ்மென்டிற்கு விண்ணபித்துக் கொண்டார்கள்.
பலன் இல்லை. ஆண்டுகள் கழிந்து கொண்டிருந்தன.
யூனியனின் பொறுமை தளர்ந்து விட்டது. நேஷனல்
எக்ஸிக்யூடிவ் களத்தில் இறங்கியது.

மே இருபத்தி நாலாம் தேதி வேலை நிறுத்தம் செய்யப்
போவதாக நோட்டீஸ் அனுப்பியிருந்தார்கள். நிலை



மையை கட்டுக்குள் வைக்க வேண்டிய பொறுப்பு பார்த்த
சாரதியின் மீது விழுந்தது.

* * *

பரசுராமனோடு சேர்ந்து திட்டத்தை உருவாக்கிய
துமே கிருஷ்ணன் ராதை தனியாக இருந்தபொழுது டேப்பு
களை ஒப்படைக்கும் சமயத்தில் அவற்றுக்கிடையே ஒரு
கடிதத்தை வைத்துத் தந்தான். அதில் இவ்வாறு இருந்தது.

'மிஸ் ராதை! மனிதனை மாற்றிவிட வல்லது
அனுபவம்தான் என்று எங்கேயோ படித்திருக்கிறேன்.
அன்றைக்கு நீங்கள் சொன்ன வார்த்தைகள் இன்னும்
என் காதுகளில் எதிரொலித்துக் கொண்டே இருக்
கின்றன. ஒரு ஆணும் ஒரு பெண்ணும் பரிபூர்ணமான
நட்புடன் நெருக்கமாக வேண்டும் என்றால் காத
லோடு கூட கல்யாணமும் அவசியம்தான். நான்
உங்கள் பாட்டியிடம் பேசுகிறேன். உங்களைக் கேட்
கும் போது தயவு செய்து 'ஊம்' என்று சொல்லுங்கள்,
போதும்.

அவ்வளவுதான் இருந்தது அதில்.

ராதைக்கு இதெல்லாம் கனவா நினைவா என்று
புரியவில்லை.

கிருஷ்ணன் மாறிவிட்டானா? கேவலம் தன்
வார்த்தைகளால் மாறிவிட்டானா? அவளுக்கு சந்தோஷ
மாக இருந்தது. கொஞ்சம் அப்பாவித்தனத்தோடும்,
கொஞ்சம் கர்வத்தோடும் கூடிய சந்தோஷம்.

எந்த ஒரு பெண்ணும் ஆணை மன்னித்து விடுவது
போலவேதான் அவளும் மன்னித்து விட்டாள். முழுமன

துடன் அவனை ஏற்றுக் கொள்வதற்கு தயாராகி விட்டாள். ஒரு மனிதன் தன் அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்வது அத்தனை சுலபம் இல்லை என்றும், நம்மைச் சுற்றிலும் இருப்பவர்கள் நம் கண்களுக்குத் தென்படுவது போல் அப்பாவிகள் இல்லை என்றும் அவளுக்குத் தெரியாது.

அன்று மாலையில் வீட்டிற்குத் திரும்பும் வரை அவள் மனம் முழுவதும் உணர்வுகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. தன் எண்ணங்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ருசு கிடைத்துவிட்டதற்காக ஏற்பட்ட பரபரப்பு அது. காதல் என்பது கல்யாணத்தின் மூலமாகத்தான் சாத்தியப்படும் என்பது அவள் தியரி. அது நிருபணமாகப் போகிறது. இவ்வளவு நாட்களாக மனதைத் தூய்மையாக காப்பாற்றிக் கொண்டு வந்து, இப்பொழுது தன் வாழ்க்கைத் துணையாக வரப் போகிறவனுக்கு சகலத்தையும் அர்ப்பணிக்கப் போகிறாள். காதலிப்பதில் இவ்வளவு புனிதம் இருப்பதால் அதைத் திருமணத்தின் மூலமாகத் தான் நிறைவு பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற தன்னுடைய தீர்மானத்தை ஒரு இளைஞன் உண்மையாக்கிக் காட்டப் போகிறான் என்பது அவளுக்கு சந்தோஷத்தை ஏற்படுத்திய விஷயம்.

அவள் முகத்தில் வெளிப்பட்ட சந்தோஷத்தை ஜெயா கண்டு பிடித்துவிட்டாள். "என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

அப்பொழுதே ராதை விஷயத்தைச் சொல்லியிருந்தால் இந்தக் கதை வேறு விதமாக திசை திரும்பியிருக்



குமோ என்னவோ. ஆனால் அவள் சொல்லவில்லை. உதட்டில் மலர்ந்த முறுவலை அடக்கிக் கொண்டே, "ஒன்றும் இல்லையே?" என்றாள்.

"ஏதோ இருக்கிறது. உன் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. சொல்லு."

"ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டு ராதை அங்கிருந்து ஓடிவந்து விட்டாள்.

அவள் வீட்டிற்கு வந்து கொண்டிருக்கும் போது யோசிக்கத் தொடங்கினாள்.

இதெல்லாம் காதல்தானா என்று.

கிருஷ்ணன் மீது அதற்குள் பிரியம் ஏற்படத் தொடங்கிவிட்டதா?

அவன் பயன்படுத்திய அந்த வார்த்தை... அதென்னது? லைக்! ஆமாம் லைக்! அது தொடங்கி விட்டதா? இதுதான் காதலுக்கு முதல்படியா? அவள் இதையெல்லாம் யோசிக்கப் போவதில்லை. யோசிக்கத் தேவையும் இல்லை. இன்னும் கொஞ்ச நாளில் எப்படியும் திருமணம் நடக்கப் போகிறது. இனியும் யோசனைகள் எதற்கு? காண்ட்ரக்டிக்ஷன் எதற்கு?

இவ்வாறு அவள் யோசித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் கிருஷ்ணனும் பரசுராமனும் இணைந்து ரிஜிஸ்ட்ரார் ஆபீஸை செட்டப் செய்வதில் மூழ்கியிருந்தார்கள்.

"அந்த மேஜையை இப்படி நகர்த்து. இந்த காலிங் பெல்லை அந்த மூலையில் வை. காலடியில் குப்பைக்

கொண்டிருந்தான் பரசுராமன்.

மாடிசம் அங்கத்தினர் ஒருத்தன் ப்யூன் உடையில் வேலைகளை செய்து கொண்டிருந்தான். பரசுராமன் ரிஜிஸ்ட்ரார் உடையில் இருந்தான். அங்கே டிரெஸ் ரிகர்சல் நடந்து கொண்டிருந்தது. செகண்ட் ஹேண்ட் புத்தகங்களை வாங்கி அலமாரியில் அடுக்கினார்கள். பெரிய பௌண்ட் லெட்ஜர் ஒன்று மேஜை மேல் வைக்கப் பட்டிருந்தது. முதல் பத்து பக்கங்களில் ராமச்சந்திரன்–சீதா, அர்ஜுன்–சுபத்ரா போன்ற பெயர்கள் எழுதப் பட்டிருந்தன. பரசுராமனே கையெழுத்தை மாற்றி விதவிதமாக சாட்சிக் கையெழுத்துக்களை போட்டிருந்தான்.

ஏற்பாடுகள் எல்லாம் முடிந்த பிறகு பரசுராமன் கிருஷ்ணனைப் பார்த்து, "போய் அழைத்து வா" என்றான்.

கிருஷ்ணன் வியப்புடன், "இப்பொழுதுதேவா?" என்றான்.

"பின்னே?" அலுத்துக் கொண்டான் பரசுராமன். இந்தச் சின்ன விஷயம் கூட தெரியாதா என்பதுபோல். "ஒரு பத்து நாள் போன பிறகு இது எல்லோருக்கும் தெரிந்துபோய் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் வேண்டாம், கல்யாண மண்டபத்தில் வைத்துக் கொள்வோம் என்று சொல்கிற வரைக்கும் காத்திருக்கப் போகிறாயா? அவர்களுக்குக் கொஞ்சம் கூட யோசிக்க நேரம் கொடுக்காமல் எல்லா வற்றையும் அவசர அவசரமாக முடித்தால் தவிர லாப மில்லை இது போன்ற விஷயங்களில்.

கிருஷ்ணன் யோசித்தான். ஓரிரண்டு நாட்களுக்குள் ராதையைத் திருமணத்திற்கு ஆயத்தப் படுத்துவது. அதுவும், ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் கல்யாணம் பண்ணிக் கொள்ள சம்மதிக்க வைப்பது கஷ்டம். என்ன செய்யலாம்?

அதற்குள் அவனுக்கு ஒரு யோசனை பளிச்சிட்டது.

பாட்டி!

ஆம்! ராதையின் பாட்டியால்தான் இந்த விஷயத்தை எளிதாக்க முடியும்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் அவன் ராதையின் வீட்டில் இருந்தான். பத்தாவது நிமிடம் பாட்டிக்கு நல்ல சிநேகமாகி விட்டான். பன்னிரெண்டாவது நிமிஷத்தில் சொந்தம் கொண்டாடத் தொடங்கி விட்டான். பதினைந்தாவது நிமிஷத்தில் விஷயத்தைச் சொல்லி விட்டான்.

"இதுதான் பாட்டீ விஷயம். எனக்கும் யாரும் இல்லை. வானளாவப் பந்தலை போட்டு தடபுடலாக கல்யாணத்தை நடத்துவதற்கு இருவருக்குமே சக்தியில்லை. எனக்கு ராதையை ரொம்பப் பிடிக்கும். அவளிடம் நீங்கள் விசாரித்துத் தெரிந்து கொள்ளுங்கள். இந்தக் காலத்து காதல்களின் மேல் எனக்கு நம்பிக்கையில்லை பாட்டீ. அதனால் நீங்களே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் சரி என்றால் நாளைக்கே ஏற்பாடு பண்ணி விடலாம். ஏன் சொல்கிறேன் என்றால் நமக்கு மட்டும் யார் இருக்காங்க சொல்லுங்கள்! நாமாகவே செய்து கொள்ள வேண்டியதுதானே. என்னை நேரில் பார்த்துட் டீங்க. என்னைப் பற்றிய விவரங்களை எல்லாம் சொல்லி விட்டேன். இனி உங்கள் இஷ்டம்."

பாட்டி மகிழ்ச்சியால் திக்குமுக்காடிக் கொண்டே, "என்ன தம்பி இது? பெண் வீட்டுக்காரங்க நாங்க. நாங்க தான் எங்களைப்பற்றி சொல்லிக் கொள்ளணும். அப்படி யிருக்கும்போது நீயே வந்து கேட்கிறாய் என்றால் எனக்கு வாயடைத்துப் போய்விட்டது. இன்னும் அரைமணி நேரத் தில் அவளும் வந்து விடுவாள். வந்ததுமே கேட்டு விடு கிறேன். ஆனாலும் கேட்பதற்கு என்ன இருக்கிறது? உன்னைப் போன்ற பையனை யாராக இருந்தாலும் கண்ணில் ஒத்திக்கொண்டு செய்து கொள்வார்கள்" என்றாள்.

கிருஷ்ணன் கிளம்பிப் போன அரைமணிக்கெல்லாம் ராதை வந்தாள். அன்றிரவு பாட்டி விஷயத்தை எடுத் தாள்.

"பையன் பார்க்க லட்சணமாக, ராஜாவாட்டம் இருக்கிறான். பணிவாக நடந்து கொள்கிறான். ரொம்ப பாந்தமாக பேசினான். அவனே பண்ணிக் கொள் கிறேன்னு வருவது நம்ப அதிர்ஷ்டம்."

"எனக்கு அவரைத் தெரியும் பாட்டீ" என்றாள்.

"அப்போ என்ன பதில் சொல்லப் போகிறாய்?"

ஹரிக்கேன் விளக்கு வெளிச்சத்தில் ராதை தலை குனிந்தபடி வெட்கத்தோடு தனக்குள் சிரித்துக் கொண்டது மங்கலான வெளிச்சத்திலும் பாட்டியின் கண்களில் பட்டது.

• • •



பார்த்தசாரதி ஒரு பக்கத்தில் வேலை நிறுத்தம் தொந்தரவுகளால் திணறிக் கொண்டிருக்கையில் இன்னொரு பக்கத்தில் வேறொரு சம்பவம் நடந்தது.

நாடகம் தயாரிப்பதற்காக வேண்டிய சிரத்தையை எடுத்துக் கொள்ளும் புரோகிராம் எக்ஸிக்யூடிவ்கள் ரொம்பக் குறைவு. ராகவன் அப்படிப்பட்ட பிரிவைச் சேர்ந்தவன்தான். சினிமாக்காரர்களுடன் சுற்றுவது, குடிப்பது போன்ற எல்லா கெட்ட பழக்கங்களும் உண்டு. நிகழ்ச்சிக்கு முன்னால் தேவைப்பட்ட ஆர்டிஸ்களை கூட்டி எதையோ பண்ணி ஒப்பேற்றிக் கொண்டிருந்தான். நாடக ஆடிஷனில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டுக் கணக்காக வாய்ப்பு கிடைக்காமல் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நடிகர்கள் நிறைய பேர்.

ஆனால் ராகவன் மேற்பார்வை செய்து கொண்டிருந்த வேலை கூட குறைந்தது ஒன்றும் இல்லை. ஸ்க்ரிப்டுகளி லிருந்து வியாபார சம்பந்தமான பெயர்களை நீக்க வேண்டும். வானொலிக்காக எழுதும் எழுத்தாளர்களில் பல பேருக்கு ஹார்லிக்ஸ், சர்ஃப் போன்ற பெயர்களை பயன்படுத்தக் கூடாது என்று தெரியாது.

அன்றைக்கு வானொலி நிலயத்திலிருந்து நாடகம் ஒன்று ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. பெயர் பெற்ற எழுத்தாளரின் நாடகமாக இருந்ததால் கவனக்குறைவாக இருந்து விட்டார்கள். அதில் 'பின் தங்கிய ஜாதியினர்' என்ற வார்த்தைக்குப் பதிலாக 'நீச்ச ஜாதியினர்' என்ற வார்த்தை கையாளப்பட்டிருந்தது. அது அப்படியே ஒலிபரப்பப்பட்டு லட்சக்கணக்கான ரசிகர்களின் [illegible]விட்டது. இது நடந்த பத்து நாட்களில்

அசெம்பிளியில் இந்த விஷயம் சர்ச்சைக்கு வந்தது. அநீ... இந்திய வானொலிக்கு சம்பந்தப்பட்டதாக இருந்தாலும் சரி, அசெம்பிளியில் மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டியதுதான் என்று சொல்லி விட்டார்கள்.

நிலையத்தின் முக்கிய அதிகாரியாக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி யூனியன் மினிஸ்ட்ரியிலிருந்து டைரக்டர் ஜெனரல் மூலமாக பார்த்தசாரதிக்கு உத்தரவு வந்தது. அவனுக்கு இது இரண்டாவது அடி.

கஷ்டங்கள் வந்தால் எல்லா பக்கங்களிலிருந்தும் மேலும் மேலும் வந்து சூழ்ந்து கொள்ளும் என்பார்கள். அவன் விஷயத்தில் அப்படியேதான் நடந்தது.

பார்த்தசாரதியின் நிலைமை இக்கட்டாக இருந்தது. ஒரு பக்கம் வேலை நிறுத்தம். மற்றொரு பக்கம் அசெம்பிளியில் மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டிய கட்டாயம்.

கஷ்டங்களில் இருக்கும் போதுதான் ஆணாக இருப்பவன் தனிமையின் துன்பத்தை அதிகமாக உணருவான்.

இருக்கையில் உட்கார்ந்திருக்கப் பிடிக்காமல் அவன் அறைக்கு வெளியே வந்தான். காற்றிற்கு மரங்கள் மெதுவாக அசைந்தாடிக் கொண்டிருந்தன. காரிடாரில் நடந்து போகும்போது ஜெயா தென்பட்டாள்.

"எப்படி இருக்கிறது உங்கள் செக்ஷன்?" நடந்து கொண்டே கேட்டான் பார்த்தசாரதி.



ஜெயாவால் அவனுடைய வேகத்தைப் பிடிக்க முடியவில்லை. வேக வேகமாக நடந்துகொண்டே, "நன்றாகத்தான் இருக்கிறது சார்" என்றாள்.

மெயின் பில்டிங்கிற்குப் பக்கத்திலேயே அசோக மரங்கள், தொலைவில் கார்டு ரூமுக்கு பக்கத்திலேயே எக்ஸ்சேஞ்ச். அதைத் தாண்டி வந்தால் ரிகார்டிங் ரூம்ஸ், ட்யூட்டி ஆஃபீசரின் ரூம், பக்கத்திலேயே அசிஸ்டெண்ட் ஸ்டேஷன் டைரக்டர் ரூம்.

பார்த்தசாரதி மௌனமாக தன் அறையை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

அவனோடு கூடவே நடந்து கொண்டிருந்த ஜெயா கொஞ்சம் தயங்கிக் கொண்டே, "சார்!"

என்ன என்பது போல் பார்த்தான் அவன்.

அவள் கேட்கலாமா வேண்டாமா என்பது போல் தடுமாறிக் கொண்டே, "இப்போதெல்லாம் நீங்கள் ஏதோ போல் இருக்கீங்க சார்" என்றாள்.

வேறு ஏதோ கேள்வியை எதிர்பார்த்த பார்த்தசாரதி திடீரென்று தன் பர்சனல் விஷயம், அதுவும் தனக்குக் கீழே வேலை பார்க்கும் ஊழியரிடமிருந்து வரவே வாயடைத்துப் போய் விட்டான். அதற்குள் அந்தக் கேள்வி புரிந்து அதில் உண்மை இருந்ததால், அதுவும் அந்தக் கேள்வியை ஒரு பெண் கேட்டதால் எத்தனையோ நாளாக மனதில் தேங்கிக் கிடந்த அழுத்தம் உருகிப் போய், சட்டென்று தன்னுடைய பொசிஷன் நினைவுக்கு வந்து, பழைய நிலைக்கு திரும்பி "ஒன்றுமில்லையே?" என்றான்.

வினாடியிலும் குறைந்த நேரம் அவன் முகத்தில் நிழலாடிவிட்டு மறைந்த உணர்வுகளை புரிந்துகொள்ள முடியாத சிறு பெண் ஒன்றுமில்லை அவள். ஆனால் அதற்குப் பிறகு அதைப்பற்றி எதுவும் பேசவில்லை. ஆனால் பார்த்தசாரதி ஒரு விதமான குற்ற உணர்ச்சிக்கு உள்ளானான். இதுவரை அவனுடைய முப்பத்தேழு வருட வாழ்க்கையில் 'ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?' என்று தப்பித் தவறி கூட யாருமே கேட்டதில்லை.

அவனுக்கு ஏனோ உடனே தன்னுடைய அறைக்குப் போய் மறுபடியும் சாதாரணமாக வேலையைத் தொடர மனம் ஒத்துழைக்கவில்லை.

தன் அறையைத் தாண்டி நடந்தான். அங்கிருந்து கீழே போக படிக்கட்டுகள் இருந்தன. அவை ஸ்டேஷனுக்குப் பின் பக்கமாக போகும் படிக்கட்டுகள். பக்கத்திலேயே பெரிய வாட்டர் டாங்க். அதைத் தாண்டியதும் டேப் லைப்ரரி.

"என்ன? டேப்புகளில் ரொம்ப வித்தியாசம் வருகிறதாமே? ஏ.சி. சுப்ரமணியம் சொன்னான்" என்றான்.

சாதாரண ஊழியர்கூட டேப்புகளை வீட்டுக்கு எடுத்துப் போகமுடியும். பின்னே வித்தியாசம் வராமல் எப்படி இருக்கும்? அதுவும் லைப்ரரியன் சுஷ்மா சக்ரவர்த்திக்கு ரிக்கார்டுகளை சரிபார்ப்பதை விட தன் முகத்தை கண்ணாடியில் பார்த்துக் கொள்வதுதான் அதிகமாக பிடிக்கும்.

"டேப்ஸ் விஷயம் பரவாயில்லை சார். ஆபீசில் எல்லோரும் என்ன நினைக்கிறார்கள் என்றால், நம்



வாகனங்களின் செலவுகள் நியாயமாக ஆகவேண்டியதை விட ஐந்து மடங்கு ஆகிறதாம்" என்றாள் ஜெயா.

பார்த்தசாரதி பதில் பேசவில்லை. வாகனங்களை பராமரிப்பவர் சமீபத்தில்தான் புதுவீடு கட்டி முடித்தார் என்று அவனுக்குத் தெரியும்.

"நம்மிடம் எவ்வளவு வேன்கள் இருக்கு?"

"ஏழு."

"பின்னே எதற்காக ப்ரெக்ஸ் எப்பொழுது எங்கே போகணும் என்றாலும் வாகனமே இல்லை என்று சதா புலம்பிக் கொண்டே இருக்கிறார்கள்?"

அவள் சிரித்தாள். "டிரைவருக்கு பாக்கெட் மணி தேவைப்பட்ட போதெல்லாம் நம்ப வாகனங்களுக்கு ரிப்பேர் செலவு வந்து விடும் சார்" என்றாள்.

அதைக் கேட்டதும் அவனுக்கும் சிரிப்பு வந்தது. "தாமதம் ஆனால் எப்படி? டாக்ஸியில் போவீங்களா?"

"ஆமாம்" என்றாள்.

குறிப்பிட்ட நேரம் தாண்டிவிட்டால் ஊழியர்களை வேனில் கொண்டு போய் வீட்டில் இறக்கிவிடுவார்கள். அதே போல் விடியற்காலையில் வந்து பிக்கப் செய்து கொள்வார்கள்.

"அட்மினிஸ்ட்ரேஷன் டிபார்ட்மெண்டில் என்னை வந்து சந்திக்கச் சொன்னதாகச் சொல்லு" என்றான்.

அவள் தலையை அசைத்தாள்.

எக்ஸ்சேஞ்ச் பக்கத்திலிருந்து முனை திரும்பப் போன பொழுது அவன் பார்வை பழைய கட்டிடத்தின் மீது விழுந்தது.

"என்ன இருக்கு அங்கே?" ஜெயாவைப் பார்த்து கேட்டான்.

"பழைய ரிக்கார்டுகளும், உடைந்து போன ஃபர்னிச்சரும்."

அந்த பக்கமாக நடந்துகொண்டேப் "பூட்டப்படாமல் திறந்து கிடக்கிறதே?" என்றான்.

"ஏதாவது தேடிக் கொண்டு இருக்கிறார்களோ என்னவோ?" என்றாள் ஜெயா.

அவன் கதவை லேசாகத் தள்ளி உள்ளே பார்த்துவிட்டு சட்டென்று பின் வாங்கி கதவைச் சாத்திவிட்டு "வா. போகலாம்" என்றான்.

அவள் அவன் பக்கம் பார்த்தாள். அவன் முகம் ரத்தம் வற்றி விட்டாற் போல் வெளுத்துவிட்டிருந்தது.

திறந்து கதவு வழியாய் ஏற்பட்ட வெளிச்சத்தில் அந்த மங்கலான இருட்டில், குவிந்து கிடந்த பழைய ரிகார்டு களுக்கு நடுவில் தமிழ் நியூஸ் ரீடர் ராமனின் அணைப் பில் லைப்ரரியன் சுஷ்மா சக்ரவர்த்தியை ஜெயா தெளி வாகப் பார்த்தாள்.

* * *

"வலது காலை முன்னால் எடுத்து வை" என்றான் கிருஷ்ணன் சிரித்துக் கொண்டே. "இதுதான் கோவில் என்று நினைத்துக் கொள்."





ராதை நிமிர்ந்து பார்த்தாள். பழுப்பு நிற சுவர்களை, ...ன்னிரெண்டடி உயரத்தில் 'ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்' என்ற ...போர்டு, தொலைவில் ஸ்டூலில் தூங்கி வழிந்து ...கொண்டிருந்த ப்யூன். அவள் உண்மையிலேயே வலது ...காலை முன்னால் வைத்து உள்ளே நுழைந்தாள்.

ரிடையராவதற்குத் தயாராக இருந்த கிழவன் ஒருவன் பெரிய ரிஜிஸ்டரை முன்னால் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். பக்கத்திலேயே இரண்டு ...மாலைகள் இருந்தன. இவர்களைப் பார்த்ததும் சிரித்த ...படி நாற்காலியை விட்டு எழுந்துகொண்டே "வெல்கம்!" ...என்றான்.

கிருஷ்ணனும் முறுவலுடன், "குட் ஈவினிங் சார்" ...என்றான்.

ராதை பயந்தபடி சுற்றும் முற்றும் பார்த்தாள். ...கவர்ன்மென்ட் ஆபீசு என்றால் மலைமலையாய் பைல் ...களும், காகிதங்களும் கிடக்கும் என்று எண்ணியிருந்தாள். இவ்வளவு நீட்டாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை.

கிருஷ்ணன் முழங்கையால் லேசாக இடித்ததும் திடுக்கிட்டு பார்த்தாள். ரிஜிஸ்டரை காண்பித்து பேனா ...வைத் தந்தான்.

அவள் கை லேசாக நடுங்கியது. மெதுவாக கையெழுத் ...துப் போட்டாள்.

"சுபம். இருவரும் சேர்ந்து வாழ்கிற வரையில் ...சுகமாக, சந்தோஷமாக இருங்கள்" என்றார் ரிஜிஸ்ட்ரார்.

"தாங்க்ஸ்" என்று சொல்லிவிட்டு கிருஷ்ணன் ரிஜிஸ்ட்ரார் தந்த மாலையை ராதையின் கழுத்தில் போட்டான். ராதையும் கொஞ்சம் வெட்கத்தோடு தலைகுனிந்து கொண்டு அவன் கழுத்தில் மாலை யிட்டாள்.

பிளாஷ் மின்னியது.

"கங்கிராட்சுலேஷன்ஸ்! ஆபீஸில் வேலை பார்க்கும் பெண்ணாக இருந்தாலும் இவ்வளவு கூச்சப்படுகிறாளே என்றால் உண்மையிலேயே நீ அதிர்ஷ்டசாலிதான்" என்றார் ரிஜிஸ்ட்ரார்.

ராதையின் முகம் வெட்கத்தால் மேலும் சிவந்து விட்டது.

"கிளம்பலாமா?" என்றான் கிருஷ்ணன். ராதை தலையை அசைத்தாள்.

அவன் ரிஜிஸ்ட்ராருடன் கைகுலுக்கி விட்டு, "மறுபடியும் சந்திப்போம்" என்றான்.

ரிஜிஸ்ட்ரார் உரத்தக்குரலில் சிரித்துவிட்டு, "ஜெயிலரிடமும், கல்யாணம் பண்ணி வைக்கிற ரிஜிஸ்ட்ராரிடமும் மறுபடியும் சந்திப்போம்னு சொல்லக் கூடாது தம்பீ" என்றான். ராதைக்குக் கூட சிரிப்பு வந்தது. முறுவலுடன் கைகளை கூப்பிவிட்டுத் திரும்பினாள்.

இருவரும் வெளியே வந்ததும், "நம் ஆபீஸில் எல்லோருக்கும் தெரியப்படுத்தி சஸ்பென்ஸை உடைத்து விடலாமா?" என்றான் கிருஷ்ணன். உண்மையிலேயே அது சஸ்பென்ஸ்தான். சக ஊழியர்கள் கனவில் கூட ஊகித்திருக்க மாட்டார்கள், அவ்விருவரும்...





செய்து கொள்வார்கள் என்று. எல்லாம் எதிர்பாராமல் திடீரென்று கிருஷ்ணன் வற்புறுத்தியதால் நடந்து முடிந்து விட்டது.

"முதலில் பாட்டியிடம் போகணும்" என்றாள் ராதை. டாக்ஸி ராதையின் வீட்டை நோக்கி நகர்ந்தது. பாட்டியைப் பார்த்ததுமே ராதைக்கு ஏனோ அழுகை நிற்கவில்லை.

"இதென்னது? கல்யாணம் பண்ணிக்கொண்டு மாலையும் கழுத்துமாக இருக்கும்போது யாராவது அழுவார்களா?" அருகில் இழுத்து அணைத்துக் கொண்டாள் பாட்டி.

"நீ இல்லாமலேயே கல்யாணம் செய்து கொண்டு விட்டேன் பாட்டி."

"ஊரைக் கூட்டி கல்யாணம் பண்ணுவதற்கு நம்மிடம் பணம் எங்கே இருக்கு? நம்முடைய நிலைமையை பையன் புரிந்துகொண்டு விட்டான். அதான் இப்படி சிம்பிளாக நடத்தி விட்டான்."

கிருஷ்ணன் சங்கடத்துடன் நெளிந்தான். "இனி நாம் கிளம்பலாமா?" என்றான்.

"பாட்டியையும் கூட அழைத்துப் போகலாம்" என்றாள் ராதை.

"வ்வாட்!" என்று கத்தினான் கிருஷ்ணன். "ரொம்ப அழகுதான் போ."

"எங்கேப்பா?" என்றாள் பாட்டி.

"ஹனிமூனுக்குப் பாட்டி."

"அதெல்லாம் எனக்கு எதுக்கு? எனக்காக இந்த டிக்கெட் வாங்கித் தந்து விட்டாயே. அதுவே போதும்" என்றாள் பாட்டி.

என்ன என்பது போல் பார்த்தாள் ராதை.

"காசிக்குப் போகிறேம்மா பையனின் தயவால்."

ராதை வியப்புடன் கிருஷ்ணனின் பக்கம் பார்த்தாள். கிருஷ்ணன் சிரித்துவிட்டு, "அப்படிச் சொல்லாதீங்க பாட்டி. எனக்கு மட்டும் வேறு யார் இருக்காங்க உங்களைத் தவிர?" என்றான் பணிவோடு.

ஐந்து நிமிடங்கள் கழித்து டாக்சி ராக் பேலஸ்ஸை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கும்போது கிருஷ்ணன் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

"தாங்க்ஸ் பரசுராமன்! எல்லாம் நீங்கள் சொன்ன படியே நடந்து கொண்டிருக்கிறது."

# 8

அன்று பிற்பகல் அசெம்பிளியில் பார்த்தசாரதி வானொலி நிலையத்தின் சார்பில் மன்னிப்பு கேட்டுக் கொண்டான். அவனுடைய மனநிலை சரியாக இருக்கவில்லை. உண்மையில் தவறு அவனுடையது இல்லை. ஆனால் ஒரு நிறுவனத்தின் மிக உயர்ந்த பதவியை அடைந்து விட்ட பிறகு அந்த நிறுவனம் தன்னுடையது என்ற உணர்வு ஏற்பட்டுவிடும். அதனுடைய நல்லது கெட்டதை தங்களுடைய சொந்த விஷயமாகவே எடுத்துக்



கொள்வார்கள். கஷ்டப்பட்டு ஒவ்வொரு படியாக முன்னுக்கு வந்தவர்களுக்குத்தான் இந்த விஷயம் புரியும்.

அதனால்தான் சாரதிக்கு அன்று நடந்த நிகழ்ச்சி அவமானமாக இருந்தது. வரலாற்றில் முதல் முறையாக அசெம்பிளியில் வானொலி நிலையத்தின் இயக்குனர் மன்னிப்பு கேட்டுக் கொண்டது...

அங்கிருந்து அப்படியே நேராக வீட்டிற்குப் போய் விடலாமா என்று நினைத்தான். ஆனால் நன்றாக இருக்காது என்று ஆபீசுக்கு வந்தான். அப்பொழுது மணி இரண்டாகியிருந்தது.

சமுதாயக் கடமைக்கும், சட்டத்திற்கும் வித்தியாசம் தெரியாத அளவிற்கு முட்டாள் இல்லை சாரதி. ஆனால் இந்த விஷயத்தை அவ்வளவு லேசாக எடுத்துக் கொள்ள முடியவில்லை அவனால். நெற்றியில் கையைப் பதித்து சூனியத்தை வெறித்தபடி ரொம்ப நேரம் அப்படியே நாற்காலியில் அமர்ந்திருந்தான். யாராவது கொஞ்சம் பேச்சுக் கொடுத்தாலும் போதும் துக்கம் கட்டுமீறிக் கொண்டு வெளியே வந்துவிடும் போலிருந்தது அவனுடைய நிலைமை.

அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ரொம்ப கம்பீரமாக, ரிசர்வ்ட் ஆக இருப்பவர்கள் உள்ளூர மிகவும் மென்மையான இயல்பு கொண்டவர்களாக இருப்பார்கள்.

நாலரை மணிக்கு மேல் இருப்பு கொள்ளாமல் காரில் வீட்டிற்குப் போய் விட்டான்.

'சமீபகாலமாக நீங்க என்னவோ போல் இருக்கிங்க' என்று கேட்டது முதல் ஜெயா ஒருவிதமான உற்ற உணர்வை அனுபவித்துக் கொண்டிருந்தாள். காலையில் பதினோரு மணிக்கு இது நடந்தது. அன்று மதியமே பார்த்தசாரதி அசெம்ப்ளிக்குப் போனான். அவளுக்கு அவன் போனது தெரியும். வாடிய முகத்துடன் அவன் திரும்பி வந்ததை அவள் பார்த்தாள். திரும்பவும் நாலரை மணிக்கு அவன் வீட்டிற்குக் கிளம்பிப் போனதையும் கவனித்தாள்.

அதற்குப் பிறகு அவள் வழக்கம் போல் ஐந்து மணிக்கு வீட்டிற்கு வந்து விட்டாள். சிறிய போர்ஷனில் குடியிருந் தாள் அவள். அவளுடைய சம்பளம் அவளுக்கு போது மானதாக இருந்தது. அவள் மீது யாரும் ஆதாரப் பட்டிருக்கவில்லை.

ஆறு மணிக்கெல்லாம் சமையல் முடிந்து விட்டது. பிறகு தனிமையில் என்ன செய்வதென்று தெரியாமல் செய்தித்தாளை எடுத்து புரட்டத் தொடங்கினாள். அப்பொழுதுதான் அவளுக்கு நினைவு வந்தது காலையில் நடந்த சம்பவம்.

மங்கலான வெளிச்சம். பழைய ரிகார்டுகளின் குவியல்கள்... ராமன். அதற்குப் பிறகு அவளுடைய எண்ணம் சாரதியின் பக்கம் திரும்பியது. தான் கொஞ்சம் குசலம் விசாரித்ததுமே அவன் முகத்தில் தென்பட்ட தனிமை.

பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவளுடைய யோசனைகளின் பார்த்தசாரதி ஆழமாக இடம் பெற்று



விட்டான். ரொம்ப நேரம் கூட ஆகவில்லை. அதிகமாகப் போனால் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் ஆகியிருக்கும் அவ்வளவுதான்.

அவளுக்கு அந்த நிமிஷமே போய் அவனைத் தேற்றி ஆறுதல் சொல்ல வேண்டும் என்ற ஆவல் எவ்வளவு பலமாக ஏற்பட்டதென்றால் சட்டென்று முகத்தில் லேசாக பௌடரை ஒற்றிக்கொண்டு கதவைத் தாழிட்டு பூட்டி கீழே இறங்கினாள். யோசித்துப் பார்த்தால் இதெல்லாம் நம்ப முடியாத விஷயமாகத் தோன்றலாம். ஆனால் அங்கே யோசனைக்கு இடமில்லை. உணர்வு மட்டும்தான். அது ஒரு முறை ஏற்பட்டு விட்டால், பைத்தியக்காரத்தனம்.. அவசரக்குடுக்கை எந்த வார்த்தை யாக இருந்தால் என்ன? மனிதனை நிர்பந்தித்து நினைத்த காரியத்தை செய்யும்படி தூண்டும்.

ஆனால் அவன் வீட்டு கதவைத் தட்டி, அவன் வந்து கதவைத் திறந்ததும், அவன் முகத்தில் தென்பட்ட ஆச்சரியத்தைப் பார்த்ததும் அவளிடம் அதுவரை இருந்து வந்த வேகம் சட்டென்று தணிந்து விட்டது.

அவளுக்கு ஆண்கள் புதிதில்லை. ஆனால் ஒரு ஆணுக்காக இவ்வாறு உணர்வது புதிது.

புதிதில் யாருக்குமே தடுமாற்றம் இருக்கும். அது நாக்கை தடுமாறும் படி செய்யும். என்ன பேசுகிறோம் என்று தெரியாமலேயே, "உங்கள் வாழ்க்கையின் இருட்டை என் இந்த சமர்ப்பணம் கொஞ்சமாவது விரட்டியடிக்க முடியும் என்றால் எனக்கு அந்த வாய்ப்பை கொடுங்கள்" என்றான்.

இதே வார்த்தையை அவளிடம் வேறு யாராவது சொல்லியிருந்தால் வாய்விட்டு சிரித்திருப்பாள். ஆனால் அவள் மட்டும் அவ்வாறுதான் சொன்னாள்.

பார்த்தசாரதிக்கு ஒரு நிமிஷம் ஒன்றுமே புரிய வில்லை. அவளுக்கு மூளை கலங்கி விட்டதோ என்று தான் தோன்றியது சட்டென்று அவனுக்கு! ஏற்கனவே அன்றைக்கு அவன் மனதளவில் மிகவும் அடியுண்டிருந் தான். அதனால் அவள் என்ன சொல்ல வருகிறாள் என்று புரியாமல் ஓரடி பின்வாங்கினான்.

அவன் பின்னுக்கு நகர்ந்ததை அவள் வேறு விதமாக புரிந்து கொண்டாள். அவனை மெதுவாக இழுத்து அணைத்துக் கொண்டே ஏதோ சொல்ல வந்த அவன் இதழ்களில் முத்தம் பதித்தாள். அவன் வாழ்க்கையில் ஒரு பெண் விரும்பி முத்தமிட்டது. இதுதான் முதல் தடவை.

• • •

"நான் உன்னை இப்பொழுது முத்தமிடப் போகி றேன். உன் வாழ்க்கையில் முதல் முத்தம்! மே பதினாறாம் தேதி மாலை ஆறரை மணிக்கு ராக் பேலஸ் ஹோட்ட லில் முதலிரவுக்காக ஜோடனை செய்யப் பட்டிருக்கும் அறையில் ராதை என்று அழைக்கப்படும் பெண் வாழ்க்கையில் முதல் முத்தத்தை ருசி பார்க்கப் போகிறாள். யாரும் பார்த்து விடாதிங்க'' என்று கத்தினான் கிருஷ்ணன்.

என்ன ரகளை இது என்பதுபோல் பார்த்தாள் ராதை.



"இனிமேல் உன் எச்சரிக்கைகள் எதுவும் செல்லாது கண்ணே! உன் மீது எல்லா உரிமைகளையும் சம்பாதித்துக் கொண்டுவிட்டேன்."

அவன் உரிமைகளை ஒப்புக் கொண்டாற்போல் அவள் கண்களை மூடிக்கொண்டாள். ஒன்று- இரண்டு மூன்று வினாடிகள். அவள் உதடுகளில் உஷ்ணமான மூச்சுக் காற்று பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வந்து கொண்டிருந்த மூச்சு.

அவன் அவள் முகத்தையே பார்த்தான். கள்ளங் கபடம் இல்லாத முகம். மலர்ந்த செம்பருத்தியைப் போல் நிர்மலமாக... அழகாக.

தன் உதடுகளில் அவன் மூச்சுக்காற்றுப் பட்டதை அவள் கண்களை மூடியவாறே கவனித்தாள். தன்னையும் அறியாமலேயே மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டிருந் தாள். கண்களைத் திறக்கலாமா என்று நினைத்தாள். ஆனால் பயமாக இருந்தது. அவன் கைகளுக்கிடையே இருந்த தன்னை விடுவித்துக் கொள்ளணும் என்று நினைத்தாள். ஆனால் அப்படிக் கிடப்பது பிடித்திருந்தது. அவளுக்கே ரொம்ப வித்தியாசமாக இருந்தது. இந்த உணர்வு.

அவன் முற்றிலும் நெருங்கி வந்து விட்டாலும் தேவலை. அல்லது வராமல் இருந்தாலும் நன்றாக இருக்கும். இந்த எதிர்பார்ப்பு அவளை முற்றிலுமாக தன் வசமிழக்க செய்து கொண்டிருந்தது. மூன்றங்குல தூரத்தி லிருந்து வந்து தாக்கிய உஷ்ணமான மூச்சுக்காற்று அவள் தேகத்தில் ரத்தத்தை வேகமாக ஓடச் செய்து கொண்டிருந்தது.

அவள் மூளையில் எத்தனையோ எண்ணங்கள். வாழ்க்கையில் ஒரே ஒரு முறை வரும் இந்த அனுபவத்தை இவ்வளவு அபூர்வமாக அனுபவிக்க முடியும் என்ற விஷயம் எத்தனை பேருக்குத் தெரியும்? பயத்தாலும், கூச்சத்தாலும், தவறு செய்கிறோம் என்ற குற்ற உணர்ச்சியினாலும் எத்தனையோ பேர் இரண்டுங்கெட்டான் வயதில் இவ்வளவு நல்ல அனுபவத்தை இழந்து கொண்டிருக்கிறார்கள். இவன் தன் கணவன். தன்னைச் சுற்றிலும் கோட்டையாய் அவன் கைகள். அவன் அணைப்பில் ஒருவிதமான பாதுகாப்பு. எல்லாவற்றையும் விட ஒரு பரிபூர்ணத்துவம். தன் வாழ்க்கையை உள்ளங்கையில் வைத்து அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம் என்ற திருப்தி.

முதுகில் அவன் கைப்பட்டதும் அவள் யோசனையிலிருந்து மீண்டு தன்னை சமாளித்துக் கொண்டு கண்களைத் திறக்கப் போனபொழுது அவன் உதடுகள் அவளைத் தொட்டன, நிறைய இடங்களில், வரிசையாய், தவிப்போடு.

அவள் திணறிக் கொண்டிருந்தாள். தன்னிடமுள்ள சக்தியை எல்லாம் யாரோ துடைத்தெறிந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு. அவன் உதடுகள் அவள் கண்களையும், மூக்கையும், காதுகளையும் குசலம் விசாரித்து விட்டு கன்னத்தோடு சிநேகம் பண்ணிக் கொண்டு கீழே வந்து அவள் உதடுகளைத் தொட்ட பொழுது முற்றிலும் மயக்கம் வந்து சூழ்ந்து கொண்டார் போல் அவள் ஏறக்குறைய நினைவிழந்து விட்டாள்.



"ராதை! ராதை!" என்றான் பதட்டத்துடன்.

அவள் மெதுவாக கண்களைத் திறந்தாள். உடனே சமாளித்துக்கொண்டு, "ரொம்ப கலங்கடித்து விட்டேனோ?" என்றான் முறுவலுடன்.

"இப்பொழுதே இவ்வளவு கலங்கிப் போனால் ராத்திரிபூராவும் எப்படி?" என்றான். கண்களில் குறும்பு பளிச்சிட்டது.

ஆனால் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. "இன்னும் என்ன?" என்றாள் வியப்புடன்.

இம்முறை வியப்படைவது அவன் பங்காயிற்று. ஆனால் அதற்குள் குறும்பு வந்து இடம் பெற்றுக் கொண்டது. "நீ பி.எஸ்.ஸி. தானே?" என்று கேட்டான்.

"பி.ஏ."

"வயது?"

"இருபத்திரெண்டு."

"போகப் போக என்ன நடக்கும் என்று உண்மையாகவே தெரியாதா?"

"உஹூம்."

"அட கடவுளே!" என்று நினைக்கவில்லை அவன். அப்பாவித்தனமாக தோன்றிய அவள் கண்களை ஒருமுறை கூர்ந்து பார்த்துவிட்டு, ஏதோ சொல்லப்போனவன் சட்டென்று இப்படிப்பட்ட சமயத்தில் தேவையில்லை என்று நினைத்துக் கொண்டான்.

இருவருக்குமிடையே பேச்சு இருக்கவில்லை. சாரதிக்கு யோசித்துக் கொள்ள நேரம் தரவில்லை அவள். தன் இயலாமை பற்றிய சந்தேகம் அவன் மூளையில் எங்கேயோ புதைந்திருக்கக் கூடும். ஆனால் ஜெயாவின் கைவிரல்கள் அவன் உடம்பின் மீது...

கடலுக்கு நடுவில் திக்குமுக்காடி திணறிக் கொண்டிருக்கும் போது ஏதோ ஆதாரம் கிடைத்துவிட்ட உணர்வு. அதன் மூலம் ஏற்பட்ட தன்னம்பிக்கை.

அவன் கண்களைத் திறந்து பார்த்தான். அவளுடைய பெண்மை திருப்தி அடைந்து விட்ட ஃபீலிங். அவனுள் வளர்ந்து கொண்டிருந்த நம்பிக்கை.

அவன் சாரதியாக இல்லை. ரோம் நகரத்தை வெற்றிக் கொண்ட சக்ரவர்த்தியாக இருந்தான். பெண் ஒருத்தி காதலித்துவிட்டால் இந்த அளவுக்கு திருப்தியைத் தர வல்லவன் என்று அவனுக்குத் தெரியாது. அவள் தன்னைக் காதலிக்கிறாளா என்ற விஷயம் கூட அவனுக்கு நம்பிக்கையாகத் தெரியாது.

காதல் எங்கே தொடங்குகிறது? நட்பு மலரும் போதா? திருமணம் ஆன பிறகா? உடல் ரீதியாக உறவு ஏற்படும் போதா? அவன் விஷயத்தில் கடைசியதுதான் உண்மையாகும் போல் இருந்தது.

உடல் ரீதியாகவும், மனதளவிலும் திருப்தி ஏற்பட்டு விட்டதால் அவனுக்கு தூக்கம் வரவில்லை. பக்கத்திலேயே களைப்புடன் தூங்கிக் கொண்டிருந்த ஜெயாவையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். யார் இவள்? இவள்



விருப்பு வெறுப்புகள் என்ன? தன்னை இவள் காதலிக்கிறாளா?

இதையெல்லாம் அவன் கேள்வி கேட்டுக் கொள்ளவில்லை. அவன் யோசித்துக் கொண்டிருந்தது நெருக்கத்தைப் பற்றி. இந்த நெருக்கம் திருமணத்தால் வராது. சிநேகத்தாலும் வராது.

எத்தனையோ பேர் கணவன் மனைவியர் திருமணமாகி சில வருடங்களுக்குப் பிறகு மனதளவில் விலகிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இது கேவலம் அட்ஜெஸ்ட்மெண்ட்... உடலளவில் அட்ஜெஸ்ட் ஆகாமல் போனதால்தான். போகட்டும், நட்பு என்று எண்ணிக் கொண்டால் நிர்மலமான சிநேகம் அன்பாக மாறவேண்டும் என்றால் செக்ஸ் தேவைதானோ என்னவோ! ரொம்ப மோசமான தியரியாக தென்பட்டாலும் இதுதான் உண்மை என்று தோன்றியது.

உண்மையில் அவளுக்கும் தனக்குமிடையே ஓர் இரவு சிநேகத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. ஆனால் நடந்த நிகழ்ச்சி உயிரோட்டமுள்ளதாக அவன் கண்களுக்கு முன்னால் தென்பட்டுக் கொண்டிருந்தது. அப்படி நிழலாடி நிழலாடி அவள் மீது பிரியத்தை அதிகரிக்கச் செய்து கொண்டிருந்தது.

நாளைக்கு ஆபீசுக்குப் போனால்கூட அவளுடைய நினைப்பேதான் வரும். இரவு எப்பொழுது வரும் என்ற எதிர்பார்ப்பு. இதைக் காட்டிலும் என்ன இருக்க முடியும் காதலில்? மற்றவர்கள் இதைக் காமம் என்று நினைக்கக் கூடும். ஆனால் ஒருத்தரைப் பற்றி (உடல் ரீதியாக

இருந்தால்தான் என்ன?) எப்போதும் நினைத்துக் கொண்டே இருப்பதைக் காட்டிலும் வேறு என்ன இருக்கிறது? வெறும் சிநேகத்தில் இது சாத்தியமா? இந்த இச்சை குறைந்து போய்விடலாம். ஆனால் அதற்குள் அவள்பால் பிரியம் வளர்ந்துவிடும் இல்லையா?

அவள் கண்களைத் திறந்து, தன்னையே பார்த்துக் கொண்டிருந்த சாரதியைப் பார்த்தாள். ஜன்னல் வழியாய் வெளிச்சம் வந்து விழுந்து கொண்டிருந்ததை கவனித்து விட்டு, "நீங்கள் இரவு முழுவதும் தூங்கவே இல்லையா?" என்றாள்.

பதிலுக்கு ரொம்ப நேரம் மௌனமாக இருந்துவிட்டு அவன் சொன்னான், "ஜெயா! ஐ லவ் யூ" என்று.

* * *

ஜன்னல் வழியாக படுக்கையின் மீது விழுந்தன சூரியனின் கிரணங்கள். இரவு முழுவதும் தூக்கமில்லாததால் ஏற்பட்ட செம்மையோ, அர்த்த ராத்திரியில் கலங்கடித்த செம்மையோ, சூரியன் இன்னும் மேல்வானத்திற்கு வராததால் அடிவானத்தில் பரவிய செம்மையோ... படுக்கையில் நலிந்து போனதால் திருப்தியடைந்த மல்லிகைப் பூக்கள்.

கிருஷ்ணனுக்கும் ராதைக்கும் ஒரு வாரமாக இரவுக்கும் பகலுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. ராதைக்கோ எல்லாமே ஒரு விதமான கனவுபோல் இருந்தது. வாழ்க்கை இவ்வளவு நன்றாக இருக்கும் என்றும், காதலிப்பதை விட காதலிக்கப்படுவது இவ்வளவு அபூர்வமான உணர்வைத்



தரும் என்றும் அவளுக்குத் தெரியாது. சிறு வயது முதல் அவளுக்குத் தெரிந்தது பாட்டியை மட்டும்தான். அதோடு எப்போதும் சூழ்ந்திருந்த வறுமை. இப்பொழுது அது இல்லை. அதோடுகூட இந்த சிநேகிதன் வேறு. சுறுசுறுப்பான இளைஞன். மூன்று முடிச்சுக்களால் நெருக்கமானவன். எத்தனையோ புதுப்புது பாடங்களை கற்றுத் தந்தவன்.

பனிமலையிலிருந்து மேலே எழும்பி வந்து கொண்டிருந்த சூரியனை பார்த்து உல்லாசமாக சிறகுகளை விரித்தபடி பறந்து கொண்டிருந்த பறவையைப் போல் இருந்தது அவள் மனம். அருவிக் கரையில் துள்ளிக் குதித்து ஓடும் மான்குட்டியைப் போல், நதியின் ஆழத்தில் நிர்மலமாக நீந்தும் மீன் குஞ்சு போல்.

எத்தனை பேருக்குத் தெரியும் புனிதத்தில் உள்ள ஆனந்தம்?

பதினாறு வயதில் நாற்பது வருட அனுபவத்தைப் பெற்று, இருபதாவது வயதில் இனி எதுவுமே பெற முடியாமல் "பெமினிஸம், சினிஸிசம், ஃபிலாசஃபி போன்ற பலவித பெயர்கள் மூலமாக அதிருப்தியை திருப்திப்படுத்திக் கொள்ளும் ஸூடோ இன்டெலிஜென்டுகளுக்கு என்ன தெரியும் ஒன்றுமே தெரியாமல் இருப்பதில் இருக்கும் திருப்தியைப் பற்றி.

ஒரு வாரம் ஆனதும் ஊருக்கு திரும்பி வந்தார்கள். ஆனாலும் ராதையை வீட்டிற்குப் போகவிடவில்லை கிருஷ்ணன். "இந்த ஹனிமூன் முடிந்து போய் விட்டால் திரும்பி வாழ்நாளில் வரவே வராது" என்று சொல்லி விட்டு இன்னொரு நாளுக்காக ஹோட்டலில் அறையை [illegible] கொண்டான்.

"நாளையிலிருந்து இரண்டு பேரும் சம்சார சாகரத்தில் மூழ்கத்தானே போகிறோம். இன்றைக்காவது எல்லாவற்றையும் அனுபவிக்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே அவளை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவன் அணைப்பில் பூவாய் நலிந்து போனாள் ராதை. கசங்கிய படுக்கை, நலிந்துகொண்டிருந்த கீழ் உதடு. வினாடிகள் நிமிஷங்களாக... நிமிஷங்கள் மணிகளாக...

விடிந்தது.

சோர்ந்து போன உடல். சிவந்து போன கண்கள். அவள் மீது குனிந்து அவன் கேட்டான். "ராதை! நான் ஒரு விஷயம் கேட்கிறேன். பதில் சொல்லு. டூ யூ லவ் மீ?"

அவள் இமைகளின் படபடப்பு. அதிர்ந்த உதடுகள். வாயிலிருந்து வெளிவராத வார்த்தைகள். இதைவிட வேறெந்த வார்த்தைகளால் பதில் சொல்ல முடியும்?

"சரி போகட்டும். இன்னொரு கேள்வி. என்னை எப்பொழுது முதல் காதலிக்கிறாய்? ஒரு காலத்தில் என்னுடைய நட்பைகூட ஏற்றுக் கொள்ளவில்லை நீ. அப்படியிருக்கும் போது கேவலம் ரிஜிஸ்டரில் இரண்டு கையெழுத்துக்களை போட்டு விட்டதாலேயே காதல் உதித்துவிடுமா? இல்லாவிட்டால் இந்த நெருக்கம் தான் காரணமா?"

"அதெல்லாம் இல்லைங்க. அன்று மாலையில் ரிஜிஸ்ட்ரார் ஆபீசிலிருந்து வீட்டிற்கு வந்ததும் பாட்டி தந்த தாலியை நீங்க கட்டினீங்க பாருங்க மூன்று முடிச்



சுக்கள்! அதன் மூலமாகத்தான் அதற்கு பரிபூர்ணத்துவம் வந்து சேர்ந்து விட்டதாம். நான் எங்கேயோ படித்திருக்கிறேன். முதல் முடிச்சால் பெண் ஆணை ஒப்புக் கொண்டு விடுவாளாம். இரண்டாவது முடிச்சால் அன்பை எதிர்பார்ப்பாளாம். மூன்றாவது முடிச்சால் அவனுக்கு அர்ப்பணமாகி விடுவாளாம்."

"ஒருக்கால் நான் மூன்றாவது முடிச்சைப் போடாமல் இரண்டு முடிச்சுக்களையே போட்டேன் என்று வைத்துக்கொள். உனக்கு எப்படி தெரியும் அது?" சிரித்தான் கிருஷ்ணன்.

ராதை தன் கையால் அவன் வாயை பொத்தி, 'ப்ளீஸ்! அப்படிப் பேசாதீங்க" என்றாள்.

"அப்படி என்றால் பேசவில்லை. கடைசியாக ஒரு கேள்விக்கு பதில் சொல்லி விடு. காதல் என்றால் என்ன? அதைச் சொல்லு முதலில்."

அவள் முறுவலுடன் குனிந்து பால் பாயிண்ட் பேனாவால் இரண்டு வரிகளை எழுதிவிட்டு பாத்ரூமுக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டாள். அவன் காகிதத்தை எடுத்துப் பார்த்தான். அதில் இவ்வாறு இருந்தது.

'உள்ளத்தை உள்ளங்கையில் வைத்து வாழ்க்கையை சமர்ப்பணம் செய்வதுதான் காதல். இதற்குப் போய் விளக்கங்கள் எதுக்கு? மனதில் வானவில்லை தீட்டிவிட்டு இப்பொழுதா கேட்பார்கள், காதல் என்றால் என்னவென்று?'

அக்காகிதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு எழுந்தவன் தனக்குள் சிரித்துக் கொண்டே அதே காகிதத்தின் பின் பக்கத்தில் பேனாவால் எழுதினான்.

"என் சிநேகத்தையே மறுத்தவள் நீ. காதல் என்பது முதலில் சிநேகத்திலிருந்துதான் தொடங்க வேண்டும் என்பது என் அபிப்பிராயம். பிறகு அந்த சிநேகத்தில் உடல்கள் நெருக்கமாக வேண்டும். அதுதான் த்ரில். அந்த த்ரில் இன்னும் ஏதாவது மிச்சம் இருந்தால் அப்பொழுது கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். என்னுடைய இந்த தியரிக்கு நல்ல அடி கொடுத்துவிட்டாய் நீ. உன் அபிப்பிராயத்தின்படி காதல் என்பது சிநேகம் மூலமாகவும், ஸ்பரிசம் மூலமாகவும் ஏற்படாது என்றாய். அதனால் நிம்மதியாக வேறு யாரையாவது காதலிக்கத் தொடங்கு. உன் கழுத்தில் நான் மூன்று முடிச்சுக்களைப் போடவில்லை. வேண்டுமென்றால் அவிழ்த்துப் பார்த்துக் கொள். இரண்டு முடிச்சுக்களைதான் போட்டேன். பை தி வை, ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்குப் போய் கையெழுத்திற்காக தேடிப் பார்க்காதே. அது பழைய புத்தகக் கடையில் வாங்கிய லெட்ஜர்.

கடைசியாய்...

தாங்க்ஸ் ஃபார் தி எக்ஸ்பீரியன்ஸ்.

கிருஷ்ணன்.

ராதை பாத் ரூமிலிருந்து திரும்பி வந்த போது மேஜை மீது காகிதம் படபடத்துக் கொண்டிருந்தது. கிருஷ்ணன் இருக்கவில்லை.



சுற்றிலும் கடலின் பேரிரைச்சல். நடுவில் எலிஃபெண்டா குகையின் நிசப்தம். பிரளயகால சண்ட மாருதத்தின் மயான அமைதி.

அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. துக்கம் கூட வரவில்லை. அதைவிட பயங்கரமான அதிர்ச்சி. கையிலிருந்த காகிதத்தையே பார்த்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தபடி அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

உண்மையில் காதல் சிநேகத்திலிருந்துதான் தொடங்குகிறதா? மனதை அர்ப்பணம் செய்வது என்பதெல்லாம் வெறுமே ஏட்டில் வருவதுதானா? ஒன்றுமே தெரியாத அவள் ஒரே இரவில் ஒன்றுமே இல்லாதவளாகி விட்டாள். இப்போது என்ன செய்வது?

அவள் யோசனை முதலில் பாட்டியின் மீதுதான் திரும்பியது. பாட்டிக்கு இந்த விஷயம் தெரிந்தால் இதயமே நின்று செத்துப் போய் விடமாட்டாளா? ஜெயா காதில் விழுந்தால்? எளிதாய் தள்ளிவிடுவாளா இந்த விஷயத்தை? 'விட்டுத் தள்ளு. அவனைத் தொலைத்துத் தலைமுழுகிடு' என்பாளா? உண்மையில் அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் தரத் தேவையில்லையா?

இவ்வளவு வேதனையிலும்கூட அவளுக்கு கிருஷ்ணன் மீது கோபம் வரவில்லை. தன் அஜாக்கிரதைக்கு தன்னையே நிந்தித்துக் கொண்டாள்.

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். ரேடியோவிலிருந்து குறைந்த வால்யூமில் பாட்டு கேட்டுக் கொண்டிருந்தது. தலையணைக்கு பக்கத்தில் வாடிய

மல்லிகைக்சரம் அசையாமல் கிடந்தது. மேலே மின்விசிறி சுழன்றுகொண்டே இருந்தது.

கீழே தரைவிரிப்பின் மீது விட்டெறிந்தாற்போல் அங்கொன்றும் இங்கொன்றுமாய் கிடந்தன செருப்புக்கள். படுக்கைகூட கசங்கியிருந்தது.

தலையணைக்குக் கீழே ஏதோ தென்படவே எடுத்துப் பார்த்தாள். சிகரெட் பாக்கெட். கிருஷ்ணனுடையது. அப்பொழுதுதான் அவளுக்கு அழுகை வந்தது. அப்படியே கட்டிலில் தலையை முழங்கால்களில் புதைத்துக்கொண்டு மௌனமாக அழத்தொடங்கினாள்.

சுமார் பத்துமணியளவில் கதவைத் தட்டிய சத்தம் கேட்டது. வெயிட்டர் வந்து, "காபி வேண்டுமா மேடம்?" என்று கேட்டான்.

அவனுக்கு தன் முகத்தைக் காட்டாமல் திரும்பிக் கொண்டு, "வேண்டாம்" என்றாள்.

அவன் போன அரைமணி கழித்து எழுந்தாள். சூட்கேசில் எல்லாவற்றையும் அடுக்கி வைத்துவிட்டு கௌண்டருக்குப் போன் செய்தாள். அந்த முடிவை எடுத்துக் கொண்ட பிறகு அவள் சாதாரணமாக ஆகி விட்டாள். துக்கம்கூட வரவில்லை. திருமணம் ஆவதற்கு முன்னால் இருந்த ராதையைப் போலவே இருந்தாள்.

கௌண்டரில் ரிசப்ஷனிஸ்ட் பில்லுக்கு பணம் எதுவும் கட்டத் தேவையில்லை என்று சொல்லி விட்டாள்.



பதினோரு மணிக்கு அவள் ஹோட்டலிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டாள். பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். பாட்டி இல்லாத வீடு வெறிச்சென்று இருந்தது.

அவள் சமையல் எதுவும் செய்யவில்லை. எப்பொழுது இருட்டும் என்று காத்துக் கொண்டிருந்தாள். இருட்டிய பிறகு ஏரிப் பகுதியில் ஆளரவமிருக்காது.

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. ஒருக்கால் ஜெயா வருவாளோ என்று பயந்தாள். ஆனால் அதிர்ஷ்டவசமாக வரவில்லை.

ஆறு மணியளவில் அவள் எழுந்து வீட்டைப் பூட்டினாள். சாவியை பக்கத்து வீட்டில் தந்து, வீட்டுக்காரரிடம் ஒப்படைக்கச் சொன்னாள்.

"வீட்டைக் காலி பண்ணறீங்களா?" கேட்டாள் பக்கத்து வீட்டுக்காரி.

"ஆமாம்."

"சாமான்கள் எல்லாம் எங்கே?"

"எடுத்துக் கொண்டு போகவில்லை. "மறுகேள்விக்கு இடம் தராமல் அங்கிருந்து போய்விட்டாள் ராதை. இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. ஏரிக்கு அருகில் யாரும் இல்லை.

அவள் மனம் நிர்மலமாக இருந்தது. ஒரே வருத்தம் பாட்டியைப் பற்றிதான். பிழைத்திருந்து இந்த விஷயத்தைப் பாட்டியிடம் சொல்வதைவிட, இறந்து போய் சொல்லாமல் இருப்பதே மேல்.

இந்தப் பக்கத்தை விட அந்தப் பக்கம் ஆழம் அதிகம் என்று நினைத்தாள். பெரிய பெரிய பாறாங்கற்களுக்கு நடுவில் நிர்மலமாக இருந்தது ஏரி. தொலைவில் மின் விளக்குகள் மினுக்மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தன. எங்கேயிருந்தோ நாய் ஒன்று பெரிதாக ஊளையிட்டுக் கொண்டிருந்தது.

அவள் கல்லின் மீது ஏறினாள். தனக்கு இவ்வளவு அநியாயம் பண்ணிவிட்ட தெய்வத்தை கடைசி முறையாக பிரார்த்தித்துக் கொள்ள விரும்பவில்லை.

கண்களை அழுத்தமாக மூடிக் கொண்டாள். அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால் திரும்பவும் மனுஷியாக மட்டும் பிறக்கக் கூடாது என்று விரும்பினாள். சிநேகம், நேசம், அன்பு, கல்யாணம் இவை எதுவுமே இல்லாத ஏதாவது ஜந்துவாக பிறப்பதே மேல் என்று நினைத்தாள்.

காலடியில் மண் கொஞ்சம் கொஞ்சமாக நழுவிக் கொண்டிருந்தது. மூச்சை இழுத்துக் கொண்டு அவள் குதிக்கப் போன போது கேட்டது ஒரு குரல்.

"குட் ஈவினிங் ராதை! மறுபடியும் யாரைக் காப்பாற்றப் போகிறாய்?"

அவள் திடுக்கிட்டு கண்களைத் திறந்தாள். அங்கே டிஎஸ். கிழவன்.

## 9

நான்கு நாட்கள் கழிந்தன. ராதை ஆபீசுக்கு வர வில்லை. மேலுக்கு சாதாரணமாகவே ...



...ஷிர, கிருஷ்ணனுக்குக் கலக்கமாகவே இருந்தது. அவளை ஹோட்டலில் விட்டுவிட்டு வந்த ஓரிரண்டு மணி நேரத்தில் அழுது ஆற்றிக் கொண்டே வீட்டுக்கு வந்து விடுவாள் என்றும், ஓரிரண்டு நாட்களில் தேறிக்கொண்டு ஆபீசுக்கு வந்து விடுவாள் என்றும் நினைத்துக் கொண்டிருந்தான். அவ்வாறு இல்லாவிட்டால் அவன் செய்த காரியத்தை நாலு பேருக்கு முன்னால் எடுத்துச் சொல்லி உலுக்கி எடுப்பாள் என்று எதிர்பார்த்தான். அப்படி மட்டும் நடந்தால் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று எப்படி தப்பித்துக் கொள்ளலாம் என்று யோசித்து வைத்துக் கொண்டிருந்தான்.

மேலும் பத்து நாட்கள் கழிந்தன. அவன் கலக்கம் அதிகமாகிவிட்டது. அவளைப் பற்றி போலீசுக்கு ஏதாவது கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டு விட்டாளோ என்ற சந்தேகம் மனதில் தோன்றி நிமிஷத்தில் அது மகா விருட்சமாகிவிட்டது. அன்று மாலை யில் சாதாரணமாக போவது போல் அந்தப் பக்க மாக போய் எட்டிப் பார்த்தான். ராதையின் வீடு பூட்டி யிருந்தது. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆபீஸ் வேலை யாக வந்தாற்போல் பக்கத்து வீட்டாரிடம் விசாரித்தான்.

பக்கத்து வீட்டுக்காரி சொன்னாள். "ராதையின் பாட்டி காசிக்குப் போயிருக்கிறாள் தம்பீ. ராதை கல்யாணமாகி ஹனிமூனுக்குப் போயிருக்கிறாள். பத்து நாட்களுக்கு முன்னால் கணவன் மனைவி இருவரும் டாக்ஸியில் ஏறிப் போனதைப் பார்த்தேன்."

'அந்தக் கணவன் நான்தான்' என்று மனதில் நினைத்துக் கொண்டான் கிருஷ்ணன். அவன் தன்னை அடை...

யாளம் தெரிந்துகொள்ளாமல் போனது சந்தோஷமாக இருந்தது.

அவன் மேலும் சொன்னான். "திரும்பவும் தேனிலவுக்கு வந்தாங்கப்பா கணவன் மனைவியும். இன்றைக்குக் காலையிலேயே கிளம்பிப் போனார்கள். ஏதோ ஊர். காஷ்– காஷ்..."

ரத்தம் வெளுத்துப் போன முகத்தோடு "காஷ்மீருக்கா?" என்றான்.

"அதுவேதான். காஷ்மீர்."

மூளையில் ஸ்க்ரு டிரைவரை வைத்து சுழற்றினாற் போல் இருந்தது கிருஷ்ணனுக்கு. "அந்தப் பையன் எப்படி இருந்தான்? நீங்க பார்த்திங்களா?" என்று கேட்டான் ஹீனஸ்வரத்தில்.

அதுவரை நன்றாகவே பேசிக் கொண்டிருந்தவன் சட்டென்று எரிந்து விழுந்தான். "அக்கம் பக்கத்து பையன்களைப் பார்த்துக்கிட்டு இருப்பதுதான் என் வேலையா?" என்று.

கிருஷ்ணன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு அங்கிருந்து வந்து விட்டான்.

ராதை திரும்பவும் கல்யாணம் செய்து கொண்டிருப்பாளோ? இவ்வளவு சீக்கிரத்தில் இன்னொரு பையன் எங்கே கிடைத்தான்?

அவனுக்கு ஏனோ ராதை இன்னொருத்தனை கல்யாணம் செய்துகொண்டு விட்டாள் என்றால் சந்தோஷமாக இல்லை. அது கற்பனைக்கும் எட்டாத



விஷயம். அவள் தேம்பி தேம்பி அழுது கொண்டிருப்பாள் என்று நினைத்தான். தன் காலில் வந்து விழுவாள் என்று எதிர்பார்த்தான். அப்படி எல்லாம் செய்யாமல் போனாலும் நாலு பேருக்கு முன்னால் உலுக்கி எடுப்பாள் என்று எண்ணிக் கொண்டிருந்தான். அதுதானே தவிர தான் கட்டிய தாலியை அவிழ்த்து விட்டு (தான் இரண்டு முடிச்சுக்களே போட்டிருந்தாலும் கூட) பத்து நாட்கள் கூட கழியும் முன் இன்னொருத்தனை திருமணம் செய்து கொண்டு விடுவாள் என்று நினைக்கவில்லை. ராதை செய்யக் கூடிய காரியமா இது?

அவள் அவ்வாறு செய்யமாட்டாள் என்று தன்னையேதான் நம்ப வைத்துக் கொண்டு மறுபடியும் தன் அன்றாட வேலையில் ஆழ்ந்து போய்விட்டான். ஆனால் வேலையில் கவனம் குறைந்துவிட்டது.

ரேடியோ ஸ்டேஷனில் பிரமராம்பாள் ஒரு ப்ரொட்யூசர். அவளைப் பார்த்தாலே எல்லோருக்கும் உதறல். அவள் டிசிப்ளினுக்கு மறுபெயர். சுமார் பதினைந்து ஆண்டுகளாக அவள் அங்கே வேலை செய்து கொண்டிருந்தாள். ரசிகர்களுக்குக்கூட அவள் பங்கெடுத்துக் கொள்ளும் நாடகம் என்றால் மிகவும் பிடிக்கும். 'காவ்ய சாகுந்தலம்' என்ற நாடகத்தை அவள் இயற்றினாள். அது ஒலி பரப்பானதுமே தமிழ் நாட்டின் நான்கு மூலையிலிருந்தும் பாராட்டுக்கள் வந்து குவிந்தன. எந்த நாடகத்திற்குமே கிடைக்காத நல்ல பெயர் அதற்குக் கிடைத்தது.

இது நடந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி மிலிட்டரி மார்ச்ஃபாஸ்ட் ஒத்திகையை கவர் பண்ண வேண்டியிருந்தது. வானொலி நிலையத்தின் சார்பில் கிருஷ்ணன் போனான்.

ஆகஸ்ட் பதினாறாம் தேதி பிற்பகல் மூன்று மணிக்கு இரண்டாவது முறையாக காவ்ய சாகுந்தலத்தை மறுபடியும் ஒலிபரப்பப் போவதாக சனிக்கிழமையன்று ரேடியோவில் அறிவிக்கப்பட்டது. ஞாயிற்றுக் கிழமை காலையில் செய்திகள் முடிந்ததுமே திரும்பவும் நினைவூட்டப் பட்டது.

ஏற்கனவே நல்ல நாடகமாக இருந்ததாலும், இசை நாடகமாக இருந்ததாலும், அதுவும் பிரமராம்பாளின் தலையில் மறுபடியும் நிகழப் போவதாக தெரிந்ததாலும் ரசிகர்கள் பெருமளவில் அதற்காகக் காத்திருக்கத் தொடங் கினார்கள்.

பிரமராம்பாள் அந்த நாடகத்தைத் தன் வாழ்க்கையின் சிறந்த படைப்பாக பாவித்தாள். உண்மையில் அது அவ்வளவு உயர்ந்த நாடகம்தான். அன்றைக்கு மாலையில் அவள்தன் வீட்டுக்கு நாலைந்து சிநேகிதிகளை டீக்கு அழைத்திருந்தாள். அவர்கள் எல்லோரும் பெரிய பெரிய பதவிகளில் இருப்பவர்கள். ரேடியோவைக் கேட்பதற்குக் கூட ஓய்வு இல்லாதவர்கள். இந்த விதத்திலேயாவது அவர்களுக்கு தன்னுடைய படைப்பிலக்கியத்தைக் காட்டுவோம் என்பது அவள் உத்தேசம். அவர்களும் அவள் அபிப்பிராயத்தை ஆமோதித்தார்கள்.

சரியாக மூன்று மணி ஆயிற்று.

எல்லோரும் உட்கார்ந்து தேநீர் குடித்துக் கொண்டிருந்தார்கள். சரியாக மூன்று மணி ஐந்து வினாடிக்கு, "ஆகாசவாணி... வானொலி நிலையம்" என்று கிருஷ்ணனின் குரல் கணீரென்று கேட்டது. "இசை நாடகம். தயாரிப்பு திருமதி பிரமராம்பாள்." தொடர்ந்து வீணையில் கல்யாணி ராகத்தில் ஆலாபனை ஒலித்தது.



சூழ்நிலையை மறந்து போய் பிரமராம்பாள் நாடகத்தை கேட்பதில் ஆழ்ந்து போய் விட்டாள்.

துஷ்யந்தன் சகுந்தலையை வர்ணித்துக் கொண்டிருந் தான்.

"ஆஹா!" என்றார்கள் யாரோ. எல்லோரும் மெய் மறந்து போய் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சகுந்தலை சொல்லிக் கொண்டிருந்தாள். "இந்த வண்டு என் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக் கிறது. என் மனதை யாரோ அபகரித்துக் கொண்டு— லெஃப்ட் ரைட்— பாய்ஸே— தாம்" என்ற கர்ண கடூரமான குரல் நடுவில் மென்மையான சகுந்தலையின் குரலை அடக்கிவிட்டு மிலிட்டரி மார்ச்ஃபாஸ்டை ஆரம்பித்துவிட்டது.

அதற்குப் பிறகு துஷ்யந்தன், "சகி! நலம்தானே?" என்றான். மிலிட்டரிக்காரன், "ஆகே சல் தேஜ் ஸே" என்றான்.

அதற்குப் பிறகு உரையாடல் இப்படி நிகழ்ந்தது. "பிரபு! ஆசனத்தில் அமருங்கள். எங்கள் இல்லத்தில் உயர்ந்த சிம்மாசனம் இல்லை. லெஃப்ட்— லெஃப்ட்— தைன்— முட்— ஏக்— ஏக்— தோ— உன் தலைவிக்கு வாயிலிருந்து வார்த்தை வெளிவரவில்லை போலும். ஒருக்கால் வாய் திறந்து பேசினால் முத்து உதிர்ந்து விடுமோ என்ற பயமோ? சாவ்தான்— விஷ்ராம்— கதம்தால்."

பிறகு வாத்திய இசை கேட்டது. அதைத் தொடர்ந்து தேசிய கீதம் தொடங்கிவிட்டது.

எல்லோரும் திரும்பி பிரமராம்பாளின் பக்கம் பார்த்தார்கள். அதற்குள் அவள் முகம் ரோஷத்தால் சிவந்துவிட்டிருந்தது. சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்து நின்றாள்.

லட்சக் கணக்கான ரசிகர்கள் சகுந்தலை துஷ்யந்தனின் மிலிட்டரி மார்ச்ஃபாஸ்ட் நிகழ்ச்சியைக் கேட்டார்கள். ட்யூட்டி ரூமில் உட்கார்ந்தபடி நாவலை படித்துக் கொண்டிருந்த ஆபீசர் இந்த உலகத்திற்குத் திரும்பி வந்து சட்டென்று அணைத்துவிட்டு ரசிகர்களின் பேரானந்தத்திற்கு தடை ஏற்படுத்தியிருக்காவிட்டால் முழுவதையும் கேட்டிருப்பார்கள்.

மறுநாள் பிரமராம்பாள் கிருஷ்ணனை எவ்வளவு தூரம் திட்டினாள் என்றால் மெமோ கொடுக்க வேண்டிய பார்த்தசாரதியே நேரில் வந்து அவளை சமாதானப்படுத்த வேண்டியதாயிற்று. ஏற்கெனவே ரத்த அழுத்த நோயாளியான அவள் கத்திக் கத்தி அப்படியே நாற்காலியில் தடாலென்று சரிந்து விட்டாள். அவள் தன்னுடைய நிகழ்ச்சியை எவ்வளவு உயிராக பாவித்து வந்தாள் என்று எல்லோருக்கும் தெரியும். அப்படியிருக்கும் போது அவளுடைய டேப்பின் மீது கிருஷ்ணன் மிலிட்டரி மார்ச்ஃபாஸ்ட் ஒத்திகையை ரிகார்ட் செய்து விட்டான். அது ஒரு தவறு. ஏதாவது டேப்பை இரண்டாவது முறையாக ஒலிபரப்ப வேண்டும் என்றால் அதை முழுவதுமாக கேட்டுவிட்டு ஓ.கே. செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் போனது இரண்டாவது தவறு.

பிரமராம்பாளை எதிர்த்துப் பேசும் தைரியம் யாருக்கும் இல்லை. அவ்வளவு சீனியர் அவள். கிருஷ்ணன்



கைகளை பிசைந்தபடி நின்று கொண்டிருந்தான். எல்லோரும் போன பிறகு மெதுவாக அங்கிருந்து நகரப் போனவன் திடுக்கிட்டுப் போனான்.

ஆபீசிற்கு எப்பொழுது வந்தாளோ தெரியாது. தொலைவில் மேஜைக்கு முன்னால் ராதை நின்று கொண்டிருந்தாள். நடந்ததை எல்லாம் பார்த்திருப்பாள் என்று தோன்றியது. அவள் திடீரென்று அங்கே எதிர் பார்க்கவில்லை. ஆனால் அவன் திடுக்கிட்டது அதற்காக இல்லை. அவள் கழுத்தில் புடவைக்கு மேல் பளிச்சென்று தெரிந்த தாலிச்சரடைப் பார்த்து.

அவளை நெருங்கப் போனவன் நின்றுவிட்டான் அவளிடம் எப்படிப் போவான்?

ஆன்னால் அவளிடம் போக வேண்டும் என்ற விருப்பம் பலமாக ஏற்பட்டது அவனுக்கு அவளால் தன் பரபரப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. அதற்குப் பிறகு அவள் என்னவானாள்? ஒரு வாரமாக எங்கே இருந்தாள்? பல விதமான கேள்விகள் அவனைத் துளைத்துக் கொண்டிருந் தன.

அவன் ஊகித்துக் கொண்டிருந்தது வேறு. அவள் தன்னைத் தனியாக வந்து சந்திப்பாள் என்றும், அழுது ஆர்ப்பாட்டம் செய்வாள் என்றும் நினைத்தான். ஆனால் அவளோ மின்னலாய் தோன்றிவிட்டு மாயமானது அவனுக்கு அதிர்ச்சியைத் தந்தது. அதோடு தான் வெசவு களை வாங்கிக் கட்டிக் கொண்டிருந்த போது அவள் தன்னைப் பார்த்து தலைகுனிவாக இருந்தது.

விசாரித்தபோது அவள் அன்றுதான் வேலையில் ஜாயின் செய்திருப்பதாகத் தெரிய வந்தது.

அன்று மாலையில் தன்னைச் சந்திக்க வருவாளோ என்று பயந்து ஒரு மணி நேரம் பர்மிஷன் கேட்டுக் கொண்டு போய் விட்டான். ஆனால் அவ்வாறு எவ்வளவு நாட்களுக்குப் போய் விட முடியும் அவனால்?

அது போலவே கொஞ்ச நாட்கள் தன்னைச் சுற்றிலும் சதா இரண்டு மூன்றுபேர் இருப்பதுபோல் பார்த்துக் கொண்டான்.

ஆனால் சீக்கிரத்திலேயே அவனுக்கு ஒரு விஷயம் புரிந்துவிட்டது.

ராதை தன்னைத் தனியாக சந்திப்பதற்கு கொஞ்சமும் முயற்சி செய்யவில்லை. அவ்வளவு ஏன்? அவன் பக்கமாக ஏறெடுத்துப் பார்க்கவும் முயற்சி செய்யவில்லை.

• • •

காலவெள்ளத்தில் மேலும் இரண்டு மாதங்கள் கழிந்தன. ராதையிடம் எந்த மாறுதலும் இல்லை. வழக்கம் போலவே ஆபீசுக்கு வந்தாள். மாலையில் திரும்பிப் போனாள். கிருஷ்ணனிடம் எதுவும் பேசவில்லை. குறைந்த பட்சம் ஏறெடுத்தும் பார்க்கவில்லை அவனை.

ஆனால் அவன் பால் வெறுப்போ, துவேஷமோ கிடையாது. முன்பின் அறியாத ஒரு நபரிடம் நடந்து கொள்வது போலவே நடந்து கொண்டாள்.



அதுதான் அவனை வருத்தப்படுத்திக் கொண்டிருந்தது. அவள் திட்டினாலோ அல்லது துவேஷத்தோடு விலகிப் போனாலோ கூட நன்றாக இருந்திருக்கும். இப்படி பட்டுக் கொள்ளாமல் இருப்பதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

போகட்டும். எல்லாவற்றையும் மறந்து போய் விடலாம் என்று நினைத்தால் அவள் கழுத்தில் திருமாங்கல்யம் பளீரென்று தென்பட்டுக் கொண்டிருந்தது. திருமணம் நடந்ததற்காக எல்லோருக்கும் பார்ட்டி கூட தந்தாள். கணவன் விஷயம்தான் தெரியவில்லை.

அவள் சாதாரணமாக இருக்க இருக்க அவனுக்கு அவளுடைய நினைவு அதிகமாகி விட்டது. அன்றைக்கு முதலிரவன்று தன்னுடன் பிணைந்துவிட்ட அவளும் இவளும் ஒன்றுதானா?

பழைய உரிமையை புதுப்பித்துக் கொண்டு அதைத் தெரிந்துகொண்டு விடலாம் என்று நினைத்து மெதுவாக உரிமையோடு பேச முயன்றான். அவள் சிரித்துக் கொண்டே பதில் சொல்லாமல் அங்கிருந்து நழுவி விட்டாள்.

ஆனால் அவள் உள்ளூர எவ்வளவு வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தாளோ ஜெயா ஒருத்திக்குத் தான் தெரியும். நடந்ததை எல்லாம் கேட்டு ஆச்சரியமடைந்து விட்டாள். வாயிலிருந்து வார்த்தையே வரவில்லை. ஆவேசத்தினால் உதடுகள் அதிர்ந்தன. "காலரைப் பிடித்து நாலு பேருக்கு முன்னால் உலுக்கி எடுக்கலாமா?" என்றாள்.

ராதை வேதனையுடன் சிரித்துவிட்டு, "எனக்கு எதுவுமே தெரியாது என்று சொல்லுவான். நம்மால் என்ன செய்யமுடியும்? விட்டுத் தள்ளு" என்றாள்.

"நம்மால் எதுவுமே செய்யமுடியாது என்று சும்மா இருந்துவிட்டால் இப்படிப்பட்ட அக்கிரமங்களை எவ்வளவு வேண்டுமானாலும் பண்ணுவார்கள். நாம்தான் பாடம் கற்பிக்கணும்."

"என்னவென்று? நம்மிடம் சாட்சியங்கள் என்ன இருக்கு? அந்த ரிஜிஸ்ட்ரார், வேலைக்காரன் எல்லோரும் அவனுக்கு வேண்டியவர்கள்தான். அவன் பேச்சில் மயங்கி விட்டேன். தவறு என்னுடையதுதான்."

"சரி. நீ ஏமாந்து போய் விட்டாய். அவன் வலையில் விழுந்து விட்டாய். ஆனாலும் ஒரு வாரத்திற்குள் அவனுக்குத் தெரியவில்லையா காதல் என்றால் என்னவென்று? அவன் இதுவரையில் பார்த்த காகிதப் பூக்களுக்கும் உனக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ள வில்லையா?" என்றாள் ஜெயா. அவள் மனதில் கடல் அலைகள் போல் யோசனைகள்.

ஒரு வாரம் கணவன் மனைவியாய் கழித்த அவனுக்கு காதல் ஏற்படவில்லை என்றால் பின்னே காதல் எப்படித்தான் அரும்பும்? காதலிப்பதற்கு ராதையை விட அருகதை உடைய பெண் வேறு ஒருத்தி இருக்க முடியுமா? அதுவரை அவள் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருந்தவன் அந்த மோகம் தணிந்ததும் உதறிவிட்டான் என்றால்...

எல்லாமே காமத்துடன்தான் பிணைந்திருக்கிறதா?



அதற்குள் ராதை பேச்சை மாற்றிக்கொண்டே, "சாரதி ...ன சொல்கிறார்?" என்றாள். ஜெயா சாரதியிடம் ...னதை அவள் அறிவாள். ஜெயா எப்போதுமே ...தக்கு ஒரு கேள்விக்குறிதான்.

"ஒரு சின்ன சம்பவம்... அன்றிரவு நடந்தது. அவரை ...றிலுமாக மாறிவிட்டது" என்றாள் ஜெயா சிரிக்க ...ன்றபடி. "அவர் காதலில் விழுந்து விட்டார்."

ராதை சிரிக்கவில்லை.

காதல்... காதல்.

ஜெயா மேலும் சொன்னாள். "அவர் என்னைத் ...மணம் செய்து கொள்வாராம்." ரொம்ப சாதாரண ...க சொல்ல முயன்றாள். ஆனால் அந்தக் குரலில் ...சான நடுக்கம் இழையோடியது.

"உன்னைப் பற்றி எல்லாம் தெரிந்திருந்தும் செய்து ...ள்கிறேன் என்று சொன்னால்..." தாழ்ந்த குரலில் ...ன்னாள் ராதை. "செய்து கொள்ளேன்."

ஜெயா வியப்புடன் அவளைப் பார்த்தாள். "நீ ...நினைவோடுதான் பேசுகிறாயா? ஒரு நாள்... அதுவும் ...இரவு அறிமுகத்தை வைத்துக்கொண்டு அவனைப் ...மணிக்கொள் என்கிறாயா?"

"அப்படி என்றால் நிறைய நாட்கள்... நிறைய இரவு ... அறிமுகம் இருந்தால்தான் செய்து கொள்ளணுமா?" ...றவள் சட்டென்று ஜெயாவைப் பார்த்தாள், அவளை ...த்தப்படவைத்து விட்டோமோ என்று.

ஆனால் ஜெயா அதைப் பொருட்படுத்தாமல் இயல்பான தோரணையில், "எனக்கு இந்த காதல் கத்திரிக்காயில் நம்பிக்கை இல்லை" என்றாள்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு ராதை மனப்பூர்வமாக சிரித்தாள். "ரொம்ப வினோதமான மனப்பான்மை நம்முடையது. காதலுக்கு முக்கியம் திருமணம் என்று நானும், காதலே இல்லை என்று நீயும். ஒரு ஸ்பரிசத்தினால் உன்னைக் காதலிக்கிற சாரதியும். கல்யாணத்திற்கு முன்பே ஸ்பரிசமும் காதலும் வேண்டும் என்று என்னும் கிருஷ்ணனும். உலகம் முழுவதும் நம் நால்வருக்குள்ளேயே இருப்பதுபோல் தோன்றுகிறது. சிக்கல் என்னவென்றால் ஒரு ஸ்பரிசத்திற்காக கல்யாணம் என்ற பெயரில் என்னை ஏமாற்றிவிட்டான் கிருஷ்ணன். ஒரே ஸ்பரிசத்தில் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்கிறார் சாரதி. யோசித்துப் பார்த்தால் ஒழுக்கத்திற்கு மதிப்பு நாமாக ஏற்படுத்தியதுதான். இல்லை என்று நினைத்தால் இல்லை."

"எனக்கு ஒரு சந்தேகம்."

"என்ன?"

"காதல் என்ற பேச்சே இல்லாமல் கிருஷ்ணனை காதலித்த ராதை ஒழுக்கம் கெட்டவளா? கல்யாணம் என்ற பேச்சே இல்லாமல் கர்ணனை பெற்றெடுத்த குந்தி ஒழுக்கம் கெட்டவளா?" என்றாள் ஜெயா.

ராதை சிநேகிதியை நிமிர்ந்து பார்த்தாள். "வார்த்தைகளால் உன் மனதை காயப்படுத்தி விட்டேனோ?" என்றாள்.



இருவரும் அனௌன்சர் ரூமுக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஜெயா நடுவிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். சரியாக நேரம் ஆனதும், "ஆகாசவாணி, வானொலி நிலையம். நேயர்களின் விருப்பம் திரைப்படப் பாடல்கள்" என்று சேனலை ஒப்பன் செய்து அறிவிப்பு செய்தாள். லைவ் சேனலை அணைத்துவிட்டு ரிகார்ட் ஆன் செய்ததுமே மெதுவாக பாட்டு ஒலிக்கத் தொடங்கியது. கொஞ்ச நேரமானதும் வால்யூமைக் குறைத்து விட்டு, லைவ் சேனலை ஆன் பண்ணிவிட்டு, "துணிந்த பின் மனமே துயரம் கொள்ளாதே" என்று பாட்டுத் தொடங்கியதும் ரிகார்ட் லெவலை சரி பார்த்துக் கொண்டு ராதையை நோக்கித் திரும்பி, "ஊம். என்ன விஷயம் சொல்லு" என்றாள்.

அதுவரை அவள் செய்து கொண்டிருந்ததை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ராதை சொன்னாள்.

"இத்தனை நாட்களாக பார்த்து வந்தாலும் இத்தனை எளிதாக நீ மிஷின்களை ஆபரேட் செய்வது எனக்கு பிரமிப்பாகத்தான் இருக்கிறது."

ஜெயா சிரித்தாள். "பழக்கப்பட்டுவிட்டால் உன்னாலும் செய்யமுடியும். நான் வேலைக்கு சேர்ந்த புதிதில் 'ஆகாசவாணி வானொலி நிலையம்' என்பதைகூட எழுதி வைத்துக் கொள்வேன்."

முதல்பாட்டு முடிந்ததும் இரண்டாவது பாட்டு சம்பூர்ண ராமாயணத்திலிருந்து போடப்பட்டது.

ராதை கேட்டாள். "இன்றைக்கு கண்டசாலாவின் பாட்டுக்களையே போட்டுக்கொண்டு இருக்கிறாயே" என்று.

அகில இந்திய வானொலியில் ஒரு சட்டம் இருக்கிறது. ஒரு சினிமாவிலிருந்தோ, ஒரு பாடகருடையதோ ஒரே நாளில் சாதாரணமாக ஒரு தடவைக்கு மேல் போடக்கூடாது. ஆனால் ஒரே பாடகர் கொடிகட்டி ஆண்டு கொண்டிருக்கும் போது அந்த நிபந்தனைகளை பின்பற்றுவது கஷ்டம்.

"இதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா?" என்ற கேள்வியைக் கேட்டு ராதை திடுக்கிட்டு "என்ன?" என்றாள்.

பாட்டைக் கேட்டுக் கொண்டே ஜெயா, "ராஜவீதி வழியாய் வந்து கொண்டிருந்த ராமரை அரண்மனையின் மேல்மாடத்திலிருந்த சிதை முதல் பார்வையிலேயே மோகித்து, வெட்கத்தால் உள்ளே ஓடிவிட்டாளாம். ஒருக்கால் ராவணன் வில்லை வளைத்து அவளைத் திருமணம் செய்து கொண்டிருந்தால் என்னவாகியிருப்பாளோ? மனதளவில் விபச்சாரம் நம்ப காலத்தில் மட்டுமில்லை. அந்தக் காலத்தில்கூட இருந்திருக்கும் போலிருக்கு" என்று சிரித்தாள்.

இப்படிப்பட்ட வாதங்களை கனவிலும் ஊகித்திராத ராதை வாயடைத்துப் போனாள். ஆனால் ஜெயாவின் சுபாவம் தெரிந்திருப்பதால் பேச்சை மாற்ற நினைத்தாள். தலையைத் திருப்பி கண்ணாடி வழியாய் பக்கத்து அறையைப் பார்த்துவிட்டு அங்கே பிரமராம்பாள் இருந்ததை கவனித்து, "என்ன இது? இந்த அம்மாள்



இன்றைக்கு நடிகர்களை ஒருவழியாக ஆக்கி விடுவான் போலிருக்கே?" என்றாள்.

"தான் எதிர்பார்த்தபடி நிகழ்ச்சி அமையும் வரையில் விட மாட்டாள்" என்ற ஜெயா, ராதையை நோக்கித் திரும்பி, "முன்னைவிட நம் நிகழ்ச்சிகளின் தரம் கூடி விட்டது இல்லையா?" என்றாள்.

"அப்படி என்றால்?"

"ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட இப்போதைய நாடகங்களும், மற்ற நிகழ்ச்சிகளும் உயர்தரமாக இருக்கின்றன. யோசித்துப் பாரு. அந்தக் காலத்தில் புரோகிராம் தயாரிப்பவர்கள் எல்லோரும் வயசானவர்கள். அவர்களுக்கு என்று ஒரு சர்கிள் இருந்தது. எழுத்தாளர்கள், நடிகர்கள், நண்பர்கள் எல்லோரும் ஒரே சர்க்கிள்தான். இப்பொழுது அப்படி யில்லை. முக்கியமாக இளைஞர்கள் இந்தத் துறைக்கு வந்த பிறகு நல்ல மாறுதல் வந்து விட்டது."

"அப்படி ஏன் நினைக்கணும்! டி.வி. வந்த பிறகு அதோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டு வானொலி நிலையம் சீரடைந்து விட்டது என்று நினைத்துக் கொள்ளலாம் இல்லையா?"

"தொலைக்காட்சியா! அது இந்த ஜன்மத்தில் சீர்திருத்தும் என்று நான் நினைக்கவில்லை. அங்கே யாருக்குமே அதன்மீது ஆர்வம் கிடையாது. பாதி பேருக்கு வேலையைத் தவிர மற்ற விஷயங்களில்தான் ஆர்வம் அதிகம். மீதி பாதிபேர் வேலை செய்ய நினைத்தாலும் அவர்கள் செய்யவிட மாட்டார்கள். நீ கவனித்தாயோ

இல்லையோ. பெயர் பெற்ற எழுத்தாளர்களின் படைப்புகள் எதுவும் அதில் வராது. காரணம் தெரியுமா? காக்காய் பிடிப்பவர்களுக்குத்தான் அங்கே வாய்ப்பு தரப்படும்."

ராதை ஏதோ சொல்ல வந்த போது மேஜையின் கீழே ஏதோ சின்ன சத்தம் கேட்டது. அவள் குனிந்து பார்த்த போது இரண்டு வயர்கள் சேரும் இடத்தில் சின்ன நெருப்புப்பொறி தென்பட்டது. அவள் விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் வயர்களை பிடித்து இழுத்தாள். அடுத்த நிமிடம் கரெண்ட் ஷாக் அடித்தது. அவள் வீலென்று கத்திக் கொண்டே கீழே சரிந்தாள்.

அவளுக்கு மறுபடியும் நினைவு திரும்பியபோது, ஏறக்குறைய ஸ்டாஃப் அத்தனை பேரும் அங்கே இருந்தார்கள். அவள் கூச்சத்தோடு சட்டென்று எழுந்துகொள்ளப் போனாள்.

"எழுந்திருக்காதே. இப்போது எப்படி இருக்கு." அசிஸ்டெண்ட் டைரக்டர் கேட்டார்.

"ஐ யாம் ஆல் ரைட் சார்."

"இதுவரை எப்போதுமே இப்படி ஷாக் அடித்தது இல்லை." யாரோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"வயர் கனெக்ஷன் லூசாக இருந்திருக்கும்."

அவர்களுக்கு முன்னால் தான் சர்ச்சைக்குரிய அம்சமாக இருக்க விரும்பாமல் அவள் சக்தியைத் திரட்டிக் கொண்டு, "போய் வருகிறேன்" என்று அசிஸ்டெண்ட் டைரக்டரிடம் சொல்லி விட்டு ரிக்ஷாவில் வீட்டுக்கு வந்து விட்டாள்.



அன்று மாலை டி.எஸ். வீட்டிற்கு வந்தபோது இந்த விஷயத்தைச் சொன்னாள் ராதை.

டி.எஸ். சிரித்துவிட்டு, "இருநூற்றி இருபது வோல்டாக இருக்காது. அதைவிட அதிகமாகவே இருந்திருக்கும். வானொலி நிலையத்தில் இருப்பது அவ்வளவு குறைந்த வோல்டேஜாக இருக்காது" என்றான்.

அவள் பதில் பேசவில்லை.

டி.எஸ். தனக்குள் சொல்லிக் கொள்வதுபோல், 'அவ்வளவு பெரிய ஷாக் மட்டும் ஆண் ஒருத்தனுக்கு அடித்ததுன்னு வைத்துக் கொள். என்னவாகும்?" என்றான்.

"என்னவாகும்?" புரியாமல் கேட்டாள் ராதை.

"பெனிஸ்தோ பென்லின்" என்றான். "எங்கேயோ படித்திருக்கிறேன். ஷாக் உடம்பு வழியாக பாய்ந்து தாம்பத்திய வாழ்க்கைக்கு லாயக்கு இல்லாமல் போய் விடுவான். எங்கே படித்தேனோ சரியாக நினைவு இல்லை. வியாதியின் பெயர்கூட சரியாக நினைவு இல்லை. நானே டாக்டர் என்பதால் வியாதியின் பெயரையும் சொல்ல வேண்டியது நான்தானே. நோயாளியின் பெயர் மட்டும் கிருஷ்ணன்."

"என்ன?" புரியாமல் கேட்டாள் ராதை.

"இந்த ஷாக் கிருஷ்ணனுக்கு அடித்ததுன்னு வை. வாழ்க்கை எதற்கும் பயன்படாமல் போய் விடுவான். வாழ்க்கை என்றால் பெண்களோடு சுற்றுவது மட்டுமே இல்லை. இன்னும் நிறைய இருக்குன்னு தெரியும் அப்போது.

பொறுப்பை உணருவான். ஒரு துணை வேண்டும் என்று தோன்றும். தந்தையாக வேண்டும் என்ற தவிப்பு அதிகரிக்கும். இப்போது நாலாவது மாதம் தானே உனக்கு?"

ராதை வீலென்று கத்திவிட்டாள்.

"சும்மா நினைத்துக் கொள். அதனால் ஒன்றும் ஆகிவிடாது. அவன் முன்னால் மசக்கை படுத்துவதுபோல் நடித்தால் போதும். அவன் வேலை செய்கிற இடத்தில் வயர்களை தொங்க விடுவதும், உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லாமல் பார்த்துக் கொள்வதும் என் பொறுப்பு. அதை என்னிடம் விட்டுவிடு. அவன் நினைவு திரும்பும் போது எங்க நர்சிங் ஹோமில் இருப்பான். அ-ஆ-அ-இ. சங்கத்தின் பெண்கள் இருவர் நர்ஸ் வேஷத்தில் இருப்பார்கள். நானோ எப்படியும் டாக்டர்தான். ஏன்? ரிஜிஸ்ட்ரார் ஆஃபீஸையே அவன் உருவாக்கிய போது நம்மால் நர்சிங் ஹோமை உருவாக்க முடியாதா? ஒரு பக்கம் உனக்கு நாலாம் மாதம். இன்னொரு பக்கம் தன்னால் எப்படியும் தந்தையாக முடியாது. இந்த சூழ்நிலையில் உன்னை ஏற்றுக் கொள்வதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. எப்படி இருக்கிறது நம் திட்டம்? நான் சொன்னபடி செய்கிறாயா?"

ராதை தயங்கிக் கொண்டே தலையை அசைத்தாள்.

## 10

மாலை ஆறு மணி ஆயிற்று.

வானொலி நிலையம் ஏறக்குறைய ஆளரவமற்று இருந்தது. ஸ்டுடியோவில் வேலை பார்ப்பவர்கள் மட்டும்



இருந்தார்கள். காவ்ய சாகுந்தலம் ரகளை நடந்த பிறகு கிருஷ்ணன் ரொம்ப கவனமாக வேலை பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனாலும் ஆள் சுரத்தாக இல்லை. அன்றைய டிராமாவுக்கு சம்பந்தப்பட்ட எஃபெக்டுகளை சரிபார்த்துக் கொண்டு மற்ற நிலையங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும். ரிகார்ட் ரூமுக்குள் சென்று கதவை வெறுமே சாத்தி விட்டு ரிகார்டரில் டேப், எஃபெக்ட்ஸ் டேப்பை வைத்தான்.

நாடகத்தை கேட்டுக்கொண்டே நடுவில் வீணையின் எஃபெக்ட் தேவைப்பட்டதால் ரீவைண்ட் சுவிட்சை அழுத்தினான். டேப் பின்னுக்கு சுழலவில்லை. இரண்டு மூன்று முறை பரிசோதித்துப் பார்த்தும் பிரயோஜனம் இருக்கவில்லை. பக்கத்தில் திரும்பிப் பார்த்தான். கண்ணாடித் தடுப்புக்கு அந்தப் பக்கம் ராதை ஏதோ கேட்டுக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததுமே தலையைத் திருப்பிக் கொண்டு வேலையைப் பார்க்கத் தொடங்கினாள்.

அவன் உடலில் ரத்தம் வேகமாக பாயத் தொடங்கியது. யாரும் இல்லாத சமயத்தில் அவள் தனியாக இருக்கிறாள். போய் பேசலாம் என்று நினைத்தான். ஆனால் என்னவென்று பேசுவான்? தலையைச் சிலிர்த்துக் கொண்டு அவன் மறுபடியும் தன் வேலையில் கவனம் செலுத்தினான்.

ரீவைண்ட் பட்டன் ஏன் வேலை செய்யவில்லை என்று வயர்களை பரிசோதித்துப் பார்த்தான். இரண்டு வயர்கள் அறுந்து போயிருந்தன. அவற்றைத் தொடாமல்

நாற்காலியை விட்டு எழுந்து கொண்டான். இன்ஜினியரிடம் சொல்லுவதற்காக கதவின் நாதாங்கி மேல் கையை வைத்தான்.

அப்பொழுதுதான் அடித்தது ஷாக்.

ஒரு வினாடி கண்களை இருட்டிக் கொண்டு வந்தது அவனுக்கு. ஒரு ஆள் அவனைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டதும், கைக் குட்டையை மூக்கிற்கு அருகில் வைத்து அழுத்தியதும் கண்மூடித் திறப்பதற்குள் நடந்து முடிந்து விட்டன. ராதை பக்கத்து அறையிலிருந்து வந்தாள். இருவரும் ஆளுக்கு ஒரு பக்கமாக பிடித்துக் கொண்டு தூக்கத்தில் நடப்பதுபோல் நடந்து கொண்டிருந்த கிருஷ்ணனை பின்பக்கமாக வெளியே அழைத்துப் போனார்கள்.

அப்பொழுது ஏறக்குறைய ஏழுமணி ஆகப் போகிறது.

• • •

“நான் எங்கே இருக்கிறேன்?” கண்களைத் திறந்து கேட்டான் கிருஷ்ணன்.

“அ-ஆ. நர்சிங் ஹோமில்.” வாஷ் பேசினுக்கு அருகில் வேலையை முடித்துக் கொண்டு திரும்பினாள்.

அவன் கழுத்திற்கு அருகில் இரண்டு பட்டன்கள் கழன்றிருந்தன. அவன் அதையே பார்ப்பதை கவனித்து விட்டு அவள் அந்தப் பக்கமாக திரும்பி சரி செய்து கொள்ளாமல் இந்தப் பக்கமாக இருந்தபடியே நிதானமாக பட்டன்களை போட்டுக் கொண்டாள். “கொஞ்சம் நேரம்



படுத்துக் கொள். டாக்டர் வந்து விடுவார். பால் குடிக்கிறாயா?” என்று கேட்டாள்.

இந்த ஒருமை அழைப்பிற்கு வியப்படைந்தான் அவன். தனக்கு என்னவாகி விட்டது. அவனுக்குப் புரியவில்லை. “நான் வீட்டுக்குப் போகிறேன்.” சட்டென்று எழுந்து கொள்ளப் போனான். நர்ஸ் அவன் தலையில் கையை வைத்து, “படுத்துக் கொள் குழந்தாய். நல்ல பையன் இல்லையா” என்றாள்.

கிருஷ்ணனுக்கு தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. நிச்சயமாக ஒன்று இவளுக்கு பைத்தியம் பிடித்திருக்க வேண்டும். அல்லது தனக்காவது மூளை பிசகியிருக்க வேண்டும்.

“எனக்கு என்ன வயசுன்னு நினைக்கிறீங்க?” என்று கேட்டான்.

அவள் இரக்கம் ததும்ப அவனைப் பார்த்துவிட்டு, “வயதில் என்ன இருக்குப்பா? என் கடைசி மகனைப் போன்றவன் நீ. ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டு விடாதே. ஏற்கனவே நரம்புகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன” என்றாள்.

“நரம்புகள் பாதிக்கப்பட்டிருக்கா?” குழப்பத்துடன் கேட்டான்.

“அதனால்தானே இவ்வளவு சுவாதீனமாக பேசகிறேன்” என்றவள் அருகில் வந்து, “பால் கொடுக்கட்டுமா?” என்றாள்.

“உனக்கு— உங்களுக்குக் கல்யாணமாகிவிட்டதா?”

"இல்லையே?" என்றாள்.

பக்கத்து அறையில் டி.எஸ். சிரித்துச் சிரித்து சிவந்து விட்ட முகத்தைச் சாதாரணமாக மாற்றிக் கொள்ள முயன்றபடியே ராதையைப் பார்த்து, "நான் உள்ளே போகிறேன். இப்படியே விட்டால் எங்கள் ரத்தினம் உன் புருஷனை இன்னும் அழ வைத்துவிடுவாள்" என்றான். ராதை தலையை அசைத்தாள்.

"குட் மார்னிங் டாக்டர்" என்றாள் நர்ஸ், உள்ளே வந்து கொண்டிருந்த டாக்டரைப் பார்த்து.

டி.எஸ். தலையை அசைத்துவிட்டு, "ஹௌ ஆர் யு மை பாய்!" என்றான் கிருஷ்ணனிடம்.

"முதலில் இதைச் சொல்லுங்கள். எனக்கு என்னதான் ஆகிவிட்டது?" பொறுமையின்றி கேட்டான்.

"சொல்கிறேன் தம்பி! அவசரப்படாதே."

"எனக்கு உடனே தெரிந்ததாக வேண்டும். சொல்லுங்கள்." அழுத்தமான குரலில் கேட்டான்.

டாக்டர் நர்ஸைப் பார்த்துத் தலையசைத்தார். நர்ஸ் வெளியே போய்விட்டாள்.

"நர்ஸ் இருந்தாலும் பரவாயில்லை என்று வைத்துக் கொள். ஆனால் பெண்களால் ரகசியத்தைக் காப்பாற்ற முடியாது என்பது என் உத்தேசம். இந்த விஷயம் அவளுக்குத் தெரிந்து வெளியே பரவி விட்டதென்றால் நாளைக்கு சமுதாயத்தில் உன் மதிப்பு என்னவாகும்? ஏற்கெனவே அவளுக்கு விஷயம் தெரிந்திருக்குமோ என்பது என் சந்தேகம்."



கிருஷ்ணனின் கைவிரல்கள் தலையணையை அழுத்தமாக பற்றிக் கொண்டன. "என்னதான் ஆகி விட்டது எனக்கு? அதைச் சொல்லப் போறீங்களா இல்லையா?" ஏறக்குறைய கத்தி விட்டான்.

"பெனிஸ்தோ பிளாஸ்டோஸின்" என்றான் நிதானமாக டி.எஸ்.

"அப்படி என்றால்?"

"டாக்டராக இருந்தாலும் இந்த விஷயத்தைச் சொல்லுவதற்கு வாய் வரவில்லை எனக்கு. ஆனால் சொல்லாமல் இருக்க முடியாது. ஹை வோல்டேஜ் மின்சாரம் உடல் உறுப்புகள் வழியாக பாய்ந்ததால் உன் உடலில் சில நரம்புகள் செயலிழந்து விட்டன. இனி மேல் பெண்கள் எல்லோரும் உனக்கு தங்கைகள். வயதில் மூத்தவர்கள் எல்லோரும் உனக்கு தாய்மார்கள்" என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார்.

நர்ஸ் உள்ளே வந்து, "குழந்தாய்! கொஞ்சம் பிரட் சாப்பிடுகிறாயா?" என்று கேட்டாள். கிருஷ்ணன் பதில் சொல்லவில்லை. தலையணையில் முகம் புதைத்துக் கொண்டிருந்தான். யோசித்துக் கொண்டிருந்தானா அல்லது அழுது கொண்டிருந்தானா என்று தெரியவில்லை.

வெளியே ராதை டி.எஸ்ஸிடம் கேட்டாள். "இதனால் என்ன லாபம்? ஓரிரண்டு நாட்களில் உண்மை தெரிந்து போய்விடாதா?"

டி.எஸ். மறுப்பது போல் தலையை அசைத்துக் கொண்டே, "தெரியாது. என் வார்த்தைகள் அவனை

மனதளவில் தற்காலிகமாகவாவது பாதிப்பை ஏற்படுத்தும். அந்த அவகாசம் போதும் நமக்கு, அவனை மாற்றிவிடுவதற்கு."

ராதை கண்வின்ஸ் ஆகாததுபோல் அவனைப் பார்த்தாள்.

"நாடகத்தில் இனி மேடைக்கு வர வேண்டியது நீதான். போ உள்ளே. உன் போர்ஷன் தெரியும் இல்லையா. அவனுக்கு ஷாக் அடித்ததும் மனித நேயத்தோடு நீ அவனை இங்கே அழைத்து வந்தாய். இனி அவன் விஷயத்தை அவனாகவே முடிவு எடுக்க முடியும். அதனால் நீ போய் விடுகிறாய். அதை நீ அவனிடம் சொல்லிக் கொண்டு இருக்கும்போது வயிற்றைக் குமட்டுகிறது. மகச்சை! ஆனாலும் உன்னிடம் மாறுதல் இல்லை. 'போய் வருகிறேன் மிஸ்டர் கிருஷ்ணன்! உங்கள் உடம்பு சீக்கிரமாக குணமடைய வேண்டும் என்று விரும்புகிறேன்' என்று சொல்கிறாய். உன் முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லை. ஆனால் கண்களில் துளிர்ந்த கண்ணீரை அவன் கண்ணில் படுவதுபோல் மறைத்துக் கொள்கிறாய். முகத்தைத் திருப்பிக் கொண்டு எழுந்து வாசலைத் தாண்டப் போகும்போது பின்னாலிருந்து, 'ராதை! என்னை மன்னித்து விடு' என்று சொல்லுவான் கிருஷ்ணன். சொல்லித்தான் ஆகணும். அத்துடன் உன் கதை சுபமாக முடிந்து விடும். போம்மா போ! உன் போர்ஷனை ஜாக்கிரதையாக பண்ணு."

ராதை தலை அசைத்த அதே சமயத்தில் கிருஷ்ணன் ஆஸ்பத்திரி கட்டிலில் படுத்திருந்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தான் இனி எதற்குமே பயன்



படமாட்டானா? அந்த யோசனையே ரொம்ப பயங்கரமாக இருந்தது அவனுக்கு.

இப்போது என்னவாகும்? தன் பழைய நண்பர்கள் எல்லோரும் முன் போல் பழகுவார்களா? அந்த துடிப்பும், அந்த வாழ்க்கையும் இனி இருக்காதா?

திடீரென்று ஏமாற்றம் வந்து அவனைச் சூழ்ந்து கொண்டது. அவனுக்கு சொந்தம் என் சொல்லிக் கொள்ள யாருமே இல்லை. ஆனால் பணமும், வயதும் அந்தக் குறையை மூடி மறைத்து விட்டன. இப்பொழுது இந்த விஷயம் வெளியே தெரிந்து விட்டால்?

நட்பின் மதிப்பு அப்பொழுதுதான் புரிந்தது அவனுக்கு. ஆனால் இது ஆணுக்கும் ஆணுக்குமிடையே உள்ள நட்பு அல்ல. ஆணுக்குப் பெண்ணிடமிருந்து கிடைக்கும் அன்பும், அரவணைப்புடன் கூடிய நட்பு.

அதுதான் காதல்.

நட்பையும் விட உயர்ந்தது.

செக்ஸையும் விட உறுதியானது.

அதுதான் வேண்டும் அவனுக்கு. தன்னுடைய குறைகளை எல்லாம் சகித்துக் கொண்டு, பொறுமையாக தாங்கிக் கொண்டு, தன்னைத் தானாகவே ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு பெண்.

அவனுக்கு ராதை எழுதிய கவிதை நினைவிற்கு வந்தது.

திருமணமாய் அவன் மதித்த கவிதை.

எவ்வளவு அழகாய் சின்னச் சின்ன வார்த்தைகள் மூலமாக எத்தனை பெரிய விஷயத்தை கோடிட்டுச் சொல்லிவிட்டாள்! அவன் சட்டென்று கன்னத்தைத் தடவிக் கொண்டான். கண்ணீர்த் துளி ஒன்று கண்ணி லிருந்து உருண்டு கீழே வழிந்தது.

அதற்குள் கதவிற்கருகில் சந்தடி கேட்டது. திரும்பிப் பார்த்தவன் சிலையாகி விட்டான்.

ராதை!

அவன் முழங்கையை ஊன்றிக் கொண்டு எழுந்து கொள்ளப் போனவன் சோர்ந்து போய் அப்படியே சாய்ந்துகொண்டு அவளையே பார்த்தான். அவளும் ஒரு வினாடி அங்கிருந்து நகரவில்லை. இருவரின் பார்வையும் வினாடி நேரம் சந்தித்துக் கொண்டன. அவ்வறையில் ஆழ்ந்த நிசப்தம் சூழ்ந்து கொண்டிருந்தது.

அவள் மெதுவாக வாயைத் திறந்து ஏதோ சொல்லப் போனாள். திடீரென்று அவளுக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது.

* * *

"என்னம்மா? உள்ளே என்ன நடந்தது?" வெளியே வந்த ராதையைப் பார்த்து பரபரப்புடன கேட்டான் டி.எஸ்.

ராதை பதில் சொல்லவில்லை.

"மன்னித்துக் கொள் என்று வேண்டிக் கொண் டானா? உன்னை ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னானா?"



ராதை அதற்கும் பதில் சொல்லவில்லை.

அதற்குள் உள்ளேயிருந்து நர்ஸ் ஓட்டமாக ஓடி ந்தாள்.

"என்ன நடந்தது?" கேட்டான்.

"கிருஷ்ணன் போய்விட்டான்" என்றாள் மூச்சிரைக்க.

"போய் விட்டானா?"

"அவ்வளவு சக்தி எப்படித்தான் வந்ததோ தெரியாது. டாரென்று கட்டிலை விட்டு எழுந்து கொண்டான். ளம்பிப் போய்விட்டான். என்ன சொன்னாலும் காதில் ாங்கிக் கொள்ளவில்லை."

டி.எஸ். குழப்பத்துடன் ராதையைப் பார்த்தான்.

ராதை மெதுவாகச் சொன்னாள். "நான் எல்லா ற்றையும் சொல்லிவிட்டேன். இந்த நாடகம், அவனுக்கு பொய்யாக ஷாக் அடித்தது எல்லாவற்றையும் சொல்லி ிட்டேன். என்னால் இந்த நாடகம் ஆட முடியாது. ன்னை மன்னித்துக் கொள்ளுங்கள்."

டி.எஸ்.ஸும், நர்ஸும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

தோற்றுவிட்டாற்போல் தலையை அசைத்து, "சர்வ ாசனம் ஆக்கி விட்டாயேம்மா திட்டத்தை" என்றான் டி.எஸ்.

* * *

"உண்மையிலேயே நீ ஒரு முட்டாள். இடியட்! னக்கு மூளையே இல்லை" என்றாள் ஜெயா.

ராதை பதில் பேசவில்லை.

"அவர் அவ்வளவு கஷ்டப்பட்டு கிருஷ்ணனை வலையில் சிக்க வைத்தால் கடைசியில் நீ போய் எல்லாம் நாடகம்தான் என்று சொல்வாயா?"

அதற்கும் ராதை பதில் பேசவில்லை.

ஜெயாவே மேலும் சொன்னாள். "அந்த டி.எஸ். நல்லவராக இருந்ததால் போச்சு. அவர் பட்ட கஷ்டத்தை எல்லாம் விழலுக்கிரைத்த நீராக்கி விட்டதற்கு வேறொருத்தராக இருந்தால் நன்றாக திட்டித் தீர்த்திருப்பார்கள்."

"எனக்கு ஏனோ அப்படி நாடகமாட பிடிக்காமல் போய் விட்டது ஜெயா. அப்படி நாடகமாடி அவனை சம்மதிக்க வைத்து என்ன சுகப்பட்டு விடமுடியும். கொஞ்ச நாள் கழித்து அவனுக்கு உண்மை தெரிந்துவிடும். அப்பொழுது எங்கள் குடித்தனத்தில் சந்தோஷமும், நிம்மதியும் இருக்கும் என்கிறாயா? அதற்குள் எங்கள் திருமணம் நடந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்து போயிருக்கும். அதனால் விட்டுவிட்டுப் போய்விட முடியாது என்று வைத்துக் கொள். டி.எஸ். சொன்னது கூட அதுதான். ஆனால் அவன் மனைவியாக சமுதாயத்தில் இடம் பிடித்துக் கொள்வதல்ல எனக்கு வேண்டியது. எனக்கும் சுய அபிமானம் இருக்கிறது. மனப்பூர்வமாக அவன் என்னை விரும்புவதுதான் எனக்கு வேண்டும். அதுதானே தவிர அவனை இக்கட்டில் ஆழ்த்திவிட்டு அந்தச் சங்கடத்தில் அவனைச் சம்திக்க வைப்பது என் நோக்கமில்லை. அதனால்தான் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். வெளிப்படையான என் குணத்தை





புரிந்து கொள்ளாமல் அவன் போய்விட்டான். போகட்டும் விடு."

ரொம்ப நேரம் ஆழ்ந்த நிசப்தம் அவ்விருவருக்குமிடையே நாட்டியமாடிக் கொண்டிருந்தது.

அந்த இறுக்கத்திலிருந்து வெளியேறுவதற்காக ராதை கேட்டாள். "என் விஷயம் இருக்கட்டும். உன் விஷயம் என்ன ஆச்சு? பார்த்தசாரதி அவ்வளவு தூரம் கேட்டுக் கொண்டு இருக்கும்போது நீ எதற்காக மீன மேஷம் பார்த்துக் கொண்டு இருக்கிறாய்?"

ஜெயா பதில் சொல்லவில்லை. ஒருமுறை நிமிர்ந்து பார்த்து விட்டு ஏதோ சொல்ல வந்தவள் சொல்லாமல் மௌனமாகி விட்டாள்.

"சொல்லு." இரட்டிப்பது போல் கேட்டாள் ராதை.

"இனி மீன மேஷம் என்ற பேச்சுக்கே இடமில்லை ராதை. எல்லாவற்றையும் ஃபைனலாக செட்டில் செய்து விட்டேன்."

"என்ன? கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களா?"

"இல்லை."

ராதை வியப்புடன் "ஏன்?" என்றாள்.

ஜெயா மௌனம் வகித்தாள்.

ராதைக்கு ஆவேசம் பொங்கிக் கொண்டு வந்தது. "உன் விஷயம் முழுவதும் தெரிந்த பிறகும் அவர் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனாலும் நீ எதற்காக மாட்டேங்கிறாய் என்றுதான் புரியவில்லை எனக்கு. அர்த்தமில்லாத

செண்டிமெண்டுகளுக்காக வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளாதே ஜெயா! கல்யாணம் என்பது ஒரு வரம். அதுவாக காலடியில் வந்து விழும்போது மறுப்பது விவேகமல்ல."

"இதில் செண்டிமெண்ட் என்ற பேச்சுக்கே இடமில்லை ராதை. அர்த்தம் செய்து கொள்ள முயன்றால் அர்த்தம் ஆகாதுன்னும் எதுவும் இல்லை. அவரை நான் எப்படி கல்யாணம் செய்து கொள்வேன்? இவ்வளவு அனுபவங்களை பெற்றிருக்கும் நான் புது மணப் பெண்ணைப் போல் அவர் வாழ்க்கையில் எப்படி நுழைவேன்? என்னைப் புரிந்துகொள்ள முயற்சி செய் ராதை. எல்லாம் தெரிந்த நான் எதுவும் தெரியாத அவருக்கு எல்லாவற்றையும் கற்றுத் தருவேனா? இதழோடு இதழ் சேர்த்து மென்மையாய் முத்தமிடக் கூடிய இளைஞனை எனக்குத் தெரியும். அணைத்த அடுத்த நிமிடமே சுவர்க்கத்தின் விளிம்பிற்கு அழைத்துப் போகும் ஆணோடும் எனக்கு அறிமுகம் உண்டு. இதையெல்லாம் ஒரே ஆணிடம் காணமுடியும் என்கிறாயா? காதல் என்ற பெயரில் புனிதத்தை போற்ற வேண்டிய காரணத்தால் கணவனையே சகலமுமாய் நினைக்க என்னால் சாத்தியப்படுமா? புத்தகங்களில் படிப்பதற்கும், மற்றவர்களோடு வாதாடுவதற்கும் இந்தக் காதலும், புனிதமும் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழத் தொடங்கினால் இன்னும் எத்தனையோ விஷயங்கள் தேவைப்படும். காதலும், நட்பும் பரஸ்பரம் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டுமானால் செக்ஸ்தான் முக்கியம் என்று நான் ஒரு புது தியரியைத் தொடங்கினால் எல்லோரும் என்னைக் காரித் துப்புவார்கள்.



ஆனால் என் விஷயத்தில் இது நிஜம். எத்தனையோ குடும்பங்கள் சாரமில்லாமல் தொடர்ந்து கொண்டிருப்பதற்கும், எத்தனையோ பேர் மானசீக விபச்சாரம் செய்வதற்கும் காரணம் வீட்டில் அவர்களுடைய வாழ்க்கைத் துணை கைகொடுக்காமல் போவதுதான். ஆனால் உலகத்தில் எத்தனையோ பேர் தங்களுடைய குடித்தனத்தை சந்தோஷமாக, புனிதமாக கழித்துக் கொண்டு இருக்கிறார்களே? அது எப்படி என்று நீ கேட்கலாம். ஏ.சி. ரூம் எப்படி இருக்கும் என்று தெரியாதவனுக்கு வெறும் தட்டி வேரே சுகமாக இருக்கும். எல்லாம் தெரிந்தவனுக்கு எதுவுமே சுகம் தராது. இப்போ என் நிலைமையும் அதுதான். என்ன செய்வேன்? அவரைக் கல்யாணம் செய்து கொள்வதா? மனப்பூர்வமாக அவர் என்னைக் காதலிக்கத் தொடங்கிவிட்டால், அருகில் வந்து பிரியத்துடன் என் மேல் கையை வைத்தால், அந்தத் தொடுகை எத்தனையோ பழைய நண்பர்களின் கைகளை நினைவுப் படுத்தினால், ஒரு மனைவியாய், ஒரு இல்லத்தரசியாய் அது அவருக்கு துரோகம் செய்வது போல் ஆகாதா? அதைவிட ஹீனமான காரியம் வேறு இருக்க முடியுமா? யோசித்துப் பார்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

ராதை அப்படியே நின்றுவிட்டாள். "எவ்வளவு அலட்சியமாக பேசுகிறாள்?" என்று நினைத்துக் கொண்டாள்.

அவளுக்குத் தெரியாது. இந்த முடிவை எடுத்துக் கொள்வதற்கு முன்னால் ஜெயா எத்தனை தூக்கமில்லாத இரவுகளைக் கழித்தாள் என்று.

## 11

மாடிஸம் சங்கத்தின் காரியாலயத்தில் அன்றைக்கு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. பரசுராமன் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தான்.

"காம்ரேட்ஸ்! மக்களுக்கிடையே நம் கொள்கையின் பால் எவ்வளவு பற்று பெருகிக் கொண்டிருக்கிறதென்று சமீபத்தில் நம் அங்கத்தினராக சேருவதற்காக வரும் விண்ணப்பங்களே சொல்கின்றன. போன வருடம் கரும்பின் விலை சரியாக கிடைக்காமல் நம் உழவர்கள் பயிர்களை எரித்துவிட்ட விஷயம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால் சர்க்கரையின் விலை அதிகரித்தது. இந்த வருஷம் மறுபடியும் கரும்பு நன்றாக விளைந்திருக்கிறது. அதனால் உழவர்கள் சர்க்கரையின் விலை இறங்கி விடுமோ என்று பயப்படுகிறார்கள். அப்படி இறங்காமல் இருப்பதற்காகவும், அடுத்த வருஷம் விலை அதிகமாவதற்காகவும் அரசாங்கம் இந்தக் கோடையில் கரும்புச் சாறு கடைகளை நிறுவப்போகிறது. இதற்கு எதிராக மாடிசம் சங்கத்து அங்கத்தினர்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

சில மாதங்களுக்கு முன்னால் பிரதமர் வந்தபோது பீரங்கி மூலம் பூமாரி பொழியச் செய்தது மாடிசம் சங்கத்தினர்தான் என்று தெரிந்து நிறைய பேர் பாராட்டினார்கள். இவ்வளவு புத்தி சாதுரியம் கொண்டவர்கள் நம் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டு, அடுத்த வருஷம் நாம் தேர்தல் களத்தில் நின்றால் ஓட்டுப் போடுவோம் என்று சிலர் என்னிடம் மறைமுகமாக தெரிவித்தார்கள். இனி விஷயத்திற்கு வருகிறேன்." சிரித்தான் பரசுராமன். உண்மையில் அன்றைக்கு என்ன நடந்தது என்று அவன் ஒருத்தனுக்குத் தான் தெரியும்.

அவன் மேலும் தொடர்ந்தான். "நம் மாடிஸம் சங்கத்தைப் பற்றி கொஞ்சம் விளம்பரம் செய்யணும் என்பது என் உத்தேசம். நம் லட்சியங்கள் என்னவென்று உங்களுக்குத் தெரியும். நம்முடைய குரு துக்ளக். அவர் நடந்த வழியில் நம்நாடு நடந்தால் இதைவிட நன்றாக இருந்திருக்கும் என்பது என் எண்ணம். 'பைத்தியக்கார ஜனங்களே! உங்கள் சார்பில் பைத்தியங்கள் நாங்கள் நிற்கிறோம்' என்று சொன்னால், சாதியின் பெயரைச் சொன்னதுமே எப்படி மயங்கிப் போய் ஓட்டுப் போடுவாங்களோ அதே போல் நமக்கும் போடுவார்கள். அடுத்து வரப்போகும் தேர்தலுக்காக பிரசாரத்தை நாம் இப்போதிலிருந்தே தொடங்கணும். இதன் திறப்பு விழா புதுவிதமாக நிகழணும்.

'பைத்தியங்கள் எல்லோரும் சேர்ந்திருக்கும் நிறுவனம் மாடிஸம்! உங்கள் ஓட்டு எங்களுக்கே' என்ற முழக்கத்துடன் நம் பிரச்சாரம் தொடங்கும். நம் சங்கம் அதிகாரத்திற்கு வந்தால் நாம் செய்யப் போகும் சீர்திருத்தங்களைப் பற்றியும் நாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லணும். ஆனால் பிரச்சார சாதனங்களை பயன்படுத்திக் கொள்வதற்கு நம்மிடம் பணம் இல்லை. இலவசமாகத்தான் செய்யணும் எதைச் செய்தாலும். எல்லாவற்றையும் விட நல்ல பிரச்சார சாதனம் எது?"

"சினிமா ஸ்லைட்ஸ்" என்றார்கள் யாரோ.

"இல்லை."

"ஆல் இண்டியா ரேடியோ."

"கரெக்ட். ரேடியோ! ரேடியோவையே நம் பிரச்சார சாதனமாக ஃப்ரீயாக பயன்படுத்திக் கொள்வோம்."

அந்த ஹாலில் ஊசி விழுந்தாலும் கேட்கும்படியான நிசப்தம் சூழ்ந்து கொண்டது. முதலில் சுதாரித்துக் கொண்ட ஒரு இளைஞன் எழுந்து நின்று, "உங்களுக்கு ஏதாவது பைத்தியம் பிடித்திருக்கிறதா? பைத்தியங்களின் சங்கத்தைப் பற்றி ரேடியோவில் விளம்பரப்படுத்துவதாவது?" என்றான்.

வேறொருத்தன், "ரேடியோ ஒன்றும் நம் பாட்டனுடைய மைக் இல்லை வாய்க்கு வந்தபடி பேசுவதற்கு" என்றான். எல்லோரும் சிரித்தார்கள். பரசுராமனும் சிரித்துவிட்டுச் சொன்னான்.

"நான் என் மோட்டார் சைக்கிளில் வானொலி நிலையத்திற்குப் போய் வாகனத்தை ஸ்டாண்டில் வைத்து விட்டு மிடுக்காக உள்ளே போய் ரிகார்டிங் ரூமுக்குள் நுழைந்து லைன் ஆன் பண்ணிவிட்டு, 'ஆகாசவாணி வானொலி நிலையம். நேயர்களே! நான் மாடிஸம் சங்கத்துத் தலைவன் பரசுராமன் பேசுகிறேன்' என்று சொன்னேன்னு வைத்துக் கொள்ளுங்கள். லட்சக்கணக்கான நேயர்களுக்கு அது போய்ச் சேராமல் யாரால் தடுத்து விட முடியும்? எல்லா ரேடியோக்களிலும் அது கேட்கும் இல்லையா?"



மறுபடியும் நிசப்தம். எல்லோரும் யோசனையில் ஆழ்ந்தார்கள். கொஞ்சம் நேரம் கழித்து ஒருத்தன் எழுந்து கொண்டான்.

"அப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது உங்களைப் பிடித்து விடுவார்கள். அப்புறம் ஜெயிலில் போட்டு விடுவார்கள். மிஞ்சிப் போனால் ஓரிரண்டு வார்த்தைகளை பேசிவிட முடியும் அவ்வளவுதான்."

பரசுராமன் சிரித்துவிட்டு, "குறைந்த பட்சம் அந்த அளவுக்காவது பிராட்காஸ்ட் செய்ய முடியும் என்று நம்புகிறீங்க இல்லையா? இனி மற்ற விஷயங்களைப்பற்றி யோசிப்போம்" என்று கையில் இருந்த ப்ளூ ப்ரிண்டைப் பிரித்தான். பிறகு விவரிக்கத் தொடங்கினான்.

"இது வானொலி நிலையத்தின் வரைபடம். இது உள்ளே போகும் வழி. இங்கே எப்போதும் மூன்று செண்ட்ரிகள் இருப்பார்கள். சாதாரணமாக இவர்கள் யாரையும் தடுத்து நிறுத்தி விடமாட்டார்கள். கேட்டைத் தாண்டி உள்ளே போனால் வலது பக்கம் ட்யூட்டி ஆபீசர் ரூம். அதைத் தாண்டினால் காரிடார். இரண்டு பக்கமும் ரிகார்டிங் ரூம்கள். நமக்குத் தேவையானது அவ்வளவு தான்.

"ஜூலை ஆறாம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியை வானொலியில் ஒலிபரப்பு வார்கள். யாராவது ஒரு நடிகன் தனக்குப் பிடித்தமான பாட்டுக்களை ஒரு மணி நேரம் போடச் செய்வான். இந்த நடிகன் மீது மக்கள் பைத்தியமாக இருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியைப் பற்றி அதற்குள் வானொலியில்

விளம்பரம் செய்யத் தொடங்கி விட்டார்கள். தமிழ் நாட்டில் அந்த ஒரு மணி நேரமும் அத்தனை ரேடியோக் களும் ஆன் பண்ணியே இருக்கும். நாம் நம் பிரசாரத் திற்காக அந்த ஒரு மணி நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறோம்.

"வானொலி நிலையம் அதிகாலை நாலரை மணிக்கு இன்ஜினியர்களின் வருகையுடன் விழித்துக் கொண்டு விடும். சுமார் இருபது பேர் வந்து வேலையைத் தொடங்கு வார்கள். முதலில் கடியாரங்கள் அத்தனையும் ஒரே நேரத்தைக் காட்டுகின்றனவா என்று செக் செய்வார்கள். பிறகு ஊருக்கு வெளியே இருக்கும் ரிசிவிங் சென்டர், ஷார்ட்வேவ், மீடியம் வேவ் இவைகள் பரிசோதிக்கப் படும். இரண்டு ட்யூட்டி ஆபீசர்கள் வேலைக்கு வருவார் கள். தினமும் ஐந்தரை மணிக்கு அசிஸ்டென்ட் ஸ்டேஷன் டைரக்டர் தன் வீட்டிலிருந்து போன் செய்து எல்லாம் சரிவரத் தொடங்குகின்றனவா? ட்யூட்டி ஆபீசர்கள் வந்தார் களா என்று தெரிந்துகொள்வார். அப்படி வராவிட்டால் உடனே டைரக்டரே போய் நிகழ்ச்சியைத் தொடங்கிய சம்பவங்களும் இல்லாமல் போகவில்லை.

"ஸ்டுடியோ கண்ட்ரோல் ரூம் உண்மையில் ஒரு சிலந்தி வலையைப் போல் இருக்கும். விதவிதமான நிகழ்ச்சிகளும், மைக்ரோபோன்களும் இங்கே கண்ட்ரோல் செய்யப்படும். இங்கிருந்துதான் டெலிபோன் லைன்கள் மூலமாக எத்தனையோ மைல்கள் தூரத்தில் உள்ள ட்ரான்ஸ்மிட்டருக்கு பட்டுவாடா செய்யப்படும். கண்ட் ரோல் ரூம் இன்ஜினியர் தினந்தோறும் அஷ்டாவ தானம் செய்து கொண்டிருப்பார். ஒரு சின்ன சுவிட்சைத் தவறிப்



போய் அழுத்தினாலும், திருப்பிவிட்டாலும், ஒரு டேப் தாமதமாகத் தொடங்கினாலும் குழப்பம் ஏற்பட்டு விடும்.

அந்த நடிகன் பத்து நிமிஷம் பேசுவான். பத்து அல்லது பன்னிரெண்டு பாடல்களை ஒலிபரப்புவார்கள். ஏழு நிமிஷம் விளம்பரங்களுக்கு. மொத்தம் ஐம்பத்தேழு நிமிடங்கள். முதலில் நடிகனின் பேச்சு ரிகார்ட் செய்யப் படும். நடுவில் விளம்பரம் போடப்படும். 'நான் என் பதினாறாவது வயதில் திரையுலகத்திற்கு வந்தேன். என் நாற்பது வருட நடிப்பு வாழ்க்கையில் எத்தனையோ மேடு பள்ளங்களை அனுபவித்திருக்கிறேன். இப்பொழுது என் முதல் படத்தில் டி.எம்.சௌந்தரராஜன் பாடிய பாட்டை போடுகிறேன். டிங் டாங். உங்கள் பயிர்களுக்கு க்ரோ மோர் உரத்தையே பயன்படுத்துங்கள்.'

இப்படித் தொடர்ந்து கொண்டிருக்கும். அந்த புரோகிராமுக்குப் பதிலாக நாம் மாற்றப் போகிற டேப்பில் இவ்வாறு இருக்கும்.

'மனிதர்களை ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும் அதிகாரிகளுக்கிடையே நாளுக்கு நாள் சுய நலம் பெருகிக் கொண்டே போகிறது. இதை முழுவதுமாக போக்க வேண்டும் என்றால் அடுத்த தேர்தலில் நீங்கள் மாடிஸத் திற்கே ஓட்டுப் போடுங்கள். உங்களை ஆளுகின்ற அதிகாரி களை விட பைத்தியங்களைத் தேர்ந்தெடுப்பதே மேல். டிங் டாங். உங்கள் ஓட்டை மாடிஸம் சின்னத் திற்கே போடுங் கள்.'

இவ்வாறு தொடரும். இந்த ஒரு மணி நேர நிகழ்ச்சி யில் நம் கொள்கைகளையும், நாம் எவ்வளவு புத்திசாலி கள் என்பதையும் சொல்லுவோம்.

"இந்த ஒரு மணி நேரமும் வானொலியில் வேலை செய்கிறவர்கள் சும்மா இருப்பார்களா? நடுவில் ஆஃப் செய்து விட மாட்டார்களா?" என்று கேட்டான் ஒரு இளைஞன்.

"அதைத்தான் சொல்லப் போகிறேன்" என்றான் பரசுராமன். "ரேடியோவில் வருகிற ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கேட்பதற்கு ட்யூட்டி ஆபீசர்கள் இருவர் இருப்பார்கள். இவர்களில் நிறைய பேருக்கு தமிழ் சரியாகத் தெரியாது. ஆனாலும் அந்த விஷயம் நம்மை அவ்வளவாக பாதிக்காது. ரேடியோவில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சியை இன்னொரு இடத்திலிருந்தும் ஆஃப் செய்யலாம். அதை ட்ரான்ஸ்மிட்டர் டவர் என்பார்கள். ஊருக்குத் தொலைவில் இருக்கும். நாம் கவனமாக இருக்க வேண்டியது இங்கேதான்."

"முதலில் ரேடியோ ஸ்டேஷனைப் பற்றிச் சொல்லுங்கள். அங்கே நிறைய பேர் இருப்பார்கள் இல்லையா? அவர்களின் கண்களிலிருந்து எப்படி தப்புவது?"

"நிறைய பேர் இருக்க மாட்டார்கள். இரவு எட்டு மணிக்கு சில பேர்தான் இருப்பார்கள்."

"ஆனாலும் ஒரு மணி நேரம் புரோகிராமை ஒலி பரப்புவது என்றால்? அது சாத்தியப்படுகிற காரியம் தானா? ட்யூட்டி ஆபீசர்கள் சும்மா இருப்பார்களா? கூர்க்காக்கள் கைகளை கட்டிக்கொண்டு உட்கார்ந் திருப்பார்களா?"

"ட்யூட்டி ஆபீசர்கள் கேட்கிற ரேடியோவின் ஸ்பீக்கர் சுவற்றில் தொங்கிக் கொண்டிருக்கும். வானொலி



இன்ஜினியரின் வேடத்தில் நம்ப இன்ஜினியர் இளைஞன் அனில் போவான். அன்று மாலை நாலு மணிக்கு ஸ்பீக்கர் கள் அத்தனையும் இணைத்து டேப் ரிகார்டருடன் கனெக்ஷன் தருவான். அந்த டேப்ரிகார்டர் எட்டு மணிக்கு தானாகவே இயங்கும்படி செய்வது பெரிய கஷ்டம் ஒன்றும் இல்லை. என்னப்பா? கஷ்டமான காரியமா?"

"இல்லை" என்றான் அனில்குமார் என்ற இன்ஜினியர்.

"அதனால் வானொலி நிலையத்தில் இருப்பவர்களுக்கு வழக்கமான புரோகிராம் நடந்து கொண்டிருப்பது போல் அவங்கவங்க ஸ்பீக்கர்களிலிருந்து கேட்கும். டிராஸ்மிட்டர் டவருக்கு அருகில் நம் ஆட்கள் இரண்டு பேர் அங்கே இருக்கும் இன்ஜினியர்களை சிநேகமாக கண்ட்ரோல் செய்வார்கள்" என்றான். 'சிநேகம்' என்ற வார்த்தையை அழுத்தி உச்சரித்தபடி.

ஒரு இளைஞன் எழுந்திருந்து, "எல்லாவற்றையும் விட கஷ்டமான காரியம் இன்னொன்று இருக்கிறது" என்றான்.

"என்ன?"

"டேப்புக்களை மாற்றுவது நம்ப டேப் அந்த ஸ்தானத் திற்குப் போகணும். யாருக்கும் சந்தேகம் வராதபடி ஒலிபரப்பாகும் வரையில் எப்படி ஜாக்கிரதைகளை மேற்கொள்ளணும் என்பதைப் பற்றி மட்டுமே யோசித் தோம். டியூட்டி ஆபீசர்களின் பர்சனல் போன் வயர் களைக் கத்தரித்துவிட்டு ஜனங்கள் யாரும் போன் செய்ய முடியாதபடி ஜாக்கிரதைகளை மேற்கொள்ள முடியும். ஆனால் டேப்புக்களை மாற்றுவது எப்படி?"

"அந்த விஷயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். நமக்குத் தெரிந்தவன் ஒருத்தன் வானொலி நிலையத்தில் இருக்கிறான். சொன்னதைச் செய்வான்."

"யார்?"

"கிருஷ்ணன். தாண்டவ கிருஷ்ணன்."

* * *

"இம்பாசிபிள்! செத்தாலும் செய்ய முடியாது. என்னால்" என்றான் கிருஷ்ணன். "இது சாத்தியமாகிற காரியம்தானா முதலில். யாருக்காவது தெரிந்து போய் விட்டால் நான் கம்பி எண்ண வேண்டியிருக்கும்."

"ஏன் சாத்தியம் இல்லை? கொஞ்சம் புத்திசாதுர்யத் தோடு நடந்து கொண்டால் சாத்தியமாகாதது என்று எதுவும் இல்லை. யாருக்காவது தெரிந்துவிடும் என்கிறாயா? எப்படி தெரியும்? தெரிய வாய்ப்பே இல்லை. எல்லாம் உன் கையில்தான் இருக்கிறது."

"சாரி. என்னால் செய்ய முடியாது. நினைத்துப் பார்க்கும் போதே என் உடம்பு நடுங்குகிறது பயத்தால்."

"ரிஜிஸ்ட்ரார் ஆபீசுன்னு பெயிண்ட் அடித்து கல்யாணம் செய்து கொண்ட போது நடுங்கவில்லையா இந்த உடம்பு?" கேட்டான் பரசுராமன்.

கிருஷ்ணன் வெளிறிப் போன முகத்துடன், "என்ன பயமுறுத்துகிறீர்களா?" என்று கேட்டான்.

"இல்லை. எச்சரிக்கிறேன். அன்றைக்கு நீங்கள் மாலை மாற்றிக் கொண்ட போது எடுத்தது போட்டோ இன்னும்



என்னிடம்தான் இருக்கு. அது போதும், உங்களுக்கு கல்யாணம் ஆனதை ருசு பண்ணுவதற்கு. சொல்லு, டேப்பை மாற்றுகிறாயா?"

கிருஷ்ணன் தடுமாறிக்கொண்டே, "மாற்றுகிறேன்" என்றான்.

"குட் ஒரு உலக வரலாற்றிலேயே இதுவரையிலும் நிகழாத ஒரு அபூர்வச் சம்பவத்தை மாடிஸம் சங்கம் நடத்தப் போகிறது. அன்று இரவு எட்டு மணிக்கு ரேடியோவைக் கேட்கிறவர்களுக்கு பைத்தியமே பிடித்துவிடும். குழந்தைகள் மாடிஸம் எடுத்து வீசும் ஜோக்குகளை கேட்டுச் சிரித்து மகிழ்ந்து கூத்தாடுவார்கள். இது ரேடியோ தானா என்று பெண்கள் ஆச்சரியப் படுவார்கள். ஆண்கள் சானல்களை மாற்றிக்கொண்டே செக் செய்யத் தொடங்கு வார்கள். எல்லாமே குழப்பம். பரசுராமனின் புத்தி சாதுரியத்திற்கு மற்றொரு எடுத்துக்காட்டு. ஜுலை ஆறாம் தேதி- ஞாயிற்றுக்கிழமை- இரவு எட்டு மணிக்கு."

* * *

டேப்புக்களை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான் கிருஷ்ணன். ஞாயிற்றுக் கிழமை நிகழ்ச்சிகளை ராதை ஏற்று நடத்த வேண்டும். அப்படி என்றால் கடைசி நிமிடத்தில்அந்த டேப்பை அந்த இடத்தில் வைக்க வேண்டும்.

எல்லாம் கடைசி நிமிஷத்தில் முடிக்க வேண்டும், ராதைக்குக் கொஞ்சமும் சந்தேகம் வராதபடி.

# 12

ஜூலை ஆறாம் தேதி ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணன் டென்ஷனால் நடுங்கிக் கொண்டிருந்தான். மாடிஸம் இன்ஜினியர்கள் இரண்டு இரண்டு பேராய் ஆறு பேர் உள்ளே வந்தார்கள். அவர்கள் எவ்வளவு இயல்பாக நடந்து கொண்டார்கள் என்றால், வானொலி நிலையத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறவர்கள்கூட அவர்கள் நிலையத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்று நம்பி விட்டார்கள். அவர்களும் தங்களுடைய வேலையை நிசப்தமாக செய்துகொண்டு இருந்தார்கள். இண்டர்னல் ஸ்பீக்கருக்கும் ரேடியோக்களுக்கும் டேப் கனெக்ஷன் கொடுக்கப் பட்டது. நிலையத்தின் கேட் அருகில் இருந்த செண்ட்ரிகளுக்கு உள்ளே நடந்து கொண்டிருப்பது எதுவும் தெரியாது.

கிருஷ்ணன் கையிலிருந்த டேப்பைப் பார்த்தான். அப்படியே திரைப்பட ஹீரோவின் குரலைப் போலவே இருந்தது, பரசுராமனின் குரல். நடுநடுவில் ஆணும் பெண்ணும் சேர்ந்து பாடிய விளம்பரப் பாடல் சினிமா பாட்டு மெட்டில், "ஊழலும் துவேஷமும் நிறைந்த துறை தான் இந்த அரசியல்" என்று.

யாராவது சொன்னால் தவிர தமிழ் தெரியாத டிரான்ஸ்மிஷன் டவருக்கு அருகில் இருக்கும் இன்ஜினியருக்குப் புரியாது. சொல்ல வேண்டும் என்றால் அவ்வளவு தூரம் போக வேண்டும். சாதாரண மக்களால் போக முடியாது. போன் வேலை செய்யாது. அதே நாள் ஸ்டேடியத்தில் சென்ட்ரல் கவர்ண்மெண்ட் ஊழியர்



களின் கலைநிகழ்ச்சி இருந்தது. அதனால் வானொலி நிலையத்தின் அதிகாரிகள் பார்த்தசாரதி உள்பட அங்கே தான் இருப்பார்கள்.

'பரசுராமன்! யூ ஆவர் ரியலி இண்டெலிஜெண்ட்' என்று நினைத்துக் கொண்டான் கிருஷ்ணன் கையிலிருந்த டேப்பைப் பார்த்து.

• • •

ஞாயிற்றுக் கிழமை. இரவு ஏழு ஐம்பது ஆயிற்று. பரசுராமன் ரேடியோவை ஆன் செய்தான். அதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்னாலேயே டியூட்டி ஆபீசருக்கு போன் செய்தான். ரிங் ஆகவில்லை. அதாவது எல்லாம் நினைத்தாற் போலவே நடந்து கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

ஏதாவது பிரச்னை வந்தால் டிரான்ஸ்மிட்டர் இருக்குமிடத்தில்தான் வரவேண்டும். அங்கேயே ஜீப் ஒன்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. சின்ன பிரச்னை ஏற்பட்டாலும் போதும் நம் ஆட்களை ஏற்றிக் கொண்டு வருவதற்கு. ஆனால் எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும் பிரச்னை வர வாய்ப்பு இல்லை.

எட்டு மணிக்கு இன்னும் முப்பது வினாடிகள் இருந்தன. வாத்திய இசை ஒலித்துக் கொண்டிருந்தது.

ஒருக்கால் யாராவது வானொலி நிலையத்திற்கு நேரிடையாக வந்து ரேடியோவில் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும் விஷயத்தைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றாலும் கூட கால்மணி நேரம் ஆகும். அது போதும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு மறுநாள் பேப்பர்களில்

இந்தச் செய்திதான். வெளிநாட்டில்கூட இதுவரை யாருமே இது போல் செய்ததில்லை.

எட்டு மணி அடித்தது. அதுவரை ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த வாத்திய இசை நின்றுவிட்டது. பெண் அறிவிப்பாளரின் குரல், "ஆகாசவாணி சென்னை வானொலி நிலையம். இதுவரை திரு.பாலமுருகன் அவர்களின் வயலின் இசையைக் கேட்டீர்கள். அடுத்த நிகழ்ச்சி சில நொடிகளில்" என்று கேட்டது.

ஒரு வினாடி நிசப்தத்தைத் தொடர்ந்து கிருஷ்ணனின் குரல், "ஆகாசவாணி... வானொலி நிலையம். நம் நேயர்களுக்கு இந்த வாரத்துச் சிறப்பு நிகழ்ச்சியை பிரபல நடிகர் திருமாலன் அவர்கள் வாங்குவார்" என்று கேட்டது.

லைனிலிருந்து ரிகார்டருக்கு மாறிய சத்தம். "நேயர்களுக்கு வணக்கம்." நடிகரின் குரல் ஒலித்தது. "ஏறக்குறைய இருபது வருடங்களுக்கு முன்னால் நான் வெள்ளித்திரை உலகில் காலடி எடுத்து வைத்தேன். அந்த காலத்தில் எங்களுக்கு இப்போது இருப்பது போல் தொழில்நுட்பம் வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. ஆனால் அந்தக் காலத்து நடிகர்களையும், இந்தக் காலத்து நடிகர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால்..."

ரேடியோவை அணைத்துவிட்டு பரசுராமன் எழுந்து கொண்டான். அவன் முகம் சிவந்து விட்டது.

டிரான்ஸ்மிட்டர் டவருக்கு அருகில் இருந்த ஜீப்பை திரும்பி வரச் சொல்லி தகவல் அனுப்பினான். இன்னொரு ஜீப்பை வானொலி நிலையத்திற்கு அனுப்பினான், கிருஷ்ணனை கையோடு ஏற்றிக் கொண்டு வரச்சொல்லி.



கிருஷ்ணன் வருவதற்கு ஐந்து நிமிடம் தாமதமாயிற்று. அங்குமிங்கும் நடை பயின்றபடி பரசுராமன் காத்துக் கொண்டிருந்தான்.

கிருஷ்ணன் வந்ததுமே சீறிப்பாய்ந்தான். இப்படிப்பட்ட இளைஞர்கள் இருப்பதால்தான் நாடு குட்டிச்சுவராகிக் கொண்டிருக்கிறது என்று வாய்க்கு வந்தபடி ஏசினான். கோழைகள் மலிந்து கிடப்பதால்தான் நாட்டில் புரட்சி வருவதில்லை என்று கத்தினான்.

எல்லாவற்றுக்கும் கிருஷ்ணனின் மௌனம்தான் பதிலாக இருந்தது.

"அவ்வளவு தைரியம் இல்லாதவன் இந்தக் காரியத்திற்கு ஒப்புக் கொள்வானேன்?"

கிருஷ்ணன் பதில் சொல்லவில்லை.

"போகட்டும். துணைக்கு யாராவது வேண்டும் என்று சொல்லியிருந்தால் அனுப்பி வைத்திருப்பேன் இல்லையா?"

மௌனம்.

"போன தடவை பாலத்தை தகர்ப்பதற்காக பீரங்கிகளை வைத்த போது யாரோ அது நிறைய சாமந்திப் பூக்களை அடைத்திருந்தார்கள். இந்தத் தடவை இந்த ஆபரேஷன் இப்படி தோல்வி அடைந்து விட்டது. இதையெல்லாம் பார்த்தால் உங்களை நம்பியதே என்னுடைய முட்டாள்தனம் என்று தோன்றுகிறது. மாடிஸம் கொள்கைகளை அமுலாக்குவதற்காக இன்னும் பத்து வருடங்கள் காத்திருக்கணும் என்று நினைக்கிறேன். நாடு இன்னும் சில புத்திசாலி இளைஞர்களை உருவாக்கும் வரையில்

என் செயல்பாடுகளை ஒத்திவைப்பதே மேல் என்று தோன்றுகிறது."

இதற்கும் கிருஷ்ணன் ஒன்றுமே பேசவில்லை.

"இந்த ஆபரேஷனில் எங்கள் நிறுவனத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு தெரியுமா?"

"தொகையைச் சொன்னால் மாதம் இவ்வளவு என்று தந்து விடுகிறேன்" என்றான் கிருஷ்ணன்.

"பண விஷயத்தில் நான் கண்டிப்பானவன். கிட்டி போட்டு வசூலித்துக் கொள்வேன். என் திட்டம்?"

"அதனால் என்ன? திரும்பவும் இன்னொரு தடவை வைத்துக் கொள்ளலாம்."

பரசுராமன் மேலும் எரிந்து விழுந்தான். "இதென்ன கல்யாணம் என்று நினைத்தாயா ஒரு முகூர்த்தம் தவறினால் இன்னொரு முகூர்த்தம் பார்ப்பதற்கு? ஏன் இப்படி செய்தாய்? அதைச் சொல்லு முதலில்?" என்றான்.

"நாம் நினைத்தாற்போல் இந்த திட்டம் முடிந்திருந்தால் முதல் முதலாக குற்றம் ராதையின் மேல்தான் விழும். போலீசார் அவளைத்தான் அரெஸ்ட் செய்வார்கள். அவள் வேலை போய்விடும். அதனால்தான்."

"மாடிஸம் சங்கத்தில் வாக்குத் தவறுவது கூடாது. உன் கல்யாண போட்டோவை பத்திரிகைகளில் போட்டு விடுகிறேன்."

"தேங்க்ஸ் சார். எனக்கு செலவு மிச்சம்."

"வ்வாட்!" கத்திவிட்டான் பரசுராமன்.



"ஆமாம். ராதையை இந்த முறை நிஜமாகவே கல்யாணம் செய்து கொள்ளணும்னு இருக்கேன். நானும் ரொம்ப யோசித்துப் பார்த்துவிட்டேன் பரசுராமன்! என்னதான் மறுத்தாலும் அந்தக் கல்யாணம் என் மனதில் ஏதோ ஒரு மூலையில் முள்ளாக குத்திக் கொண்டே இருக்கிறது. சிநேகமும் ஏற்படணும், அன்பையும் பகிர்ந்து கொள்ளணும் என்றால் கல்யாணம் ஒன்றுதான் வழியாக தென்படுகிறது. கல்யாணம் இல்லாமல் செக்ஸ் என்பது ஏதோ பொழுது போக்கிற்கும், த்ரில்லுக்கும் ஒத்துவருமே தவிர பாசத்தோடு கூடிய நெருக்கத்திற்கு வழிகாட்டாது. ராதையோடு இவ்வளவு இனிமையான அனுபவம் நிகழ்ந்த பிறகு எனக்கு சாதாரண சிநேகம் திருப்தியைத் தரவில்லை. அதற்காக நான் பச்சாதாபத்தில் குன்றிப் போய்க் கொண்டிருக்கிறேன் என்றோ, கல்யாணம் ஆனதும் நேர்மையின் மறுஉருவமாக இருப்பேன் என்றோ சொல்லவில்லை. தற்சமயம் மட்டும் ராதையைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் என்னால் இருக்க முடியாது என்று தோன்றுகிறது. அப்பாவியான அவள் முகம்தான் அடிக்கடி நினைவுக்கு வருகிறது. அதைத்தான் காதல் என்பார்களோ என்னவோ" என்று நிறுத்தினான் கிருஷ்ணன்.

ரொம்ப நேரம் பரசுராமன் பேசவில்லை. பிறகு சொன்னான். "எல்லாம் முடிந்த பிறகு இப்போ காதல் எதுக்கு? என்ன சுகம் புதிதாக கிடைக்கப் போகிறது?"

"மிஸ்டர் பரசுராமன்? ஏற்கனவே நாங்க நாலு பேரும் காதலைப் பற்றி நாலு விதமான தியரிக்களை உருவாக்கி விட்டோம். நீங்கள் ஐந்தாவது தியரியைச் சொல்லாதீங்க

நான் எப்படியோ பார்த்துக் கொள்கிறேன். கடைசியாக ஒரு கேள்வி. நான் உங்களுடைய காரியத்தை முடிக்கவில்லை என்பதற்காக எங்களுக்கு தீங்கு செய்ய மாட்டீங்களே?"

"மாடிஸத்திற்கு பிறரை துன்புறுத்துவதில் நம்பிக்கை இல்லை."

"ரொம்ப தாங்க்ஸ்."

"உன் மனைவியைக் கூட எங்கள் நிறுவனத்தில் சேர்த்துவிடு."

"முடியாது சார். இன்னும் இரண்டு மாதங்களில் மெடர்னிடி லீவ் போட்டு விடுவாள். அதற்குப் பிறகு எப்படியும் குழந்தையைப் பார்த்துக் கொள்ளத்தான் நேரம் சரியாக இருக்கும்."

பரசுராமன் முதல் முறையாக ஆச்சரியமடைந்து "பலே கெட்டிக்காரன்தான்" என்றான்.

கிருஷ்ணன் வெட்கத்துடன் "அதுதானே சார் இந்த கதையை சுபமாக முடித்திருக்கிறது" என்றான்.

* * *

இது நடந்த நான்கு நாட்களுக்கெல்லாம் ஜெயா வேலையை ராஜினாமா செய்துவிட்டாள்.

அந்த விஷயம் அதற்கு முன்பே அரசல்புரசலாக தெரிந்திருப்பதால் சாரதி ஆச்சரியமடைந்து விடவில்லை. கொஞ்சம் வருத்தத்தோடு, "எதுக்கு ஜெயா? ராஜினாமா கொடுப்பானேன்?" என்றான்.



"அங்கே சம்பளம் இதை விட அதிகமாக கொடுக்கிறாங்க சார்" என்றாள் சிரிக்க முயற்சி செய்து கொண்டே.

அவன் சிரிக்கவில்லை. நிமிர்ந்து நேராக பார்த்தான். அவள் தலையைக் குனிந்து கொண்டாள். இருவருக்குமே தெரியும் உண்மையான காரணம் என்னவென்று.

அவள் எழுந்து கொண்டாள்.

"பெஸ்ட் ஆஃப் லக் ஜெயா."

"தாங்க்யூ சார்."

அவன் வாழ்க்கையிலிருந்தே போய்விடுவதுபோல் அவள் வெளியே நடந்தாள். அவனும் எழுந்து ஜன்னலுக்கு அருகில் வந்து நின்றான். அவள் நடந்து போய்க் கொண்டிருப்பது தென்பட்டது. மெல்ல மெல்ல கண் பார்வையிலிருந்து மறைந்து போனாள்.

அவன் ரொம்ப நேரம் அப்படியே சூனியத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். பிறகு அறையை விட்டு வெளியே வந்தான்.

பக்கத்திலேயே அசிஸ்டெண்ட் டைரக்டரின் ரூம். அவர் இந்த வருடம் ரிடையர் ஆகிறார். இருபதாண்டுகளுக்குப் பிறகு அவனும் ரிடையராகி விடுவான். வானொலி மட்டும் தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்கும்.

சிலர் அந்த நிறுவனத்தை சீர்திருத்துவதற்காக பாடுபட்டுக் கொண்டே இருப்பார்கள். வேறு சிலர் அலட்சியமாக நடந்து கொள்வார்கள். வாழ்க்கையில் வருவது

போல் அதில் பலவிதமான மனிதர்கள் வந்து கொண்டிருப்பார்கள். தங்களுடைய அபிப்பிராயங்களை வெளிப்படுத்தி விட்டுப் போய்க் கொண்டே இருப்பார்கள். காமெடி டிராஜெடி... ஹாஸ்யம்... துக்கம் எல்லாமே.

அவன் பக்கத்திலிருந்த ரூம் அருகில் நின்றான். யாரோ புதுப் பெண் டேப்போடு குஸ்தி போட்டுக் கொண்டிருந்தாள்.

"என்ன செய்யணும்?"

திடீரென்று கேட்ட கேள்வியால் அந்தப் பெண் திடுக்கிட்டு பார்த்துவிட்டு மிரட்சியுடன், "ஒரு நாடகத்தை டேப் செய்யணும் சார்" என்றாள்.

அவன் டேப்பை உள்ளே பொருத்திக் கொண்டே, "என்ன டேப் இது?" என்று கேட்டான்.

"காவ்ய சாகுந்தலம்."

"நீ பதிவு செய்யப் போவது?"

"வரூதினி பிரவராக்கியம்."

அவன் ரிவைண்ட் பட்டனை அழுத்தினான். பழைய நினைவுகளை அழிப்பதற்காக டேப் பின்னால் சுழன்று கொண்டிருந்தது. வாழ்க்கை அல்ல அது. வெறும் டேப். அதான் சுலபமாக பின்னால் சுழன்று கொண்டிருந்தது.

—நிறைந்தது—